
ஜராவர் சீதாராமன்
காசுக் கடவுள்


மின்நூல் உருவாக்கம்
சுபாஷ் சண்முகா

# காசே கடவுள்!

ஜாவர் சீதாராமன்

ஸ்ரீ துர்கா பப்ளிகேஷன்ஸ்
22, எம்.ஜே.பி. தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005

# பதிப்புரை

எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று நினைப்பவர் பலர்; இப்படித்தான் வாழ வேண்டும் என்று நினைப்பவர் சிலர். அந்தச் சிலருள் ஒருவராகத் திகழ்ந்தவர் 'ஜாவர்' சீதாராமன் அவர்கள். அவர் நமக்கு அளித்துச் சென்ற கதைகளின் எண்ணிக்கை மிகக் குறைவு. ஆனால் அந்த ஒரு சில நாவல்கள் நம்மிடையே மறக்காமல், மறையாமல் இன்றும் நிலவி வருகிறது. அதற்குக் காரணம் அந்தக் கதையின் தரம்தான். எவ்வளவு பெரிய கதையாக இருந்தாலும் பக்கத்திற்குப் பக்கம், ஏன் வரிகளுக்கு வரி விறுவிறுப்பைத் தருகிறது. இப்படிப்பட்ட கதைகளை ஒரு சிலரால்தான் எழுத முடியும். இவை காலத்தால் அழியாத பொக்கிஷங்கள் எனலாம்.

இந்த அருமையான நூல்களை எங்கள் மூலம் வாசகர்களுக்குக் கிடைக்கச் செய்த திரு. எம். ஆர் நாராயணன் அவர்களுக்கும், ஜாவர் சீதாராமன் அவர்களின் குமாரர் திரு எஸ். நீலகண்டன் அவர்களுக்கும் நாங்கள் வாசகர்கள் சார்பில் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—பதிப்பகத்தார்

## நூற்றாண்டை நோக்கி...

"தமிழில் நல்ல நூல்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸ ஸ்தாபகர் ஸ்ரீ. வி. குப்புசாமி ஐயரை நான் பாராட்டுகின்றேன்."

—மகாத்மா காந்தி

"நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளையும், பல நாடகங்களையும், பல மொழி பெயர்ப்புக்களையும், இன்னும் பல விஷயங்களையும் எளிய அழகிய நடையில் வெளியிட்டு வரும் அல்லயன்ஸாரை நான் பாராட்டுகின்றேன்."

—மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்

"Books published by Alliance Company are highly popular Books."

— Rt. Hon'ble V. S. Srinivasa Sastri

"தமிழில் அழகிய புத்தகங்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸாருக்கு நன்றி செலுத்தி அவர்களைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுகிறேன்."

— ராஜாஜி

"அல்லயன்ஸ் கம்பெனியார் நல்ல நூல்களை வெளியிடுவதில் தேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தமிழ் நாட்டார் தக்க ஊக்கம் தர வேண்டும் என விரும்புகிறேன்."

—சத்தியமூர்த்தி

"மயிலை அல்லயன்ஸ் கம்பெனியாரின் வெளியீட்டுத் திறத்தை ஈண்டு விரித்துக் கூற வேண்டியதில்லை, அதை நாடறியும். அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப் பெற்ற நூல்கள் யாவும் தமிழ்நாட்டுக்குப் பலவழிகளிலும் பயன் விளைத்து வருவது கண்கூடு. நாட்டு நலங் கருதி ஒழுங்கு முறையில் உழைக்கும் அவர்களுக்கு நாடு கடமைப் படுவதாக."

திரு. வி. க.

## இந்நூலாசிரியரைப்பற்றி...



'கரணம் தப்பினால் மரணம்' என்று சொல்லுவார்கள். ''மரணம் தப்பினால் மண்டையாவது உடையும்; காலாவது முறியும்; அல்லது பல்லாவது உடையும்'' என்று சேர்த்துச் சொல்லவும் முடியும். ஆனால் இந்த ஆபத்து எதுவுமே இல்லாமல் ஒருவர் 'கரணம் போட்டுத் தப்பினார்' என்றால் அது மிக ஆச்சரியந்தானே!

''ஏழை படும்பாடு'' படத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜாவரின் பாத்திரத்தை ஏற்று அமரத்துவம் பொருந்திய, அந்த சீதாராமன் 'இந்தியன் சிவில் சர்வீஸ்' (ICS) பரீட்சையில் தேறி, கலெக்டராக ஆகிவிட வேண்டும் என்று ஆசை கொண்டார். அதன்படி பரீட்சையும் எழுதினார். ஆனால் சர்க்காரின் துரதிருஷ்ட வசமாய்—ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேற வில்லை. அதுகுறித்து சிறிதும் வருந்தாது சினிமா உலகில் பிரவேசித்து விட்டார்.

சினிமா உலகில் பிரவேசித்த பின்னர் அவருக்கு வெற்றிமேல் வெற்றி; புகழுக்குமேல் புகழ்தான். இந்தியன் சிவில் சர்வீஸிற்கும், இந்தியன் சினிமா சர்வீஸிற்கும் முதல் எழுத்துக்கள் (ஐ.ஸி எஸ்.) விஷயத்தில் பூரண ஒற்றுமை இருந்த போதிலும் புகழ் விஷயத்தில் எவ்வளவு வேற்றுமை பார்த்தீர்களா?

இவர் சினிமா உலகில் பிரவேசித்ததே ஒரு எதிர் பாராத சம்பவம்தான் காரணம். ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேர்வு பெறாத இவர் எந்தத் தொழிலில் நுழையலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, ஒரு நாள் ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாசன் அவர்களைப் பார்க்கச் சென்றார். சினிமா உலகில் நுழைய வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் அங்கு செல்ல வில்லை. ஏதோ காரணமில்லாத ஆவல்தான் அவரை இழுத்துச் சென்றது.

ஜாவர் சீதாராமன் அவர்கள் பேச்சும், பாவனையும் நடையும் வாசன் அவர்களைக் கவர்ந்தது. இருவருக்கும் பேச்சு ஆரம்பமாயிற்று. சினிமா உலகைப் பற்றியும், படங்களைப் பற்றியும் சீதாராமன் தன் அபிப்பிராயங் களை அள்ளி வீசினார். ''ஜெமினி படங்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று திரு. வாசன் கேட்டார். உடனே இவர் தாக்கு தாக்கு என்று தாக்கி, தன் அபிப்பிராயங்களைத் தைரியமாக வெளியிட்டார்.

இதற்காக வாசன், அவரைக் கோபித்துக்கொள்ள வில்லை. பெரிய மனிதரின் சுபாவம்! அதற்குப் பதில் அவர், ''இவ்வளவு தூரம் நீங்கள் பேசுகிறீர்களே, உங்களால் நடிக்க முடியுமா? சொல்லுங்கள்'' என்று கேட்டார்.

''ஏன் முடியாது? தாராளமாய் முடியும்'' என்று அழுத்தமாகப் பதில் அளித்தார் சீதாராமன்.

''அப்படியானால் அதையும்தான் பார்த்து விடலாமே; உங்கள் விலாசத்தைக் கொடுத்துவிட்டுப் போங்கள். கூடிய சீக்கிரத்தில் உங்களுக்குச் சொல்லி அனுப்புகிறேன்'' என்று கூறினார் வாசன்.

ஆனால் இவர் சினிமாவில் சேருவதை உற்றார், உறவினர், நண்பர்கள் எவரும் விரும்பவில்லை. ஆனால்

திரு. வாசன் அவர்களிடமிருந்து அழைப்பு வந்ததும், ''எப்படியானாலும் சரி சினிமாவில் சேர்ந்து விடுவது'' என்று அவர் சென்னைக்குப் புறப்பட்டார்.

தன் அழைப்பின் பேரில் சென்னைக்கு வந்த சீதாராமனுக்கு ''மிஸ் மாலினி'' படத்தில் நாடக டைரக்டராக நடிக்கும் சந்தர்ப்பத்தைக் கொடுத்தார். இவர் இந்தப் படத்தில் மிகவும் அபாரமாக நடித்து, நடிப்பு என்பதை விட நிஜமாகவே எல்லாம் நடப்பதுபோல் தத்ரூபமாய் நடித்துக் காட்டினார். பிறகு இவர் சந்திரலேகா, ஏழை படும் பாடு போன்ற படங்களில் நடித்தார்.

'ஏழை படும் பாடு' சீதாராமனை ஒரு உன்னத நடிகரென்று ஊர்ஜிதம் செய்து வைத்தது. அதில் இவர் 'ஜாவர்' பாத்திரத்தில் திறம்பட நடித்ததால் இவருக்கு இப்பெயரே நிலைத்து விட்டது. பிறகு, அவருக்குப் பட உலகில் கிராக்கி அதிகரித்து விட்டது.

இவர் சினிமா உலகில் படத்தின் மூலமே பிரகாசிக்கத் தொடங்கியதற்குக் காரணம், பள்ளிக்கூட நாடகங்களில் நடித்தும், மேடையில் பிரசங்கம், பேச்சுப் போட்டி இவைகளில் நிறைய அநுபவம் பெற்றிருந்ததுதான் என்று கூறலாம்.

திருச்சி ஜில்லாவிலுள்ள அழகிய மணவாளன் கிராமத்தில் 1920-ல் ஜூலை மாதம் 6ஆம் தேதி பிறந்தார். ஆரம்பத்தில் படித்தது கோயம்புத்தூரிலுள்ள சர்வ ஜன ஹைஸ்கூலில்தான். இப்பள்ளியின் ஹெட் மாஸ்டராயிருந்த ஸ்ரீ. ஆர். ஸ்ரீநிவாச ஐயங்கார் சீதாராமனிடம் மிகப் பிரியம் கொண்டிருந்தார். நாடகங்களில் இவரை நடிக்கத் தூண்டி உற்சாக மூட்டியவர் அவர்தான். பள்ளிப் பிரசங்கங்களிலும், போட்டியிலும் இவர் முதன்மையாக நின்று கப்கள், மெடல்கள் முதலியவைகளைப் பெற்றிருக்கிறார். 1940-ல் சர்வகலாசாலை சங்க விவாதத்திலும், 1941-ல் கஸ்தூரிரங்கய்யங்கார்

ஞாபகார்த்தப் பிரசங்கப் போட்டியிலும், 1956-ல் சட்டக் கல்லூரி பிரசங்கப் போட்டியிலும் முதன்மையாக நின்று அவர் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்.

சர்வ ஜன ஹைஸ்கூலில் எஸ். எஸ். எல் ஸி. யை முடித்துக் கொண்டு, திருச்சி நாஷனல் காலேஜில் இன்டர் மீடியட்டை முடித்து, செயின்ட் ஜோசப் கல்லூரியில் பி. ஏ. ஹானர்ஸ் பாஸ் செய்தார். அவர் தேசியக் கல்லூரி யில் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். இதன் பின் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி. எல். பட்டமும் பெற்றார்.

படிப்பிலும் நடிப்பிலும் தேர்ந்த சீதாராமன் எழுது வதிலும் திறமையுடையவர். பத்திரிகைகளில் ''கௌசி'' என்ற புனைப் பெயரில் பல சிறுகதைகளை எழுதியிருக் கிறார். திரைப்படங்களுக்குப் பல நல்ல கதைகளை எழுதி யுள்ளார். இவர் பணம் - பெண் - பாசம், நானே நான், சொர்க்கத்தில் புயல், மின்னல் - மழை - மோகினி, உடல் - பொருள் - ஆனந்தி போன்ற கதைகளைப் பத்திரிகைகளில் தொடராக எழுதினார். இவர் திரைக் கதையைத் தவிர வசனம் டைரக்ஷன் போன்ற பொறுப்புகளையும் திறம்பட செயலாற்றியுள்ளார்.

இப்படிச் சகலகலா வல்லவனாகத் திகழ்ந்த இவர் 1969 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29 - ம் தேதி இவ் வுலக வாழ்வை நீத்தார். அவர் மறைந்தாலும் அவருடைய புகழும் எழுத்துக்களும் நம்மிடையே இன்றும் நிலவி வருகிறது.

# காசே கடவுள்!

## காட்சி—1

### வீதி

[மரகதம் தெரு வழியாக வந்து கொண்டிருக்கிறாள். அவளுடைய வேலைக்காரன் ஒரு பெட்டியையும் படுக்கையையும் எடுத்துக் கொண்டு வருகிறான். எதிரிலிருந்து நிர்மலா ஆண் உடையில் சைக்கிளில் வருகிறாள். சைக்கிள் மரகதத்தை நெருங்கி விடுகிறது. மரகதம் பயந்து இப்படியும் அப்படியும் ஓடுகிறாள். நிர்மலாவும் சைக்கிளை நிறுத்த முடியாமல் திணறுகிறாள். வேலைக்காரனும் பயத்தால் பெட்டி, படுக்கையைக் கீழே போட்டு விடுகிறான். சைக்கிளைப் பிரேக் போட்டு நிறுத்துகிறாள் நிர்மலா. மரகதம், நிர்மலா கீழே விழுந்து விடுகிறார்கள்]

நிர்மலா :- சே...சே சுத்த கண்ட்ரி ப்ரூட். ரோட்ல இப்படியா மாடு அசை போட்டுக்கிட்டு நடக்கற மாதிரி நடந்து வரது. கொஞ்சமாவது "ரோட்" சென்ஸ் வேண்டாம். 'புட் பாத்' எதுக்குக் கட்டி வச்சிருக்குன்னு நெனச்சீங்க...அப்பாடா நல்ல வேளையாப் போச்சு. நான் மட்டும் பிரேக் போடாம இருந்து இருந்தா என்ன ஆயிருக்கும்?

மரகதம் :- யாருக்கு என்ன நடந்திருக்கும். ஒன் காலை முறிச்சுப் போட்டிருப்பேன்ய்யா [என்று சொல்லிக் கொண்டே புடவையைக் கட்டிக் கொண்டே அக்கா எழுந்திருக்கிறாள்]

நிர்மலா :- ஐயாவுமில்லே ... அப்பாவுமில்லே. நானும் ஒங்களைப்போல ஒரு பொம்பளைதான்.

மரகதம் :- அடிப்பாவி, பொம்பளையா! ஏம்மா எங்கயாச்சும் சர்க்கஸ்ல வேல பாக்கறதுதானே.

நிர்மலா :- ஏன் நீங்க எதாவது சர்க்கஸ் கம்பெனி நடத்துறீங்களா?

மரகதம் :- இல்ல... அந்தக் காலத்துக்கு ஒரு ஜான்ஸி ராணி இருந்த மாதிரி, இந்தக் காலத்துக்கு நீ ஒரு சைக்கிள் மோகினியாம்மா...?

நிர்மலா :- ஆமா, நான் ஜான்ஸி ராணிதான் இருக்கட்டும். நீங்க என்ன கலிகாலத்து தாடகை அவதாரமா.

அக்கா :- அதிகப் பிரசங்கி. இப்பவேதான் படிச்ச பெண்ணைப் பார்த்தா பட்டம் வாங்கின பையங் கூட காத்தடிச்ச இலவம் பஞ்சா பறக்கிறாங்க... உன்னைப் பார்த்தாங்கன்னா ஊரை விட்டே ஓடிடுவாங்க.

நிர்மலா :- ஆமா என்னைப் பார்த்து ஊரை விட்டு ஓடின பசங்க ஊருக்கு வெளில உங்களைப் பார்த்தாங்

கன்னா திருப்பி ஊருக்குள்ள ஓடி வந்திடுவாங்க... ஐய்யய்யோ இன்னிக்கு வீட்டை விட்டு நல்ல நேரத்தில கிளம்பலப் போலிருக்கே கஷ்ட காலம்.

மரகதம் :- நான் சொல்ல வேண்டியதை நீ சொல்லிட்டையே ஏம்மா உனக்குக் கட்டுக் காவல் ஒண்ணும் கிடையாதோ...?

நிர்மலா :- கட்டுக் காவல்ல வாழற கன்னி மாடத்துப் பெண் இல்ல நான். தட்டிக் கேட்டா முட்டித் தள்ளிடுவேன்.

வேலைக்காரன் :- அது தான் எங்க அம்மா கிட்ட நடக்காது. கிராமத்து ஜல்லிக் கட்டுல எவ்வளவு முரட்டுக் காளையா யிருந்தாலும் அக்காக்கிட்ட மிரண்டுதான் நிக்கணும்.

நிர்மலா :- ஹூம்...நிக்கும் ...உங்க ஊர் காளை நிற்கலாம். ஆனா இந்த ஊரிலே நடக்காது.

வேலைக்காரன் :- என்னம்மா பார்த்துக்கிட்டே நிக்கறீங்களே, பெரிய அய்யா ஒரு பொடி மட்டைக்காகப் பணம் வாங்க மணிக்கணக்கா காத்துக்கிட்டு நிப்பாரு...இந்த நேத்துக் குட்டி உங்களைத் தூக்கி எறிஞ்சுல்ல பேசுது...

அக்கா :- நான் யாருன்னு அவளுக்குத் தெரியாது... சொல்லுடா (என்று சொல்லிக் கொண்டே வேலைக்காரனின் இடுப்பில் குடையால் குத்துகிறாள்.)

வேலைக்காரன் :- கள்ளி பட்டில.

நிர்மலா :- (யோசித்துக் கொண்டு) கள்ளிப் பட்டி.

வேலைக்காரன் :- பார்த்தீங்களா ... ஊர் பேர் சொன்ன உடனேயே அரண்டுட்டது.

நிர்மலா :- கள்ளிப் பட்டியானாலும் சரி, கள்ளிப் பெட்டியானாலும் சரி, எனக்கு அக்கறையில்லே.

**வேலைக்காரன் :-** இப்படித்தான் அம்மா சொன்னான் எங்க ஊர் மேலத் தெரு கருப்பனும். அம்மா விஸ்வ ரூபம் எடுத்தாங்க. அப்படியே வேத்து வெல வெலத்துப் போயிட்டான்.

**நிர்மலா :-** சரி சரி வழியை விடு, நான் போகணும்.

**அக்கா :-** வழியை விடமாட்டேன். மொதல்ல ஒன் பேர், நீ எங்க தங்கறே எல்லா விபரத்தையும் கொடு.

**நிர்மலா :-** எதுக்குக் கேக்கறீங்க.

**வேலைக்காரன் :-** என்னம்மா கொழந்தை மாதிரி கேக்கறீங்களே. அக்கா கேட்டாங்கன்னா போலீசுக்குத் தகவல் கொடுக்கத்தான்.

**நிர்மலா :-** கொடுக்க மறுத்தால்.

**அக்கா :-** அவளோட என்னடா பேச்சு. நம்பரைக் குறிச்சுக்கோடா.

**வேலைக்காரன் :-** பேப்பர் பென்சல் கொண்டு வரல்லீங்களே.

**நிர்மலா :-** அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம் இதோ என்கிட்ட இருக்கு. நானே குறிச்சுத் தரேன் (என்று ஒரு பேப்பரில் எதையோ கிறுக்கி அக்காவின் முகத்தில் பேப்பரை வீசுகிறாள். பிறகு சைக்கிளைத் தள்ளிக்கொண்டு போகிறாள்)

**அக்கா :-** என்ன துணிச்சல்?

**வேலைக்காரன் :-** (சிரிக்கிறான்)

**அக்கா :-** எனக்கு நேர்ந்த அவமானத்தைப் பார்த்து சிரிக்கிறயாடா? கன்னத்துல போட்டுண்டு போடுடா தோப்புக் கரணம்.

**வேலைக்காரன் :-** என்னங்க நடு ரோடிலயா. யாராவது பார்த்தா எதாவது...

**அக்கா :-** போடுடான்னா போடணும்.

**வேலைக்காரன்:-** அட! எனக்காகச் சொல்லலைம்மா. நான் தோப்புக் கரணம் போடறதைப் பார்த்து உங்களை யாராவது புள்ளையாருன்னு நினைச்சுட்டா?

**அக்கா :-** அதிகப் பிரசங்கி, போடுடா தோப்புக் கரணம்னா.

**வேலைக்காரன் :-** இதோ போட்டுட்டேன்ம்மா. (என்று சொல்லிக்கொண்டே படக் படக் என தோப்புக் கரணம் போடுகிறான். இதற்குள் அங்கு சிறிய கூட்டம் கூடி விடுகிறது.)

**அக்கா :-** போதும்டா நிறுத்து. ரவியைப் பார்க்கப் போக வேண்டாம்.

**வேலைக்காரன் :-** என்னம்மா இப்பத்தான் ஆடியன்ஸ் வந்திருக்காங்க. அதுக்குள்ள ஆட்டத்தை நிறுத்தச் சொல்றீங்களே.

**அக்கா :-** போறும்டா ... உதவாக்கரை ரவியைப் பார்க்க வந்தோமா...தெருவில ஆட்டம் ஆட வந்தோமா? வந்தவுடனேயே சகுனம் சரியாஇல்லே. இன்னும் என்னன்ன நடக்கப் போறதோ.

[என்று சொல்லிக் கொண்டே கம்பீரமாக மேடையின் ஒரு புறத்திலிருந்து இன்னொரு புறமாகப் போகிறாள். அவளுக்குப் பின் புறமாகவே வேலைக்காரன் அதே பாவனையில் போகிறான். இதைப் பார்த்துக் கூட்டத்தில் ஒருவனும் அதே போல் வேலைக்காரன் பின் போகிறான்.]

காட்சி—2

## ரவியின் அறை

**அக்கா:-** ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து நம்மைக் கூட்டிக் கிட்டு வரவனா இப்படித் தூங்கறான்?

**வேலைக்காரன் :-** அவங்க மேல தப்பு இல்லை. இதோ அலாரம் கூட வச்சிருக்காங்க போல இருக்கு. அது வேல செய்யல்லை.

**அக்கா :-** அது உன் மூளை மாதிரி போல இருக்கு. சமயத்துல வேல செய்யாது. (இருவரும் இப்படிப் பேசிக் கொண்டே இருக்கும் போது ராம் தூங்கிய படி மறுபடியும் அலாரத்தைத் திருப்பி வைக்கிறான். அலாரம் அடிக்கிறது)

**வேலைக்காரன் :-** இதோ பாருங்க வேலை செய்யுது.

**அக்கா :-** போறும்டா எழுப்புடா அவங்களை.

**ரவி :-** (எழுந்து) அடடே! அக்கா வந்துட்டிங்களா. மொதல் டிரெயின்லேயே வந்துட்டீங்க போல இருக்கு.

**அக்கா :-** அது யாருடா அது. கட்டிலுக்குக் கீழே, அவலட்சணம்.

**ரவி :** ஏய் ராம், எழுந்திருடா.

[ராம் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந் திருக்கிறான். திகைக்கிறான். கடைசியில் பெட்ஷீட்டை வேஷ்டியாகக் கட்டிக் கொள் கிறான்]

**ராம் :-** அக்கா வந்துட்டீங்களா

**அக்கா :-** இதென்னடாது பெட்ஷீட்டை இடுப்பில கட்டிக்கிட்டே.

ராம் :- இப்பெல்லாம் மெட்ராஸ்ல இதான் பாஷன். காலையில் ஹூம்! நாங்க வர்ரதாகத்தான் அலார மெல்லாம் வச்சோம். ராத்திரி படுக்கறப்போ ரொம்ப நேரமாயிடுத்து.

அக்கா :- ஏன் நேரமாச்சு? ஊர் சுத்தினிங்களோ?

ராம் :- ஹூம்! அதெல்லாம் ஒண்ணுமில்லே. நாடகத் துக்குப் போயிருந்தோம்.

அக்கா :- பட்டணத்துக்கு வந்தது நாடகம் பார்க் கத்தானா.

ராம் :- தெனமும் யார் பார்க்கறாங்க. வாரத்துல நாலு தடவை.

அக்கா :- நீ கோடீஸ்வரன் புள்ளை. இடுப்பில பெட்ஷீட்டையும் கட்டிப்பே, வாரத்துல நாலு நாடகமும் பார்க்கலாம். ஒனக்குத் தாங்கும். போரோட தின்னாலும் பத்துத் தலைமுறைக்குத் தாங்கும் ஒங்க அப்பா வச்சிருக்கிறச் சொத்து. சரி, சரி.

[டேய் சரவணம் என்று கூப்பிட்டுக்கொண்டே மேடையின் ஒரு மூலைக்குப் போகிறாள் அக்கா. ராமுவும் ரவியும் மைக் அருகே நெருங்கி]

ரவி :- ஏய் இந்தப் பெட்ஷீட்டை எடுத்து எறிடா.

ராம் :- அதை எடுக்க முடியாதுடா வேட்டியைக் காணோம்.

ரவி :- போடா போ. உள்ள போய் வேறே மாத்திட்டு வாடா.

ராம் :- வேட்டி கட்டிலுக்கு அடியில இருக்குடா

[ரவி கட்டிலுக்கு அடியிலிருக்கும் ஓர் வேட்டியை எடுத்து ராமிடம் போடுகிறான்.

ராம் அதை எடுத்துக்கொண்டு சைட் கர்ட்டன் வழியாகப் போகிறான். அக்கா கூடை ஒன்றை எடுத்துக் கொண்டு வருகிறாள்]

**அக்கா :-** ரவி ஒனக்குக் கொஞ்சம்கூடப் பொறுப்பே தெரியல்லை. ஊர்ல எனக்கு இருக்கிற கௌரவத்துக்குத் தகுந்தபடி நடந்துக்க வேண்டாம்.

**ரவி :-** இப்ப என்ன தவறு பண்ணிட்டேன். திருடினேனா, வெரண்டினேனா.

**அக்கா :-** இன்னும் அது வேற செய்யணுமா. நமக்குக் கொஞ்சம் பணம் இருக்கு. அதை வச்சிக்கிட்டு மணக்க செய்யலாம். அதை வச்சுக்கிட்டு ஒரு டிஸ்டிரிக்ட் போர்ட் எலக்ஷனுக்கு நின்னோம், நாலு பெரிய மனுஷங்களோட பழகினோம், பெரிய பதவிக்கு வந்தோம்னு எதாவது சுறுசுறுப்பா செய்யாம இப்படியே அந்தக் கோடீஸ்வரன் பிள்ளையோடயே சுத்திக்கிட்டு இருந்தா...என்ன பிரயோசனம்? எங் கணவரை எவ்வளவோ சொல்லி திருத்தி ஒரு ஆளாக்கணும்னு பார்த்தேன். அதுகுள்ளாற அவர் காலமாயிட்டாரு.

**ராம் :-** (வந்து கொண்டே) ஒங்க முயற்சிகளினாலேயே தான் அவரு கால மாயிட்டார்ராமே.

**அக்கா :-** ஒனக்கென்னடா ஒரே பிள்ளை. என்ன வேணும்னாலும் பேசுவே.

**ராம் :-** அது என்ன கூடையில.

**அக்கா :-** ஒண்ணுமில்லே, கோவா. ரவிக்குப் பிடிக்குமேன்னு.

**ராம் :-** ஏன் எனக்குப் பிடிக்காதோ? ரவிதான் இங்கே ஒரு மாம்பழத்தைக் கடிக்கவும் முடியாம முழுங்கவும் முடியாம திண்டாடிக்கிட்டு இருக்கானே.

அக்கா :- என்னடா புதிராப் பேசறே.

ரவி :- ஏய் ராம் சும்மாயிருடா.

ராம் :- நான் சும்மா இருந்தா அப்புறம் ஒனக்கு வினாயகருக்கு கல்யாணம் ஆறபோதுதான் கல்யாண மாகும். அக்கா! தளதளன்னு...பளபளன்னு ஒரு பொண்ணை நம்ம ரவி ஐடியா பண்ணியிருக்கான்.

அக்கா :- அதென்னடா பொண்ணை ஐடியா பண்றது.

ராம் :- பொண்ணை ஐடியா பண்றதுன்னா அக்கா நீங்கதான் பொண்ணுன்னு வச்சுக்கோங்களேன். நான்தான் உங்களை ஐடியா பண்றதுன்னு வச்சுக் கோங்களேன். நீங்க இல்லாதப்பல்லாம் நான் உங்களை நெனச்சுக்கிட்டுச் சிரிப்பேன். பாத்ரூம்ல பாட ஆரம்பிப்பேன். சும்மாத் தலையைச் சீவுவேன். உங்களைத்தெருவில எங்கையாவது நான் சைக்கிள்ல போறபோது பார்த்தேன்னா சைக்கிளை ரொம்ப வேகமா அழுத்துவேன்.

சரவணம்:- அம்மா அந்தச் சைக்கிளால தகறாரு செய்த பொண்ணு ஒரு வேளை ஒங்களைத்தான் ஐடியா செய்திருக்குமோ.

ராம் :- சும்மாயிருடா! நாக்கு சுளுக்கிக்கப் போறது. நம்ம ரவி நிர்மலான்னு ஒரு பெண்ணை...

அக்கா :- காதலிக்கறானாக்கும். நாங்கள்ளாம் கல்யாணம் பண்ணிக்கிடலை-காதல்தான் பண்ணிக் கிட்டு இருந்தோமா.

ராம் :- ஒங்க விஷயமே வேற அக்கா. ஒங்க காலத்துல நீங்க உங்க கணவரை நிமிர்ந்து பாத்திருக்கீங்களா?

அக்கா :- கிடையவே கிடையாது.

ராம் :- நீங்க பாத்ததெல்லாம் அவர் பையில இருந்த "பாங்க்" பாஸ் புஸ்தகத்லதத் தானே.

அக்கா :- அதலால் என்ன கொறஞ்சு போச்சாம். சொத்து விருத்தி அடைஞ்சிருக்கு.

ராம் :- சொத்துத்தான் விருத்தி அடஞ்சிருக்கு. ஐயா காலி ஆயிட்டாரே.

அக்கா :- போறும்டா. (பிறகு ரவியைப் பார்த்து) ஏண்டா இந்த ஒதவாக் கரையைப் பேச விட்டுட்டுப் பிரமிச்சு நிக்கறயே, எதாவது சொல்லேன்.

சரவணம் :- ரவி அவுங்க ஐயா மாதிரி சாதுங்க.

ராம் :- அதனாலதான் அவரு ஒங்க யஜமானி அம்மா மாதிரியே ஒரு பெண்ணைத் தேடிக்கிட்டு இருக்காரு.

அக்கா :- ரவி அது யாருடா நிர்மலா?

ரவி :- ஹ...ஹ நிர்மலா...வந்து ஒரு நல்ல இடத்துப் பொண்ணு.

ராம்:- அவனைக் கேட்டீங்கன்னா ஒருமணி நேரத்துக்கு நம்ப அசம்பளி மெம்பர்கள் மாதிரி எதாவது உளறிக் கிட்டே இருப்பான். நீங்க வந்ததிலேயிருந்து அவன் நிலை...கொஞ்சம் ஆடிப்போயிருக்கு. என்னைக் கேளுங்க சொல்றேன். நிர்மலாங்கற பொண்ணுக்குத் தாய் தகப்பன் இல்லை. உங்களுக்குச் சம்பந்திங்கிற தொந்தரவு கிடையாது. இது அட்வாண்டேஜ் நெ-1.

அக்கா :- அனாதைப் பெண்ணா?

ராம் :- சொத்துள்ள அனாதை. அந்தச் சொத்தையும் அந்தப் பெண்ணையும் இப்ப வச்சு பரிபாலிக்கிறது பர்மா சர்மாங்கிற அந்தப் பெண்ணோட சித்தப்பா.

அக்கா :- யாரது, பர்மா சர்மாவா. இப்பல்ல ஞாபகம் வரது. அவன் பெரிய தகல் பாஜியாச்சே.

ராம் :- உங்களுக்குத் தெரியுமா அவரை.

அக்கா :- தெரியுமாவா...ஒரு தரம் நான் கும்ப கோணத்திலிருந்து வந்துண்டிருந்தப்போ ஸெகண்ட் கிளாஸ் கம்பார்ட்மெண்டில் டிக்கட் இல்லாம ஏறிட்டான். டிக்கட் இல்லாம வண்டியில ஏறினது மில்லாம வண்டியில் fan சுத்தலை, லைட் வரல் லேன்னு நிர்த்துளி பண்ணிட்டான். இந்தச் சந்தடி யில அவன் கிட்ட யாரும் டிக்கெட்டே கேக்கலை. அவன் சம்பந்தம் நமக்கு வேண்டவே வேண்டாம்.

ரவி :- சர்மா எப்படி வேணா இருக்கட்டும் அக்கா. அந்தப் பொண்ணு ரொம்ப நல்லவ.

அக்கா :- அவன் வளர்த்த பொண்ணு அவனைப் போலத் தானேடா இருக்கும்.

ராம் :- நீங்க வளர்த்த தம்பி உங்களைப் போலயா இருக்கான்.

அக்கா:- ஒங்க அப்பா அந்தஸ்துக்குத் தகுந்தபடியா நீ இருக்கே?

ராம் :- நல்லாச் சொல்லுங்க. நான் சொல்ற பாயிண்டைத் தானே நீங்களும் சொல்றீங்க. நிர்மலாக்கு ரவியைப் பிடிச்சுப் போச்சு. ரவிக்கு நிர்மலாவைப் பிடிச்சுப் போச்சு. நடுவில் நிக்கற துக்கு நீங்க யாரு அக்கா?

அக்கா :- கல்யாணம்னா கடிச்சு முழுங்கறதா?

ராம் :- ஒங்களுக்கும் எனக்கும் கல்யாணத்துல கடிச்சு முழுங்கறது தான் வேலைன்னு வச்சுக்கங்க.

அக்கா :- ரவியின் எதிர் காலத்தைப் பத்திச் சிந்திக்க வேண்டாம்? அவன் பெரிய பதவிகளுக்கு வர ணும்னு நான் திட்டம் போட்டிருக்கேன். அவுங்க அப்பாவுக்கு வேணுங்கிற பெரிய மனுஷங்கள்ளாம்

உதவி பண்றேன்னு இருக்காங்க. சம்பந்தம் பண்ற துன்னா சரியான எடுத்துல பண்ணினாத்தானே சௌகரியமாயிருக்கும். நாளைக்கு, எனக்கே நாளைக்குத் தலையைக் காலை வலிச்சா.

ராம் :- விளையாடாதீங்க அக்கா. உங்களுக்காவது தலையைக் காலை வலிக்கிறதாவது. ப்ளுமௌன் டன் எஞ்சினுக்குத் தலையை வலிச்சாலும் வலிக்கும். உங்களுக்கு வலிக்காது. அந்த விஷயத்துல பர்மா சர்மாவும் ஒங்களை மாதிரி தான் சம்பந்தம் ரொம்ப கரெக்ட். எரிமலைக்கு ஜலதோஷம் புடிச்சா லும் புடிக்கும். அவர்கிட்ட சனி ஜுரம் ஒன்னும் அண்டாது.

அக்கா :- நீங்க எது வேணா சொல்லுங்க. அந்தப் பொண்ணைப் பார்த்துத் தான் நான் சொல்லணும்.

ரவி :- அதுக்கென்னக்கா. இப்பவே வேணும்னாலும் நீ போய்ப் பார்த்துட்டு வந்துடலாம்.

அக்கா :- மொதல்ல ரயில்ல வந்த அலுப்புத் தீர நான் போய்க் குளிக்கணும். அப்புறம் போய்ப் பெண்ணைப் பார்த்துக்கலாம். (சொல்லிவிட்டு அக்கா போகிறாள்)

ராம் :- (வேலைக்காரனிடம்) ஏண்டா நிக்கறே சோப்பையும் டவலையும் எடுத்துக்கிட்டு ஓடு. (வேலைக்காரன் போகிறான்)

ரவி:- ஏய்! ராம் நிர்மலாவை எப்படியாவது இன்னிக்குச் சாயங்காலம் அக்கா பார்க்கப் போறப்போ ஒழுங்கா நடந்துக்கும்படியாச் செய்யணும்.

ராம் :- அது தானே பெரிய கஷ்டம். கண்டிப்பு இல்லாம வளர்ந்த பொண்ணு. அவ உங்கக்காவோ ஒரு ஐயண் லேடி. ரெண்டு பேரும் சந்திக்கிறப்போ ஒரு பூகம்பம்தான்.

ரவி :- அந்தப் பூகம்பத்தைத் தடுத்தாகணும். அது நீதான் செய்யணும்.

ராம்:- பாறைகளின் மோதலை இந்தப் பல்லுக் குச்சியால் தடுக்க முடியுமா?

ரவி :- தடுத்தாகணும் ராம்.
(கட புட என்று சத்தம் கேட்கிறது)

ராம் :- ஏண்டா! உங்க அக்கா குளிக்கிறாங்களா ஒடைக்கிறாங்களா?

ரவி :- அது போகட்டும்டா, எப்படியாவது இன்னிலிருந்து கல்யாணமாகிற வரையிலும் அவள் சுபாவத்தைக் கொஞ்சம் மாத்திக்கச் சொல்லணுமே. சைக்கிள் கிட்ட போகாதே, ஆண் உடையை போட்டுக்காதே. மனசுல தோன்றியபடியெல்லாம் பேசாதேன்னு சொல்லணும்.

ராம் :- நீயே சொல்லிடேன். உம்மேலதான் உயிரையே வச்சிருக்காளே. நீ சொல்றதைக் கேட்காதவ நான் சொல்றதையா கேட்கப் போறாள்.

ரவி :- நான் எப்படிடா சொல்ல முடியும். நான் காதலிக்கிறப் பொண்ணுகிட்டப் போய் எங்கக்காவிற்காக நீ இப்படியெல்லாம் இருக்காதேன்னு சொன்னா என் கௌரவம் என்ன ஆறது. நான் சொல்றதைவிட இன்னொரு ஆள் சொல்லி அவள் தெரிஞ்சுக்கிறதுதான் நல்லது. என் மேலே இருக்கிற பிரியத்துக்காக அவள் எதுவும் செய்வா. ஆனா அதை நானே கேட்க விரும்பலை.

ராம் :- கள்ளிப்பட்டி மரகதம்மாளுக்குத் தகுந்த மருமகளா நடக்கச் சொல்றேன் கவலைப்படாதே.

ரவி :- அப்பாடா. A friend in need is a friend indeed.

ராம் :- அப்பா இப்பத்தான இங்கிலீஷ் வாயில வந்திருக்கு. முதல்லே போய் ஒரு டம்ளர் தண்ணி குடி. அக்கா வந்ததுல ஒடம்பு வேத்துப் போயிடுச்சு. நீங்கள்ளாம் ஏண்டா காதல் பண்றீங்க?

காட்சி-3

## சர்மா வீடு

[நிர்மலா கசரத் பழகிய வண்ணம் இருக்கிறாள். ஸ்கிபிங் செய்கிறாள். அப்பொழுது அங்கே பர்மா சர்மா வருகிறார். வந்து அவளைப் பார்த்துப் புன்முறுவல் செய்கிறார். நிர்மலா அவரைப் பார்த்து "என்னங்க சித்தப்பா" என்கிறாள். அவர் பத்து வரையில் எண்ணு கிறார்.]

சர்மா :- போறும்மா. ரொம்பக் களைச்சுப் போயி ருக்கே. இதோ உனக்காக என்ன வாங்கி வந்திருக் கேன் பாரு.

நிர்மலா :- எனக்குப் பிடிச்ச பாதாம் பப்பர்மெண்ட். (என்று சொல்லிச் சிரிக்கிறாள். பிறகு அவர் கன்னத்தைத் தட்டுகிறாள்)

சர்மா :- அப்படியெல்லாம் என் கன்னத்தைத் தட்டக் கூடாதம்மா இனிமே.

நிர்மலா :- தட்டினா என்ன சித்தப்பா, கோபமா?

சர்மா :- உன் மேல கோபப்பட முடியுமா? உனக்குக் கல்யாணமாய்ப் போற வயசாயிடுத்து. இப்படி நடந்துக் கிட்டா. நாலு பேர்—

நிர்மலா :- நாலு பேர் நாலு சொல்லட்டும். நீ சந்தோஷமாய் நிமிந்துநட, பயத்தை விடுப் புதுமை. பெண்ணா யிருன்னு அடிக்கடி சொல்ற நீங்களா இப்படிப் பேசறீங்க.

சர்மா :- நிர்மலா ! ஒவ்வொரு சமயத்தில நான் ஒன்னை வளர்த்த விதம் சரிதானான்னு எனக்கே சந்தேகம் வர்ரது. உன்னை வளர்க்கிறப்போ என் உள்ளத்து அன்பைக் கேட்டு வளர்த்தேனே ஒழிய என் அறிவைக் கேட்டு வளர்க்கலை.

நிர்மலா :- என்ன சித்தப்பா, நீங்க என்ன இன்னிக்கு கவலையோட இருக்கீங்க? யார் வேணா என்ன வேணா சொல்லட்டும். நீங்க என்னைச் சரியா வளர்க்கலைன்னு என் காது கேட்க யாராவது சொன்னாங்கன்னா அவங்களை நான் சும்மா விட மாட்டேன்.

சர்மா :- நிர்மலா, ரவியைச் சமீபத்துல பார்த்தியா.

நிர்மலா :- நேத்திக்குக் கூட பார்த்தேன். அவரு அக்கா கூட இன்னிக்கு வரதாகச் சொன்னாரு.

சர்மா :- ரவி தங்கமான புள்ளைதான். அவுங்க அக்கா கிட்ட மட்டும் கொஞ்சம் தைரியமா நடந்துக் கிட்டான்னா.

ராம் :- (உள்ளே வந்து கொண்டு) அது தானே முடியாது சர்மா. அக்கா "உம்"னா எம்மேல வந்து விழறான் ரவி.

சர்மா :- யாரு, ராமா?

ராம் :- பின்னே வேற யாரு? ரஹீமா வருவான். ஹூம்! அது இருக்கட்டும், ரவி என்ன பண்ணிக் கிட்டு இருக்கான் தெரியுமில்லே. நீங்கதான் ரவி அக்கான்னு வச்சுக்கங்களேன், அப்படியே நில்லுங்க. உம், நல்லா சைனா பொம்மை மாதிரி வெறச்சுக்கிட்டு நில்லுங்க.

சர்மா :- சைனாப் பொணம் என்னடா, எல்லாப் பொணமும்தான் வெறக்குது.

ராம் :. அது கெடக்கட்டும். அப்படியே நடங்க பார்க்கலாம்.

(என்று சொல்கிறான். சர்மா வெறப்பாக நடக்கிறார். ராம் கூடவே நடந்த வண்ணம் அவர் முகத்திற்கு எதிரே ஏதோ கையால் சைகை செய்து கொண்டிருக்கிறான்.)

நிர்மலா :- ராம் இதென்ன கரகமாடறே?

ராம் :- நான் ஆடல்லே, உன் காதலன் ரவி அங்க இப்படித்தான் ஆடிட்டு இருக்கான். அக்கா விடற மூச்செல்லாம் வீணாப் போக வேண்டாம்னு ஒரு பாட்டில்ல போட்டு அடைச்சு வச்சிக்கிட்டு இருக்கான்.

நிர்மலா :- போடா. ஒனக்கு வேற வேலையென்ன? ஒன்னைப் பார்த்தா கள்ளிப்பட்டி ஜமீன்தார் புள்ளைன்னு யாராவது சொல்வானா?

ராம் :- அதயேதான் எங்கப்பாவும் சொல்றாரு. நீ எங்கடா எனக்குப் புள்ளையா வந்து பொறந்தேன்னு. அதுக்கு நான் என்ன பதில் சொல்லிக்கிட்டு இருக்கேன் தெரியுமா? நான் ஒரு பொண்ணாப் பொறக்காம இந்த மட்டும் பிள்ளையாப் பொறந்தேன்னு சந்தோஷப் படுங்கோம்பேன்.

சர்மா :- விஷயத்துக்கு வாடா சொட சொடாக்குச்சி. என்ன சமாசாரம்?

ராம் :- விஷயம் இதுதான். நானும் ரவியும் சரவணம் புடை சூழ அக்காவோட சரியா 6 மணிக்கு இங்கே வரப் போறோம். அதுக்குத் தகுந்த ஏற்பாடெல்லாம் செய்யுங்க. நான் 4 மணிக்கே

இங்கே வந்துடறேன். நிர்மலா நீ உன் உடை அலங்காரத்தைப் பத்தியெல்லாம் கவனிக்கணும். புலிவேஷம் ஆண் வேஷம் எல்லாம் போடாம அந்தப் பைஜாமாவை நீக்கிட்டு கொஞ்சம் கண்யமா இரு.

நிர்மலா :- ஆடையில தானா இருக்கு கண்யம். முடியாது, நான் என் இஷ்டப்படிதான் இருப்பேன்.

ராம் :- தோப்புக் கரணம் போட்டுக் கேக்கறேன், ரவிக்காகக் கொஞ்சம் கல்யாணத்து வரையில ஒரு மாதிரியா நடந்துக்கோ. அப்புறம் நீயாச்சு ரவி அக்கா வாச்சு. நானே உன் பக்கத்திலே நின்னுக் கிட்டு அசம்பளி ஸ்பீக்கர் மாதிரி ஆர்டர் ஆர்டர்னு, கத்தறேன்.

நிர்மலா :- அதெல்லாம் முடியாது. கல்யாணத்து வரையில காலைப் பிடிக்கிறது அப்புறம் கழுத்தைப் புடிக்கிறது. இதெல்லாம் நமக்கு வேண்டாம்.

ராம்:- அப்ப நீ ரவியை மறந்துட வேண்டியதுதான்.

நிர்மலா :- ரவியினுடைய அபிப்பிராயமும் இதுதானா?

ராம் :- அவன் இஷ்டம் அது தான். நான் வந்திருக் கிறதிலேயே தெரியல்லையா.

சர்மா :- அந்தப் பையனுக்காகக் கொஞ்சம் நாம அட்ஜஸ்ட் பண்ணிகிட்டு நடந்துக்கிட்டா போர்றது.

நிர்மலா :- என்னால ஆனவரைக்கும் நான் சாமர்த்தியமா நடந்துக்கறேன்.

ராம் :- சரியா 4 மணிக்கு ஒன்னைத் தயார் பண்ண வந்திடுவேன்.

சர்மா :- ராம் நம்ம நண்பர்கள் யாரையாவது பார்த்தா இன்னிக்கு வரவேண்டாம்னு நான் சொன்னதாச் சொல்லி விடு.

நிர்மலா :- என்ன சித்தப்பா யோசிக்கிறீங்க?

சர்மா :- ஒண்ணுமில்ல. கள்ளிப்பட்டி அம்மா வர்ரது தெரியாம என்னோட நண்பர்களை எல்லாம் ஈவினிங் வரச் சொல்லிட்டேனே. அவங்க வரத்துக் குள்ளே இந்தக் கலாட்டா வெல்லாம் முடிச் சாகணும். நம்ம சிநேகிதங்களோ ஒரே கோமாளிப் பசங்க. அவங்க இருக்கிறப்போ அவங்க வந்தாங் கன்னா அப்புறம் நம்ம சம்பந்தம் அவ்வளவுதான். இந்தக் கல்யாணமே கயாதான். அவங்களை இன்னிக்கு வர வேண்டாம்னு எல்லோருக்கும் ஒரு லெட்டர் எழுதி அனுப்பிச்கிடறேன்.

நிர்மலா:- எதுக்கும் பயப்படாத நீங்களே இப்படிப் பயப்படுறீங்களே சித்தப்பா.

சர்மா :- எல்லாம் உனக்காகத் தானம்மா. இதோ நகைப் பெட்டி யெல்லாம் எடுத்துத் தர்ரேன். எல்லா நகையையும் இன்னிக்குப் போட்டுக்கோ. இந்தச் சமயத்துல தான் வீட்ல ஒரு பெரிய பொம்பளை இல்லையெங்கற வருத்தம் எனக்குத் தெரியுது. உன் தாயார் இல்லாத குறையும் இப்பத்தான் எனக்கு அதிகமாத் தெரியுது.

நிர்மலா :- (அன்போடு) நீங்க ஒண்ணும் கவலைப் படாதீங்க சித்தப்பா. நீங்க தான் எனக்கு அப்பா அம்மா எல்லாம்.

## காட்சி – 4

## ரோடு

[சேகர் தெருவில் நின்று கொண்டு ஏதோ யோசித்த வண்ணம் இருக்கிறான். ஒருவன்

அருகில் வந்து நிற்பவனைக் கவனிக்கவில்லை. வந்தவன் 'பட்' என்று சேகரின் தோளில் ஒரு தட்டுத் தட்டுகிறான். சேகர் திடுக்கிட்டுத் திரும்புகிறான்]

**சேகர் :-** அடெடெ பக்கிரியா, பயந்துட்டேனப்பா.

**பக்கிரி :-** என்ன பிரதர் முன்ன மாதிரி யெல்லாம் உன்னைப் பார்க்கவே முடியவில்லை. ஹூம் பெரிய பெரிய இடங்களிலெல்லாம் சகவாசம்.

**சேகர் :-** (சிரித்துக் கொண்டே) பின்ன என்றும் சத்தரத்து சாயக்கரை வேஷ்டி கட்டிக்கிட்டு இருந்த பழய ஆளுன்னு நினச்சியா...?

**பக்கிரி :-** அதான் பார்த்தாலே தெரியுதே பிரதர். இந்தப் பிக்பாக்கட் பக்கிரிகிட்ட துண்டு பீடி வாங்கினதும் எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. இப்ப என்னடான்னா பெரிய பணக்காரங்க கோஷ்டியிலே ஜல்சா செய்யுறே. ஆளும் சூட்டும் பூட்டுமா தடபுடலாயிட்டே. நம்ப கதி மட்டும் பழைய கதியே தான். ஒனக்கு அடிச்ச அதிர்ஷ்டம் எனக்கும் அடிச்சா நானும் உன்னைப்போல பழய சங்கதியை மறந்துட்டு சவடால் அடிப்பேன்.

**சேகர் :-** அதிஷ்டம் என்று சொல்லாதேடா அறிவிலி. நான் இன்று இந்த நிலைமையை அடையக் காரணம் என்ன தெரியுமா? ஆண்டவன் கண்ணை மூடிக்கிட்டு என் வீட்டிலே பணத்தைக் கொண்டு வந்து கொட்டலை. என் பகுத்தறிவினாலே முன்னுக்கு வந்தேன்.

**பக்கிரி :-** எனக்கு வெறும் அறிவே இல்லைன்னு எங்க அய்யா அடிக்கடிச் சொல்லுவாரு. பகுத்தறிவு நான் எங்கே போறது. நமக்குத் தெரிஞ்ச அறிவெல்லாம் பர்ஸ் அறிவுதான்.

**சேகர்:-** அதுதான் தவறு. உனக்கும் பகுத்தறிவு இருக்கிறது. ஆனால் சரியான நேரத்தில் சரியான படி பயன்படுத்திக் கொள்ள உனக்கு ஆர்வம் இல்லை. என்னைப் பாரு. முன்னே "டீ" குடிக்கக் காலணா இல்லாம உங்கிட்டையே எத்தனையோ வாட்டி திருடி இருக்கேன். இப்போ என்னைச் சுத்தி பத்து பிக்பாக்கட் பசங்க சுத்தறாங்க. எல்லாம் என் முயற்சி, என் சாமர்த்தியம். பழக வேண்டியவர்களிடம் பழகி, தொலைக்க வேண்டியவனைத் தொலைச்சு என் சொந்த அறிவின் சக்தியால் ஒரு ஆளாயிருக்கேன்.

**பக்கிரி :-** பரவாயில்லையே; ஏய் நீ அரசியல் கட்சி கூட ஆரம்பிக்கலாமே; தெளிவா ரெண்டு வார்த்தை சுத்தத் தமிள்ள பேசக் கத்துகிட்டையே.

**சேகர் :-** அரசியல் கட்சி மட்டும் என்ன, என் சாமர்த்தியத்தாலே கூடிய சீக்கிரம் பாரு, இந்த நாட்டையே ஆளப் போறேன்.

**பக்கிரி:-** அடேயப்பா, பொளந்து தள்றியே. அது போகட்டும்; மொதல்ல ஒரு ரூபாய் இருந்தா கொடு. நாஸ்தா பண்ணி நாலு நாளச்சு.

**சேகர் :-** டேய் பக்கிரி இந்தப் பிச்சைக்காரப் புத்தி மட்டும் ஒன்னை விடாதுடா. கேக்கறது தான் கேட்டெ ஒரு ஐந்து ரூபா இல்லே ஒரு பத்து ரூபா கேட்கக் கூடாது. இந்தா இந்த 5 ரூபாய் தான் இப்ப எங்கிட்ட சேஞ்சா இருக்கு. பாக்கியெல்லாம் 100 ரூபாய்தான். இதை எடுத்துகிட்டுப் போய் நாலு நாள் பஸ் ஸ்டாப் சினிமா கொட்டகைப் பக்கம்சுத்தாம நிம்மதியாச் சாப்பிடு.

[என்று சொல்லிக் கொண்டே ஒரு ஐந்து ரூபாய் நோட்டை பர்ஸிலிருந்து எடுத்து வசு கிறான். பக்கிரி அதை எடுத்துக் கொள்கிறான்]

பக்கிரி :- டேய் நோட்டு சுத்தம் தானே!

சேகர் :- ஏய் என்னடா தானம் கொடுத்ததைத் தடவிப் பாக்கறே.

பக்கிரி :- அடப்பாவி முள்ளங்கி பத்தை மாதிரி ஐந்து ரூபாயை என்னமோ அலட்சியமா வீசறயே. உம் நீ வந்த வேளை. அப்படி ரெண்டு பேரும் ஒண்ணாத் தான் பிசினெஸ் ஆரம்பிச்சோம் நீ என்னடான்னா நோட் நோட்டா வீசறே. இந்த நாட்டையே ஆட்சி நடத்துவேங்கறே. நம்மநிலை என்னடான்ன ரயில்வே ஸ்டேஷன்லையும் பேங்கிலேயும் நம்ம போட்டோவைப் புடிச்சு வச்சிருக்காங்க. ஹூம் அவ்வளவுதான்! (சைக்கிளில் நிர்மலா வருகிறாள்)

சேகர் :- ஹல்லோ நிர்மலா குட்மார்னிங். ஏது மார்னிங் ரைடா.

நிர்மலா :- (சைக்கிளை நிறுத்தி அதன் மேல்உட்கார்ந்த படியே) ஹல்லோ சேகரா குட்மார்னிங்.

சேகர் :- இப்பத்தான் சித்தப்பா கிட்ட பேசிக்கிட்டு இருந்தேன்.

நிர்மலா :- வாக்கிங் கிளம்பி வந்திருப்பாரு.

சேகர் :- (சிரித்துக் கொண்டே) ஆமாம் ஆமாம். நானும் கொஞ்ச தூரம் போயிட்டு அப்படியே.

நிர்மலா :- ஓஹோ அப்படியா சரி எனக்கு டயமாச்சு.

சேகர் :- அடெடே நிர்மலா மொதல்ல கூடிய சீக்கிரம் நடக்க இருக்கும் உன் திருமணத்திற்கு என் வாழ்த்துக்கள். இத்தனை நாள் வரையில் சர்மா கூட இதை மூடிவச்சிட்டு இருந்துட்டாரே. ஆமாம் ஏன் நிர்மலா (தயங்கிக் கொண்டே) உனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டம்தானே?

நிர்மலா :- (சிரித்துக் கொண்டே) ஏன் உங்களுக்கு இஷ்டமில்லையா?

சேகர் :- அதுக்குச் சொல்லலை நிர்மலா. அந்தப் பையன் கூட ஒரு அப்பாவியாம். அதோட அந்தக் கள்ளிப்பட்டி அம்மா — ரவி சிஸ்டர் ஒரு பெரிய ராக்ஷஸியாம்... உம்... செல்லமா வளந்த நீ அங்க போய் அந்தப் பொம்பளை கிட்ட....

நிர்மலா:- நான் கல்யாணம் பண்ணிக்கப் போறது ரவி அக்காவையில்லே. ரவியைத் தான்.

சேகர் :- நம்ம நண்பர் மகளாச்சே ஒரு ஆபத்தான இடத்துல போய்ச் சேருதேன்னு சொன்னேன். (பரிவாக) உன் பர்சனாலிடி என்ன? படிப்பு என்ன? அதுக்குத் தகுந்தாப்பல.

நிர்மலா :- ஏன் ஒன்னைப் போல ஒரு பிஸனெஸ் மாக்னெட்டைக் கல்யாணம் பண்ணிக்காம எங்கேயோ பட்டிக்காட்டில மாட்டிக்கிறியேங்க நீங்க அதுதானே...

சேகர் :- ஏன் அப்படிக் கேட்கக் கூடாதா? இல்லை கேட்பதற்கு உரிமை இல்லையா...?

நிர்மலா :- ஐய்யய்யோ ஏன் சார் இதைச் சொல்றதுக் குள்ளே இப்படி மூச்சு முட்டிப்போய் வேத்து விட்டுடுத்து... ச்...சூ உங்களைப் பார்த்தா எனக்குப் பரிதாபமா இருக்கு சார். உங்களைப் பார்த்தா இப்ப எப்படி இருக்கு தெரியுமா சார் தண்ணிலேந்து எடுத்து வெளில போட்ட வயிறு வீங்கின எலி மாதிரி இருக்கு.

சேகர் :- (கெஞ்சியபடி) நிர்மலா நீ எப்படி வேண்டு மானாலும் என்னைப் பற்றி எண்ணிக் கொள். நாள் முழுதும் உன்னையே எண்ணி ஏங்கும் எனக்கு கொஞ்சம் கருணை காட்டக் கூடாதா?

**நிர்மலா :-** சார், நல்லாக் காதல் வசனம் பேச றீங்களே. சினிமாவில சேருங்க சார். பணமாவது கிடைக்கும்.

**சேகர் :-** விளையாடாதே நிர்மலா, சத்தியமாச் சொல்லுகிறேன். உன் மீது எனக்குள்ள காதலை எடுத்துக்காட்ட உவமை கூட ஏதும் தெரியவில்லை. வெண்ணிலாவையும் வானத்தையும் கூறினால் அதுவும் கூடப் பொருந்தாது. ஏனென்றால் அந்தி தூய வெண்ணிலாவைக் கூட சில சமயங்களில் கருமேகக் கூட்டங்கள் களங்கப்படுத்தி விடுகின்றன. உன்மேல எனக்கு இருக்கும் காதலுக்குக் கம்பன் இன்று இருந்தால் கூட உவமை கூறி இருப்பானோ என்பது சந்தேகம் தான்.

**நிர்மலா :-** நல்ல வேளை கம்பன் செத்தான், சார் இப்ப எனக்கு புது ஐடியா சினிமாவில நடிக்கக் கூட நீங்க லாயக்கில்லே. பேசறது ரொம்ப ஆர்ட்டி பிஷலா இருக்கு. நாடகத்துல ஆக்ட் பண்ணுங்க சார். கண்டிப்பா ரெண்டு வீடு கட்டிடுவீங்க.

**சேகர் :-** நிர்மலா நிர்தாட்சண்யமாகப் பேசாதே. நீ என்னை மறந்தால் கட்டாயம் நான் கிணற்றிலேயோ குளத்திலேயோ விழுந்து இறக்கப் போவது திண்ணம். பிறகு வருந்தாதே. உலகத்தில் உண்மைக் காதலுக்கு இடமில்லை என்பதற்குச் சரித்திரத்தில் நாம் ஒரு சான்றாக வேண்டாம்.

**நிர்மலா :-** சத்தியமாச் சொல்றேன் சேகர். இதுக்காக நீங்க செத்துப் போக மாட்டீங்க.

**சேகர் :-** நிர்மலா நான் காதல் தீயில் வெந்து அணு அணுவாகச் செத்துக் கொண்டிருக்கும்போது நீ அதைக் கண்டு விளையாடுகிறாய் நிர்மலா. உன்னைக் காதலிக்க நான் எந்த வகையில் தாழ்ந்தவன், அறிவிலா, அந்தஸ்திலா, அழகிலா?

நிர்மலா :- (கிண்டலாக) ஸ்வாமி தவறென்று யான் உரைக்கவில்லையே. (சாதாரணக் குரலில்) சேகர் நீங்கள் என்னைக் காதலிப்பதற்குச் சகல அம்சங்களிலும் அருகதை உடையவர்தான்.

சேகர் :- (பரபரப்புடன்) உண்மையாகவா நிர்மலா'

நிர்மலா :- உங்கள் மீது ஆணையாக. ஆனால் நான் தான் உங்களைக் காதலிக்க அருகதையற்ற அபாக்யவதியாகி விட்டேன். உங்களைப் போல் எவ்வளவோ பேர்கள் என்னைக் காதலிக்கலாம். அவர்கள் எல்லோரும் என்னிடம் வந்து உங்களைப் போல் கெஞ்சுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்புறம் என கதி என்ன ஆவது. நீங்க என்னை எவ்வளவு வேண்டுமானாலும் காதலிச்சுக்கிட்டே இருங்க. எனக்கு அதைப் பத்தி அப்ஜெக்ஷன் கிடையாது. ஆனா அடுத்து ஒரு முறை இதைப் பத்திப் பேசினிங்களோ நான் எப்படி எல்லாமோ ஆயிடுவேன். நம்ம காதல் ஒரு பக்கக் காதல். அதாவது One way Traffic மாதிரி. Rules ஐ மீறி ஒரு முறை தவறு பண்ணினால் போலீஸ்காரர் விட்டுடுவார். அடிக்கடி சௌகரியமா இருக்குன்னு அதே ரோடு வழியாப் போனா அப்புறம் fine கட்ட வேண்டியது தான்.

சேகர் : நிர்மலா உன் முடிவான பதில் இதுதானா! என் ஆசையை அலட்சியம் செய்யாதே.

நிர்மலா :- நல்ல வேளை. எங்கிட்ட கேட்ட மாதிரி எங்க சித்தப்பாகிட்டப் போய்க் கேட்டுடாதீங்க. அவர் கொஞ்சம் முரடு. முதுகைப் பதம் பார்த்திடுவார்.

சேகர் :- நிர்மலா இந்த சேகரை நீ அறிய மாட்டாய்.

நிர்மலா :- இத்தனை நாளா அறிந்து கொள்ளாமல் இருந்தேன். இப்பத் தெரிஞ்சுக் கிட்டேன்

மிஞ்சினால் கெஞ்சி கெஞ்சினால் மிஞ்சும். கூட்டத்தின் தலைவனென்று நான் வருகிறேன்.

காட்சி-5

## ரவி அறை

**அக்கா :-** காது என்ன செவிடா? கூப்பிட்டா உடனே ஓடி வர வேண்டாம்? ரவி எங்கேடா?

**சரவணம் :-** அதானம்மா இங்கயோ ரோடிலேயோ ஒரு பிரண்டைப் பார்த்துட்டு வரேன்னு போனாரு.

**அக்கா :-** பட்டணத்துக்கு வந்ததிலிருந்து ரவி என்ன தான் செய்துகிட்டு இருக்கான். உபயோகமா பிரண்டுகளைப் பார்த்துக்கிட்டு இருக்கான். உம், அது சரி ஊர்லயிருந்து கிளம்பறப்போ நான் குறிச்சேனே அந்தச் சாமான்களை எல்லாம் வாங்கிட்டாயா? (அக்கா நடந்து கொண்டே பேசுகிறாள். சரவணம் அவளுக்குப் பின்புறம் நடந்து கொண்டே பதில் சொல்கிறான்).

**சரவணம் :-** (பையிலிருந்து ஒரு பேப்பரை எடுத்துக் கொண்டு) அநேகமா எல்லாத்தையும் வாங்கிட்டேன்மா....ஒரு மூட்டை எள்ளுப் புண்ணாக்கு.

**அக்கா :-** சரவணம் சாமான் லிஸ்ட்ல மொதல்ல எள்ளுப் புண்ணாக்குன்னு எழுதாதேன்னு எத்தனை தடவை சொல்லி இருக்கேன். எடுத்தவுடனே எள்ளுன்னு ஆரம்பிக்கிறியே.

**சரவணம் :-** அட ஏம்மா இதுக்குப் போய் எள்ளும் கொள்ளுமா வெடிக்கிறீங்க.

அக்கா :- சரி சரி படி மேலே.

சரவணம் :- ஒரு மூட்டைப் பருத்திக் கொட்டை, வண்டி டயர் ரெண்டு. மிச்சத்துக்கு மத்யானம் தான் போகணும்.

அக்கா :- ஆமா கடையில இருக்கிறவங்க சாப்பாட்டுக்குப் போறப்போ காரியம் சீக்கிரம் முடிஞ்சுடும்.

சரவணம் :- இன்னும் ஒண்ணே ஒண்ணு தாம்மா பாக்கி.

அக்கா :- என்னடா அது.

சரவணம் :- அதாம்மா அந்த வாழைத்தண்டு லைட்டு.

அக்கா :- என்னடா ஒளர்றே ட்யூப் லைட்னு சொல்லு.

சரவணம் :- ஆமாம்மா அதுக்கு என்னமோ அளவு சொன்னான். ரவி ஐயா நான் வர்ர போது வாங்கிட்டு வரேன்னாரு. இதோ அவரே வந்திட்டாரும்மா. (ரவி ட்யூப் லைட் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து வைக்கிறான்)

அக்கா :- சரி நீ போ. சரவணம் பாக்கி வேலையைக் கவனி. (சரவணம் போகிறான்)

அக்கா :- சரவணம்.

சரவணம் :- (வந்து கொண்டே) ஏம்மா.

அக்கா :- அந்த முருகப்பிள்ளை கிட்ட வட்டிப் பணம் பாக்கி இருக்கு. அதையும் வசூல் பண்ணிக்கிட்டு வந்துடு. ஊருக்குக் கிளம்பறத்துக்குள்ளே.

சரவணம் :- ஏம்மா அவரு வட்டிப் பணம் குடுக்காட்டி.

அக்கா :- அவரு வீட்டு வாசப்படியிலேயே படுத்தாவது பணத்தை வாங்கிட்டு வா. அவரு ஹோட்டலிலிருந்து வாங்கிக் கொடுக்கிற பலகாரத்தை வாங்கித் தின்னுட்டு இங்க வந்து பல்லை இளிச்சுக்கிட்டு

நின்னையோ தோப்புக்கரணம் போடணும் ஆமாம். போடா. (சரவணம் போய் விடுகிறான்)

அக்கா :- (கண்டிப்பான குரலில்) ரவி உங்கிட்ட இப்ப நான் கொஞ்சம் முக்கியமான விஷயங்கள் பேசணும். நீ பட்டணத்துக்கு வந்து எத்தனை நாள் ஆறது.

ரவி :- ஏன் அம்மா ஒரு வருஷமாறது.

அக்கா :- கள்ளிப்பட்டி ஜமீன்தார்கிட்டச் சொல்லி உன்னை இங்க அனுப்பிச்சது எதுக்குத் தெரியுமா? அந்த ஜமீன்தார் புள்ளையோட இங்க இருந்து பார்க்கறவங்களைப் பார்த்துப் பழகறவங்களோட பழகி நடக்கறபடி நடந்து ஒரு ஆளாவேன்னு நினைச்சேன்.

ரவி :- இப்ப மட்டும் என்னாயிடுத்து.

அக்கா:- நான் போட்ட திட்டம் வேறே, நீ நடந்துகிட்டு வர்ர முறை வேறே. அந்த ஜமீன்தார்ப் பையன் ஏற்கெனவே அரைக் கோமாளியா இருந்தவனை முழுக்கோமாளியாக்கிட்டே. அதோடையா யாரோ ஒருத்தன் பர்மாவாம் சர்மாவாம் அவன் வீட்ல பொண்ணை வேற கல்யாணத்துக்கு வேற பாத்து வச்சிருக்கே.

ரவி :- அந்தப் பொண்ணை யாருன்னு பார்க்காம பேசிக்கிட்டுப் போறியே. பார்த்துட்டு அப்புறம் சொல்லு.

அக்கா :- நான் பார்க்கிறதைப் பத்தி ஆக்ஷேபணை இல்லை. ஒரு ஹைகோர்ட் ஜட்ஜ் பொண்ணு இல்லை ஒரு மிட்டாதார் வார்சு. இந்த மாதிரி பார்த்துப் பிடிப்பான் வாழ்க்கையில் முன்னேற விரும்பறவன். நீ என்னடான்னா காதல் பண்ணிக் கல்யாணம் பண்ணிக்கறே.

**ரவி :-** அக்கா நீ எந்த விஷயத்தைப்பத்தி வேணும்னாலும் சொல்லு. நான் எப்பவும் உனக்குத் தடை சொன்னது கிடையாது. இந்தப் பொண்ணு விஷயத்திலே மட்டும் கன்னா பின்னான்னு ஏதாவது சொல்லிடாதே.

**அக்கா :-** அந்தப் பொண்ணைத் தான் இன்னிக்குச் சாயந்திரம் பார்த்துடப் போறேனே. ஒரே பார்வையில புரிஞ்சுட மாட்டேன். மரகதமா சும்மா வா ஒன்னை ஒரு டிஸ்டிரிக்ட் போர்ட் பிரிசிடெண்டாக்கி எனக்கு இருக்கிற செல்வாக்குக்கு ஒரு மந்திரியாவது ஆக்காம விட்டுடுவேனா உன்னை. (அப்பொழுது ராம் அங்கு வருகிறான்)

**ரவி :-** எனக்கு மந்திரி வேலையும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம். நான் ஒரு சாதாரண மனுஷனா சந்தோஷமா வாழ்ந்தாப் போதும்.

**ராம் :-** அது அக்கா இருக்கிறவரையில் நடக்காதப்பா நடக்காது.

**அக்கா :-** (ராமைப் பார்த்து) வந்துட்டியா (ரவியைப் பார்த்து) அவரும் சாதாரண மனுஷனா சந்தோஷமா வாழனும்னு தான் சொல்லிக்கிட்டே இருந்தாரு. கடைசியிலே அல்பாயுசாப் போயிட்டாரு என்னை தவிக்க விட்டுட்டு.

**ராம் :-** அது உங்க மாங்கல்ய பலன்.

**அக்கா :-** போட்டேன்னா தெரியுமா.

**ராம் :-** போடுங்க அக்கா போடுங்க. ஒங்க கையால அடி வாங்கக் கொடுத்து வச்சிருக்க வேண்டாம்.

**அக்கா :-** அது கிடக்கட்டும்டா ராம். போன காரியம் என்ன ஆச்சு?

ராம் :- சரியா 6 மணிக்கு நாம எல்லாரும் போறோம்.

அக்கா :- ஆறு மணி என்ன? இன்னும் சுருக்காலே போலாம்.

ராம் :- மொத மொதல்லே பொண் பாக்கப் போறப்ப நீங்க வர்ரதே நல்லா இல்லை. அதோட இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமை. 4-30 மணியிலிருந்து 6 மணி வரை ராகு காலம் வேற. அந்த டயத்திலேயா போறது.

அக்கா :- ராகு காலம் குளிகை காலம், போடா. ஊர்ல இருக்கற ஜோசியன் எல்லாரும் கூடத்தான் என் முகூர்த்தத்தைப் பார்த்தாங்க. பாரு இப்ப நான் இருக்கிற லட்சணத்தை.

ராம் :- ஒங்களுக்கு என்ன அக்கா. சும்மா தயிர் அப்பம் மாதிரி மினுமினுன்னு இருக்கீங்க.

அக்கா:- போடா வேற வேலையில்லே உனக்கு. (என்று சொல்லிவிட்டு அக்கா போய் விடுகிறாள்)

ரவி :- என்னடா போய்ப் பார்த்தியா.

ராம் :- என்னடா காப்பிக் கெட்டிலை திறந்து விட்ட மாதிரி உஷ்ணமாயில்லை மூச்சு வர்ரது.

ரவி :- அது கிடக்கட்டும்டா, சர்மாவைப் பாத்தியா? நிர்மலாவைப் பாத்தியா?

ராம் :- அது பாருடா, நான் இங்க இருந்து கிளம்பினேனா? எல்பின்ஸ்டன் பக்கத்துல ஒரு ஆட்டோ ரிக்ஷா இப்படி சைன்னு வந்தது. அப்படியே ஹிந்து ஆபிஸ் பக்கத்திலிருந்து ஒரு லேட்டஸ்டு மாடல் டாட்ஜ் 60ல் அழுத்திக் கிட்டு வந்தான்.

ரவி :- ஆமா அழுத்திக் கிட்டு வந்தான். ரெண்டும் மோதிச்சு. ஆட்டோ தூள் தூளாப் போச்சு.

ராம் :- அதுதான் இல்லே.

ரவி :- பின்னே என்ன டாட்ஜ் டாமேஜ் ஆச்சா?

ராம் :- அதுவுமில்லே. இந்த ஆட்டோ ரிக்ஷாக்காரன் சும்மா அப்படி நேக்கா ஒதுக்கினான் பாரு அந்த மாதிரி.

ரவி :- ஆமா அதான் ரொம்ப முக்கியம். போன விஷயம் என்ன ஆச்சுடான்னா.

ராம் :- அதைத்தானே சொல்ல வரேன். நம்ம வாழ்க்கையிலே இருக்கிற சிக்கல்லேயிருந்து அந்த ஆட்டோ ரிக்ஷாக்காரன் மாதிரி நேக்கா ஒதுங்கணும்.

ரவி :- இப்ப என் சிக்கலுக்கு என்னடா வழி பண்ணினே. சர்மாவைப் பாத்தியா?

ராம் :- சர்மாவைப் பார்த்தேன். ஆகா மனுஷன் வயசானாலும் என்னமா டிரஸ் வச்சிருக்கான் தெரியுமா? இந்த மாதிரி வெயிஸ்ட் கட்டை ஏழு வருஷத்திலே பார்த்தது கிடையாது.

ரவி :- அந்தச் சர்மா எந்தத் துணி போட்டுக்கிட்டு இருந்தா என்னடா? இல்லே துணியே இல்லாம இருந்தால்தான் என்னடா?

அக்கா :- (வந்து கொண்டே) அவன் யாருடா பட்டணத்துல துணி இல்லாம உலாவறவன்!

ராம் :- ஹ...ஹ அவன்தான். அதான் அவன். ஆமா, எங்க அக்கா கிளம்பறீங்க சரவணம் இல்லாம.

அக்கா :- கடைத் தெரு வரையிலும் போயிட்டு வர்ரேன்.

ராம்:- கடவுள் தான் காப்பாத்தணும் கடைத்தெருவை. (அக்கா போகிறாள்)

ரவி :- ஏய் நிர்மலாவைப் பாத்தியா?

ராம் :- நீ என்ன அங்கயேதான் இருக்கியா, பார்த்தேன். ஒரு சின்ன difficulty.

ரவி :- difficulty யா! என்னடா அது?

ராம் :- அட கீழே விழுந்திராதேடா.

ரவி :- கல்யாணம் முடிய்யற வர்ரயில் கொஞ்சம் பணிவா நடந்துகிறதாகச் சொல்லிட்டாள் இல்லே.

ராம் :- அந்த சைட்லேருந்து நமக்கு என்னிக்கும் கோவாபரேஷன் வரும். ஆனா அக்கா எந்த அளவுக்குப் போறாங்கன்னு நமக்குத் தெரியணுமே! அளவுக்கு மீறி நிர்மலா சோதிச்சுட்டாங்கன்னா அப்புறம் அது வெடிச்சுடுமே. இன்னிக்கு என்ன கிழமை தெரியுமா? சண்டே. சண்டே ஈவினிங்னா சர்மா வீட்ல என்ன நடக்கும் தெரியாதா?

ரவி :- ஐய்யய்யோ ஆமா! இந்தச் சர்மாவோட கிராக் பிரண்ட்ஸ் எல்லாம் கூடிடு வாங்களே. ஒரே சீட்டாட்டமும் கலாட்டாவுமா, பைத்தியக்கார ஆஸ்பத்ரியாட்டம்னா இருக்கும்.

ராம் :- அதைப்பத்திக் கவலைப் படாதே. விழுந்த மனதை ஒட்டி வை. அப்படியெல்லாம் வர வேண்டாம்னு சொல்லி கடுதாசி எழுதிட்டாரு.

ரவி :- அப்பாடா பொழச்சேன்.

ராம் :- நிர்மலாவும் உன் இஷ்டப்படியே நடக்கற தாகச் சொல்லிட்டா. இன்னிக்குப் பாரு நீங்கள்ளாம் வர்ரத்துக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னாடியே நான் போய் சும்மா நிர்மலாவை எப்படித் தயார் பண்றேன் பாரு! நிர்மலாவைப் பார்த்தவுடனே இந்த அக்கா மனசு அப்படியே பிரிஜிடரில் வச்ச தக்காளிப் பழம் மாதிரி குளிர்ந்திட வேண்டாம்.

ரவி :- உன்னைத்தான் மலையா நம்பியிருக்கேன்,

**ராம் :-** என்னைப் பார்த்தா மலை மாதிரி தெரியறது உனக்கு. சாதாரணமாகவே நம்பு. (அப்பொழுது சரவணம் இறைக்க இறைக்க ஓடி வருகிறான்)

**சரவணம் :-** அம்மா, அம்மா எங்கே?

**ராம் :-** (பேண்டின் பின் பக்கம் உள்ள பையைக் காட்டி அக்கா இதுல இருக்காங்க எடுத்துக்க.

(சரவணம் அசட்டுச் சிரிப்பு சிரிக்கிறான். ஸைட் விங்கில் பார்க்கிறான். பார்த்துவிட்டுத் திடீரென்று தோப்புக்கரணம் போட ஆரம்பிக்கிறான்)

**அக்கா :-** (வந்து கொண்டே) எதுக்குடா தோப்புக் கரணம் போடறே.

**சரவணம் :-** தவறு நடந்துட்டதும்மா. நீங்க சொல்றதுக்குள்ள நானே போட்டுட்டேன்.

**அக்கா :-** என்னடா முருகப்பிள்ளை பணம் இல்லைன்னு சொல்லிட்டாறா?

**சரவணம் :-** அது இல்லீங்கம்மா. சட்னி சதி செய்துட்டது.

**அக்கா :-** என்னடா ஔர்ரே.

**சரவணம் :-** வட்டிப் பணம் கொடுத்தாத் தான் ஆச்சுன்னு சத்தம் போட்டுக்கிட்டுத்தான் போனேன் முருகப்பிள்ளை பலகாரம் பண்ணிக்கிட்டு இருந்தாரு. ஆகா அந்த இட்லியும் அந்த சட்னி வாசனையும் சேர்ந்து என்னை அப்படியே ஒரு சுத்துச் சுத்திடுச் சும்மா. சரவணம் பலகாரம் சாப்பிடு, உட்காருன்னாரு. நானும் ஒக்காந்திட்டேன். அப்புறம் நான் யாரு எதுக்கு வந்திருக்கேங் கறதையே மறந்துட்டேன். இவ்வளவு இட்லியும் சட்னியும் சாப்பிட்டுட்டு எப்படியம்மா அவரைப் பணம் கேக்கறது. அதுவும் என்ன அசலா? வட்டி

தானேன்னு விட்டுட்டேன். நான் தோப்புக்கரணம் வேணும்னாலும் போட்டுடறேன்.

ராம் :- ஏது மண்ணாசை பொண்ணாசை இதை யெல்லாம் விட இந்த இட்லி ஆசை ஒரு பெரிய ஆசையா இருக்கும் போல இருக்கே.

சரவணம் :- (தோப்புக்கரணம் போட்டுக் கொண்டே) இந்த இட்லி ஆசையாலயே எங்க பாட்டன் வச்சிட்டுப் போன ரெண்டு காணியையும் வித்து செலவு பண்ணிட்டு இப்ப இந்த வேலையில இருக்கேன்.

ராம் :- அப்ப இந்தப் பாரத் ரத்ன, பத்ம விபூஷன்னு சொல்றாங்களே. அதுமாதிரி உனக்கு "இட்லி ரத்ன"ன்னு வைக்க வேண்டியதுதான்.

காட்சி-6

# ரோடு சீன்

[சேகர் கையில் கடிதமொன்றை வைத்துக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக ஏதோ யோசித்த வண்ணம் நடந்து கொண்டிருக் கிறான். கடைசியில் கையில் உள்ள சிகரெட்டைக் கீழே தூக்கி எறிந்து பூட்ஸ் காலால் தேய்க்கிறான். சிகரெட் துண்டைக் காலால் தேய்த்துக் கொண்டே...]

சேகர் :- அன்னிக்கு என்னடான்னா அந்த நிர்மலா அவ்வளவு அலட்சியமாகப் பேசினா. ஒரு வேளை அவ சித்தப்பன்கிட்ட போய்ச் சொல்லிருப்பாளோ

அப்படியும் தோணலையே. நேத்திக்குக்கூட சிரிச்சுத் தானே பேசினான் சர்மா...என்ன திமிரு (என்று சொல்லிக் கொண்டே கசங்கிய லெட்டரை மீண்டும் ஒரு முறை படிக்கிறான்)

சேகருக்கு...இன்று என் பெண் நிர்மலாவைப் பார்ப்பதற்காகக் கள்ளிப்பட்டி மிட்டாதாரிணி மரகதம் அம்மாள் வருவதால் வழக்கம் போல் இருக்கும் வாராந்திரக் கூட்டத்தை இன்று நிறுத்திவிட்டேன். காரணம் அந்த மரகதம் அம்மாள் கொஞ்சம் கர்நாடகப் பேர்வழியாக இருப்பதால் தான். மற்ற விவரங்களை நாளை தெரிவிக்கிறேன். நான் உங்களைச் சந்திக்கும் வரை என் வீட்டுப்பக்கம் தயவு செய்து வர வேண்டாம். சிரமத்திற்கு மன்னிக்கவும்

**சேகர் :-** (தனக்குள்) என்னமோ ஒரு ரௌடிக்கு லெட்டர் எழுதின மாதிரியில்ல இருக்கு. நான் என்ன போக்கிரியா? அப்படி நாகரீகம் தெரியாம காட்டுமிராண்டி போலப் பழகுவேனா.

[என்று யோசித்துக் கொண்டு மீண்டும் ஒரு சிகரெட்டை எடுத்துப் பத்த வைக்கிறான். அப்பொழுது கல்யாணமும், சந்தோஷமும் பேசிக் கொண்டு வருவதைப் பார்க்கிறான்)

**சேகர் :-** அதோ அந்த இரண்டு கோமாளிகளும் வர்ராங்க. சர்மா அவங்களுக்கும் இந்தமாதிரி கடிதம் எழுதியிருக்கிறானா பார்க்கலாம். அவுங்கதானே வாரம் தவறாம நாக்கைத் தீட்டிக்கிட்டுப்போறாங்க எதுக்கும், இப்படி மறைஞ்சுக்கிட்டு பாக்கலாம். (என்று சொல்லி விட்டு ஸ்டேஜ் அருகில் கர்ட்டனில் மறைந்து கொண்டு அவர்கள் பேசிக் கொண்டு வருவதைக் கவனமாகக் கேட்கிறான்)

**சந்தோஷம்:-** அதான் நானும் சொல்றேன் கல்யாணம். இந்த சர்மா இப்படிச் செய்வார்னு நான் கனாக்

கூடக் காணலை. அப்படி என்ன அந்தப் பொம்பளை புலியா? அவ வர்ரபோது நீங்கள்ளாம் வர வேண்டாம்னா என்ன அர்த்தம்.

**கல்யாணம்:-** அதான் மிஸ்டர் சந்தோஷம் எனக்கும் புரியல்லை. ஏன் இப்படித் திடீர்னு நம்ம மேல அவ நம்பிக்கை பிறந்து போச்சு.

**சந்தோஷம் :-** இந்தச் சர்மாவே இப்படித்தான். இத்தனை நாட்களா நாம் எல்லாம் ஜசன் ஹோவரையும் ஷியாங்கே ஷேக்போலவும் சினிமா ஹீரோயினும் கண்ணீரும் போலவும் கேஸ்கரும் கர்நாடக சங்கீதம் போலவுன்னா பழகிட்டு.

**கல்யாணம்:-** அது மட்டுமா? அவர் வீட்டு விருந்துன்னா ஒன்றுகூட விடாம அட்டெண்ட் பண்ணிட்டு.

[இப்படிக் கல்யாணம் சொல்லி முடிப்பதற்குள் ஸ்டேஜுக்கு அருகில் உள்ள சேகர் சபாஷ் சரியானபடி சர்மாவைத் திட்டுகிறேன் என்று கையைச் சுடக்கிக் கொண்டு]

**கல்யாணம், சந்தோஷம் :-** அடாடா வாங்க மிஸ்டர் சேகர்.

**சந்தோஷம் :-** உங்களுக்கு என்ன சேகர், எங்களுக்கு லெட்டர் எழுதி இன்ஸல்ட் பண்ணின மாதிரி சர்மா உங்களுக்கும் ஒரு லெட்டர் எழுதியிருந்தா?

**கல்யாணம் :-** அவருக்கு ஏங்க சர்மா லெட்டர் எழுதப் போறாரு. சேகர்தான் அவருக்கு மந்திரி. ரைட்ஹாண்ட் எல்லாமாச்சே.

**சேகர் :-** மந்தியுமில்லே மந்திரியுமில்லே. ஏனய்யா ஆளைப் பேச விடாம நீங்க பாட்டுக்கு முந்திரிக் கொட்டை மாதிரி முந்திக்கிறீங்களே. நமக்கும் லெட்டர் அனுப்பிச்சிருக்காரய்யா சர்மா.

**கல்யாணம் :-** என்னது, உனக்குக் கூடவா!

**சேகர் :-** ஆகா விபரமாகவே எழுதியிருக்கார். ஏன் மிஸ்டர் கல்யாணம்! நாம்ப அவங்க வீட்டுக்கு வர்ரது பிடிக்கல்லைன்னா கொஞ்சம் ஜாடையா ஏதோ எனக்கு அவசர வேலை இருக்கு அப்படி இப்படின்னு நாகரீகமா எழுத வேண்டாம்? நீங்கள்ளாம் காலிக் கழுதைங்க. இந்த மாதிரி சமயத்துல வர்ரதுக்கு unfitங்கிற மாதிரில்ல இருக்கு அவர் எழுதியிருக்கிற மொறை.

**கல்யாணம் :-** அப்படி நம்ம friendship தேவையில்லைன்னா ஒரே வார்த்தையில நறுக்கின்னு தெரிஞ்சாப் போலச் சொல்லி இருக்கலாமே.

**சேகர் :-** கரெக்ட் மிஸ்டர் கல்யாணம். இப்ப கொஞ்சம் Calm ஆகப் பதட்டப் படாம think பண்ணிப் பாருங்க.

**கல்யாணம் :-** அவர் வேண்ட்ராம்னு சொன்னாலும் ஏன் கழுத்தையே புடிச்சுத் தள்ளினாக் கூட இன்னிக்கு நாம அங்க போய் நம்மால முடிஞ்ச help செய்யணும்.

**சேகர் :-** அதையேதான் நானும் சொல்ல வந்தேன். இப்பப் பாருங்க, சர்மா என்னமோ சுபாவத்துல நல்லவர் தான். ஆனா அந்தக் கள்ளிப் பட்டி அம்மாக்கு எதிரே.

**கல்யாணம் :-** அது மட்டுமில்ல சேகர், அந்தப் பெண் நிர்மலா பாவம், சுத்த வெகுளி. அதுவும் தனியா என்ன பண்ணும்.

**வரதராஜன் :-** (வந்துகொண்டே) நமோன் நமக: அந்தப் பெருமாள் மகிமையை என்னதான்னு சொல்றது? உங்களை எல்லாம் ஒரு முக்கிய காரியார்த்தமாச் சந்திக்கலாம்னு புறப்பட்டேன். ஏதோ... பகவத் கிருபையால மூணு பேரையும் பெருமாள் ஒரே இடத்துல சேர்த்து வச்சிட்டார்.

**சேகர் :-** அடடெ வத்தக்குழம்பு வரதராஜனா வாங்க. ஏது நீங்க கூட ரொம்ப சுறுசுறுப்பாப் பேசறீங்களே.

**வரதன் :-** அட வெளையாட்டு கிடக்கட்டுங்காணும். சிறுபுள்ளைங்கறது சரியா இருக்கே. அது போகட்டும். ஏனய்யா அதென்னது உங்க நண்பர் சர்மா அன்னிக்கு இப்படி ஒரு பெரிய அஸ்தரத்தைக் கச்சிதமா ஒரு சின்ன லிகிதம் மூலமா தெரிவிச்சுட்டார்.

**சேகர் :-** ஏனய்யா இன்னிக்குச் சர்மா வராதேன்னு உனக்கும் ஓலை அனுப்பிச்சுட்டாரா.

**சந்தோஷம் :-** ஆசாமி எகிறிக் குதிக்கிறதிலேயே தெரியல்லை.

**சேகர் :-** பாவம் அவர் என்னய்யா பண்ணுவார். வாரத்துல ஆறு நாள் வீட்ல வத்தக் குழம்பு. ஏழாவது நாள் எதோ நிம்மதியா பெரிய feast சாப்பிடலாம்னு நெனச்சுக்கிட்டு இருக்கிறப்போ அந்த மனுஷன் இப்படித் திடீர்னு ஒரு குண்டைத் தூக்கிப் போட்டா.

**வரதன் :-** அவ்விடத்துலல்லாம் பேசிண்டு போறதைப் பார்த்தா அவ்விடத்துக் கெல்லாம்கூட சர்மா லிகிதம் வந்திருக்காப் போல இருக்கே.

**சேகர் :-** ஆகா எல்லாருக்கும் வந்திருக்கு.

**வரதன் :-** ச்சு...சூ.சூ மனசுக்குக் கேட்கவே ரொம்ப கஷ்டமாயிருக்கு. இந்த மாதிரி ஒரு மங்களகரமான காரியத்துல ஆப்தாளான நாம இல்லாமலா.

**சேகர் :-** சும்மா வளவளன்னு ஏன்யா பேசிக்கிட்டே போறீங்க. இப்ப நாங்களும் அதைப் பத்தித்தான் யோசனை பண்ணிக்கிட்டு இருக்கோம்.

**வரதன் :-** எல்லோரும் அவாவா அபிப்பிராயத்தைச் சொல்லணும்னு அபிலாஷிக்கிறபோது நீ ஏனய்யா புஸ்வாணம் மாதிரி நடுவில குறைக்கிறீர்.

**சந்தோஷம் :-** அடாடா அதுசரி கல்யாணம், இப்ப சர்மாவோ பெரிய சிக்கல்ல மாட்டிக்கிட்டார்ங்கிறது தெளிவாத் தெரியறது. வீட்டில வந்த விருந்தாளிங்களை வாங்கன்னு சொல்ல ஒரு பெண் பிள்ளைகூட இல்லையே.

**கல்யாணம் :-** என்னவோ போங்க; எனக்கு இந்தக் கல்யாணத்துல சர்மாவுக்கு நம்மாலான உதவியைச் செய்து வைக்காட்டி எனக்குத் தூக்கமே வராது போல இருக்கு.

**வரதன் :-** அதுலே ஆக்ஷேபணை என்ன. நாம ஏதோ கிஞ்சித்தானும் பர்மாவுக்கு உதவி பண்ணாம தீர்த்த பானம் பண்றது இல்லேன்னு நான் பெருமாள் முன்னாடி, சங்கல்பம்னா பண்ணிண்டு இருக்கேன்.

**சேகர் :-** எனக்கு நல்ல ஐடியா தோண்றது. அதுப்படிப் பண்ணிட்டா சர்மாவும் சந்தோஷப் படுவார். அந்த அம்மாவையும் impress பண்ணலாம். நாம கிராண்டா அவங்களுக்கு ஒரு வரவேற்பு கொடுப்போம். சும்மா அப்படியே அவங்க அசந்துடு வாங்க. சர்மா நம்மைக் கூப்பிடாட்டியும் பரவாயில்லை.

**வரதன் :-** அப்பொ சாயரக்ஷை எல்லாரும் அங்கே போயிடாலங்கிறியா?

**சேகர் :-** கரெக்ட்ட...அதே தான் மிஸ்டர் சந்தோஷம்: நீங்க மற்ற பிரண்ஸ்ங்ககிட்டச் சொல்லிடுங்க.

**வரதன் :-** ஏய்யா இதிலே ஒண்ணும் கோணமாணல் நடந்துடாதே.

**சேகர் :-** அட நீங்க ஒண்ணு. ஒண்ணும் நடக்காது.
[மூவரும் போகின்றனர்]

**சேகர் :-** (சிரித்துக் கொண்டே) இந்த மாதிரி கோமாளிகள் இருக்கிற வரையில் எனக்கு என்ன கவலை.

[போகிறான்]

காட்சி—7

## பர்மா, சர்மா வீடு

**நிர்மலா :-** என்ன சித்தப்பா, இந்த ரவி அக்கான்னா ...ஏன் எல்லாருமே இப்படி நடுங்கறாங்க?

**சர்மா :-** அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லேம்மா. அவங்க கொஞ்சம் கர்நாடகம் போல இருக்கு.

**நிர்மலா :-** அதென்னமோ சித்தப்பா...அதுவும் இந்த ராம் சொல்றதெப் பார்த்தா...

**சர்மா :-** நோ...நோ...நீ அப்படியெல்லாம் அவசரப்பட்டு ஏதாவது பண்ணி காரியத்தைக் கெடுத்துடாதே...அதுவும் ராம் சொல்ற போது நாம ரொம்ப ஜாக்ரதையாத்தான் இருக்கணும்.

**நிர்மலா :-** இந்த ராம் பெரிய கோமாளி சித்தப்பா.

**சர்மா :-** சே...சே...நிர்மலா ராமை உனக்குத் தெரியாதா என்ன......

அவன் மாதிரிகோடியிலே ஒரு பையன் அகப்படறது கூட கஷ்டம்மா...எவ்வளவு சொத்து இருக்கு,

கொஞ்சமாவது கர்வமுண்டா...எப்பவும் சிரிச்சு தமாஷாப் பேசி எல்லாத்தையும் மங்களகரமா முடிப்பான்.

நிர்மலா :- என்ன சித்தப்பா யாரோ புது ஆளைப்பத்தி சொல்ற மாதிரின்னா எனக்குச் சொல்றிங்க.

சர்மா :- இல்லைம்மா ... அந்தப் பையனைப்பத்தி நெனைச்சாலே எனக்கு ஒரு தன்னல மற்ற தியாகிங்கிற எண்ணம்தான் வறது.

நிர்மலா :- ஆமா...ஏதோ ரிகர்ஸல் பண்ணப் போறேன் ...ஆ...ஊ ன் ன ா ன். ஆறு மணியாறது இன்னும் காணமே இந்த ராமை...

சர்மா :- கவலைப்படாதே நிர்மலா... எ த் த னை பேரை எப்படிச் சமாளிக்கணுமோ...வந்துடுவான் பாரு......

நிர்மலா :- ஏன் சித்தப்பா: கல்யாணம் ஆனவுடன் உங்களை விட்டுப் பிரிஞ்சு எப்படித்தான் போகப் போறேன்னே தெரியலை.

சர்மா :- (தயங்கிய குரலில்) அதெல்லாம் ஒண்ணும் பயப்படாதேம்மா...என்ன தான் நான் உன்னைச் செல்லமா வளத்தாலும், என்னிக்காவது ஒரு நாள் வேறொருத்தன் வீட்டுக்குப் போக வேண்டியது தானேம்மா...நம்ம குலப் பெண்களுக்கு அழகு...

நிர்மலா :- சித்தப்பா! நீங்க என்னதான் தைரியப் படுத்தினாலும் எ ன் ம ன சு பட்பட்னுதான் அடிச்சுக்குது.

[லேசாகக் கண்களில் தளும்பும் நீரைத் துடைத்துக் கொள்கிறாள்]

சர்மா .- சே...சே—அசடே ... எவ்வளவுதான் படிச்சாலும், பெண்பிள்ளைகள் கோழை தாங்கிறதை. நீயே நிரூபிப்பே .. போலிருக்கே......

[அப்போது ராம்...ஹா ஹா என்று கூச்சல் போட்டுக் கொண்டு, கல்யாணம், கல்யாணம், என்று பாடிக் கொண்டே வருகிறான்]

ராம் :- என்ன சர்மா...சகுந்தலை கண்வர் கட்டமா?' ...சபாஷ்!

சர்மா :- அடாடா ... ராமா ... வாப்பா. எங்கே இத்தனை நேரம் ஆள் வராமெ கலக்கிட்டியே...

நிர்மலா :- அப்படிக் கலக்கிவிட்டு அப்புறம் கையைக் கொட்டிட்டுச் சிரிக்கிறது தானே அவர் வழக்கம்...

ராம் :- என்னை நிர்மலா ஸ்டட்டி பண்ணியிருக்கிற மாதிரி, என்னைப் படைச்சவன் ஸ்டட்டி பண்ணி யிருப்பானா...என்னமோ...சந்தேகந்தான்...

சர்மா :- அதெல்லாம் கிடக்கட்டும் ரவி. அக்கா திருவாய்மொழி திறந்து என்ன சொன்னாங்க. இன்னிக்கு வர்ராங்களா...இல்லையா?

ராம் :- சர்மா ... மரகதம்மாள் சமாசாரம் உங்க ளுக்குத் தெரியாது. அவுங்க வர்ரேன்னு ஒரு தரம் சொல்லிட்டாங்கன்னா அப்பறம் கழுத்தைப் புடிச்சுத் தள்ளினாக்கூடப் போக மாட்டாங்க.

நிர்மலா :- (வெட்கத்துடன்)

[மேஜையில் ஏதோ விரலால் கிறுக்கிக் கொண்டு]
ஆமா....ஏன் ராம், கூடவே ரவி வர்ராரு இல்லே?

ராம் :- (நிர்மலாவைப் போன்று நடித்துக்கொண்டு) ஆகா! கட்டாயமா அவரும் வர்ராரு...எச்சிலை முழுங்கிட்டு தானா ஆடுமாதிரி வர்ரான்.

சர்மா :- அதென்னம்மா...உனக்கு இப்படி ஒரு சந்தேகம் திடீர்னு...

ராம் :- எங்க அக்காவைப் பத்தி இந்த மாதிரி ஒரு சந்தேகப் பட்டாக்கூட தப்பு இல்லே...ஏன்னா நான் பொண்ணைப் பாக்கப் போறப்பொ, ஒனக்கு என்னடா அங்கெ வேலைன்னு பட்டுன்னு ஒரு போடு போட்டாலும் போடுவாங்க...நம்ப ரவியும் அப்படியே மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்துடு வான்...சரி...சரி...நிர்மலா நாம...என்ன ஆரம்பிக்க லாமா இப்ப ரிகர்ஸலை...ஒரு ஊருக்குக் கவர்னர் வர்ராரு...அதாவது வெள்ளைக்காரக் கவர்னரைச் சொல்றேன் ... கலெக்டர் எங்கே நிக்கறது? ... போலீஸ் சூபரெண்டன்ட் எங்கே நிக்கறது...யார் முதல்லே போய் மாலை போடுறது...அப்படி யெல்லாம் ரிகர்ஸல் பண்ணுவாங்க...

சர்மா :- ஏன் ரவி அக்காவும் கள்ளிப்பட்டி கவர்னர் தானே.

ராம் :- அவுங்க வந்தவுடனே...சர்மா நீங்க ஆசார உபசாரம் பண்ணி எதிர்கொண்டு அழைக்கணும்... அதெல்லாம் உங்களுக்கு நான் சொல்லித் தர வேண்டியதில்லே. இங்கே இருந்து அவுங்க ஊருக்குத் திரும்பிப் போறதுக்குள்ளே, அவங்களே நீங்க கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்குக் கொண்டு வந்து வச்சுடுவீங்க...உங்க பேச்சுச் சாமர்த்தியத்திலே.

சர்மா :- சும்மா இருடா ஊசிப் பட்டாசு.

ராம் :- சர்மா...ஒரு சின்ன சந்தேகம். நீங்க ரவி அக்காவை இதுக்கு முன்னே சந்திச்சு இருக்கீங்க இல்லே?

சர்மா :- ஞாபகமில்லையே...ஆனா கேள்விப்பட் டிருக்கேன்.

ராம் :- வெளையாடாதிங்க ... கும்பகோணம் ஸ்டேஷன்லே ஸெகண்ட் கிளாஸ் வண்டியிலே

உங்களைப் பார்த்ததாக அக்கா சொன்னாங்க... நீங்க...டிக்கெட் வாங்காமெ...ஸெகண்ட் கிளாஸ் வண்டியிலே ஏறி...திணறிப் போயி...அப்பறம் எப்படியோ சமாளிச்சதாகச் சொன்னாங்க...ஏன் எங்கிட்டெயே மூடறீங்க?

சர்மா :- மூடறது என்னடா...நான் எப்படா கும்ப கோணத்துக்கு டிக்கெட் வாங்கிப் போயிருக்கேன்? அந்த வழக்கமே நம்மகிட்டெ கிடையாது, அசடு! நான் ரயில் வண்டியிலே ஒக்காந்தா...அப்பறம் என்னை வந்து ஒரு பய டிக்கெட் கேப்பானாடா... நம்ம பர்ஸ்னாலடி தாண்டா நமக்கு டிக்கெட்டு...

நிர்மலா :- ஏன் சித்தப்பா, நெஜமாவாச் சொல்றீங்க. என்னை எவ்வளவோ தடவை ரயில்லே கூட்டிக்கிட்டுப் போயிருக்கீங்களே. அப்பல்லாம் டிக்கெட்டே வாங்கினது கிடையாதா?

சர்மா :- இல்லே குழந்தை! இந்தப் பயலுக்காகச் சும்மாச் சொன்னேன். டிக்கெட் நான் வாங்க மாட் டேனே ஒழிய யாரையாவது ஒருத்தரை விட்டு வாங்கச் சொல்லுவேன்

ராம் :- நல்லா பல்டி அடிக்கிறீங்களே நீங்க. என்ன பர்மா சர்மாவா...இல்லே சம்மர் சால்ட் சர்மாவா...

சர்மா :- [தன் வயிற்றைத் தடவிக் கொண்டே] என்னைப் பாத்தா பல்டி அடிக்கிறவன் மாதிரியா தோணுது?

ராம் :- அதுபோகட்டும் சர்மா நீங்க டிக்கெட் வாங்காமெப் போறீங்களோ இல்லே யாரை யாவது விட்டு வாங்கச் சொல்லிட்டுத் தான் போறீங்களோ அதைப்பத்தி இப்பொ நமக்கு அக்கறையில்லை...அக்கா வந்து ஏதாவது கேட்டாக் கூட கும்பகோணம் ஸெகண்ட கிளாஸ் டிக்கெட்டு...

ஏன் ரயில் இந்த மாதிரி? ஸப்ஜெட்டுகளெல்லாம் பத்தி ஆரம்பிக்காதிங்க ... முன்னாடியே சொல்லிட்டேன். காதுலே விழாத மாதிரி நடந்துக்கங்க...அப்படி அக்கா கும்பகோணம் இன்ஸிடெண்டைப் பத்திக் கேட்டா ... சத்தியமா நான் ரயில்லேயே ஏறினதில்லேன்னு சொல்லிடுங்கோ.

**சர்மா :-** நான் இதைப் பத்தியெல்லாம் பேசறேன். ஏரோப்ளேன், ஏர்ஹோட்டல், கிண்டிஎன்ஜினியரிங் காலேஜ் இதுகளைப் பத்தியே பேசிக்கிட்டிருக்கேன்.

**நிர்மலா :-** என்ன சித்தப்பா இது...அவங்களுக்குப் பயந்திண்டு நாம என்ன அடிமையாயிடறதா?... இந்த மாதிரி கல்யாணமே எனக்கு வேண்டாம் சித்தப்பா.

**ராம் :-** ஐயையோ காரியம் கெட்டுது போ ... அக்கா இல்லாதப்பவே இப்படிச் சினிமாவுலே சோகமான கட்டத்திலே சோடா பாட்டிலை ஒடைக்கிற மாதிரி, வெடிக்கிறியே...அப்பறம் ரவிக்கு என்ன ஆறது?

**சர்மா :-** நிர்மலா! ரவி ரொம்ப நல்ல பையன்... அவனைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்காகக் கொஞ்சம் விட்டுக் கொடுத்தாத்தான் என்ன?

**நிர்மலா :-** சரி...என்ன பண்ணணும் சொல்லு ராம்.

**ராம் :-** அக்கா சிரிச்சா, நீ சிரிக்கணும். அக்கா ஏதாவது தவறாச் சொன்னாலும் நீ பதவிசா நடந்து கொள்ளணும். அக்காவுக்கு எதித்தாப்போல, ரவியை விழுங்கிற மாதிரி பாக்காதே! கொஞ்சம் அடக்கமா, சீல் பண்ணின சொம்புலே அடைச்ச கங்கைத் தண்ணி மாதிரி...தளும்பாமெ இரு!

**நிர்மலா :-** முயற்சி பண்றேன். முடியலேன்னா.............. கிளம்பிடுவேன்.

ராம் :- சரி...மொதல்லே இந்தப் பைஜாமாவைக் கழட்டிட்டு, நம்ம நாட்டுப் பொண்ணு மாதிரி உடையை மாத்திக்கிட்டு, உள்ளேயே இரு. அக்கா வந்தப்பறம்...சமயம் பாத்து நான் கூப்பிடுவேன். அப்பொ நீ தலை குனிஞ்சு, கால் கட்டை விரலைப் பார்த்துவிட்டு வந்தாப்போதும்.

[நிர்மலா உள்ளே போகிறாள்]

சர்மா :- வாழ்க்கையிலேயே நான் படிஞ்சு நின்னது இந்தச் சமயம் தான்...

[கடிகாரத்தைப் பார்க்கிறார்]

அடே...டே...மணியாறதே...

ராம் :- அதோ...கார் சத்தம் கூடக்கேக்குதே. அவங்களாத்தான் இருக்கும்...நான் போயி கூட்டி யாரேன்.

[சர்மா அங்குள்ள மேஜை ஒன்றில் சில சாமான்களைச் சரியாக எடுத்து வைத்து தயாராகிறார். மாம்பழத்தட்டுடன் சரவணம் முதலில் உள்ளே நுழைகிறான். அதற்குப்பின், கம்பீரமாக, அக்கா வருகிறாள். பின்னால் ரவி வருகிறான். ஓடிப் போய் வரவேற்கிறார்.]

சர்மா :- வாங்க...வாங்க...

அக்கா :- உஹூம்.

[எனக் கனைக்கிறாள்]

சர்மா :- நீங்க இன்னிக்கு இந்த வீட்டுக்கு வந்ததே எங்களுக்கு ஒரு பெரிய கௌரவம்.

அக்கா :- உஹூம்...

சர்மா :- கள்ளிப்பட்டியிலே இருக்கிற சிநேகிதங்க சிலர், ஒங்களைப்பத்தி ரொம்பப் பிரமாதமாச் சொல்லியிருக்கா...

அக்கா :- உஹூ ம்...

ராம் :- என்ன அக்கா! அவரு பேசிக்கிட்டே இருக்காரு ...நீங்க ஸைரன் மாதிரி ஊதிக்கிட்டே இருக்கிங்களே...

சர்மா :- ராம்! உனக்குத் தெரியாது. சில பெரிய இடங்கள்ளே அப்படித்தான். வார்த்தைகளாகச் சொல்ல வேண்டியதைச் சப்தத்தாலேயே சொல்லிடு வாங்க...

சரவணம் :- ஆமாங்க...பெரிய இடங்கள்ளே சத்தம் வாயிலே இருந்து மட்டும் வராது...

அக்கா :- சரவணம்!

[சரவணம் தோப்புக்கரணம் போட ஆரம்பிக் கிறான்]

ராம் :- நிறுத்துடா ... இதென்ன புள்ளையார் கோயிலா?...

அக்கா :- (அங்குள்ளவருமை ஒரு முறை கண்ணோட் டம் விட்டு) கதவெல்லாம் ஏன் மூடிவச்சிருக்கு? ஜன்னல் கதவெல்லாம் திறந்து வச்சா, நல்லா காத்து வராதா?

சர்மா :- திறந்துவிட வேண்டியதுதான் ... அக்கா நீங்க இங்கெ வந்து உக்காருங்க...

அக்கா :- உங்களுக்கு என்னய்யா...நான் அக்கா?

சர்மா :- ஹி .. ஹி ...நம்ம ரெண்டு குடும்பமும்தான் ஒண்ணு சேரப் போறதே...அக்கான்னே கூப்பிட்டா நல்லது...

அக்கா :- சேர்ரதா - இல்லையாங்கிறதை நிர்ணயம் பண்ணத்தானே இங்கே வந்திருக்கோம்...இல்லையா ரவி!

ரவி :- (அசடு வழிய) ஹி ஹி...ஆமா...மாம்...

அக்கா :- பர்மா சர்மான்னு கேள்விப்பட்டவுடனேயே நான் சந்தேகிச்சேன். இப்ப உங்களை நேரிலே பாத்தவுடனே அது ஊர்ஜிதமாவே ஆயிடுச்சு... நீங்கதானே...கும்பகோணம் ஸ்டேஷன்லே...போன மகா மகத்தப்போ......

சர்மா :- கும்பகோணம் - மகாமகம்... தெரிலியே... மகாமகம் நான் வந்ததில்லையே...நீங்க யாரையோ நினைச்சுக்கிட்டிருக்கீங்கன்னு நினைக்கிறேன். நீங்க சொல்ற சமயத்திலே ஒரு பிஸ்னஸ் டீல் சம்பந்தமா, டெல்லிக்குப் போயிருந்தேன். நான் பர்மாவிலே இருந்தப்போ, என்னோட பிரண்டுகூட சர்மான்னு ஒருத்தர் இருந்தார். கிட்டத்தட்ட எம்மாதிரியே இருப்பார். லெட்டர்கூட மாறிப் போறதுண்டு.

அவர் கொஞ்சம் ரிலிஜயஸ் மைண்டட் மேன். ஒரு வேளை நீங்க அவரை மீட் பண்ணி இருக்கலாம். ஒண்ணா...நான் டெல்லிக்குப் போயிட்டு வந்தப்புறம் மதராஸில் அவரை மீட் பண்ணினேனோ... ஏதோ இப்படிப் பேசிக் கொண்டிருக்கப்போ ... கும்பகோணம் மாதிரி டர்ட்டி பிளேஸ் கிடையாதுன்னு சொன்னார்.

ராம் :- ய்யோவ் சர்மா...நீர் சரியான ஆளுய்யா?

அக்கா :- அது போகட்டும்...ஏன் சர்மா...உங்க பொண்ணுக்குச் சொத்து இருக்குதுன்னாங்களே. அதெல்லாம் என்ன நெலமாவா ... நெலம்னா நஞ்சை எவ்வளவு? புஞ்சை எவ்வளவு?

சர்மா :- நிலமாயில்லை. எல்லாம் கேஷும் இந்த வீடும்தான். உம்...மொதல்லே...கேஷ் கொஞ்சமாத் தான் இருந்துது. அதைப் பிஸனஸ்லே போட்டு விருத்தி பண்ணியிருக்கேன்.

அக்கா :- உம்...இந்த வீடு ஒண்ணும் பிரயோஜன மில்லை — ஆமா ... பணத்தையெல்லாம் வந்து பேங்க்லே போட்டிருக்கீங்க?

சர்மா :- அதான் நம்ம ஊர் தெப்பக்குளம் பேங்க்கிலே போட்டிருக்கேன். உங்க பெரியப்பா கள்ளிப்பட்டி ஜமீன்தார் அந்தப் பேங்க் பிரஸிடெண்டுதானே! வட்டிகூட நெறையவே தர்ராங்க.

அக்கா :- மொதல் தரப் போரதில்லே... வட்டிதான் கொடுக்கப்போறான். எங்க மாமாகூட அந்த பேங்க்கிலே இருந்து விலகிக்கிடணும்னு சொல்லிக் கிட்டிருந்தாரு......அந்தப் பேங்க்லே என்னமோ கண்ட சர்க்கஸ் கம்பெனிக் காரங்களெ நம்பி கடன் கொடுக்கிறாங்களாமே! உங்க பணத்தை எல்லாம் மாத்தி நீங்க தெப்பக்குளத்திலேயே மிதக்க விட்டுடலாமே.

சரவணம் :- அம்மாவ்! சர்க்கஸ் கம்பெனிக்குக் கொடுத் திருந்தா யானை, குதிரையாவது மிஞ்சும்.

அக்கா :- சரவணம்!......

சரி சரி... பொண்ணு எங்கே இருக்கு? பொண்ணைப் பாக்க வேண்டாமா?

சர்மா :- நிர்மலா!...நிர்மலா!

[என்று கூப்பிடுகிறார்]

ராம் :- இதோ நான் போயி கூட்டிகிட்டு வந்துடறேன்.

[என்று சொல்லிவிட்டு ராம் உள்ளே போகிறான்]

[நிர்மலா, புல்லாக்குப் போட்டுக் கொண்டு தாழம்பூ பின்னலுடன் காலணா அகலத்தில் நெத்தியில் குங்குமத்துடன் தலையைக் கீழே குனிந்து கொண்டு இருக்கிறாள்]

சர்மா :- அவர்களுக்கு நமஸ்காரம் பண்ணும்மா.

[நிர்மலா நமஸ்காரம் பண்ணுகிறாள்]

சரவணம் :- லெஷ்மி கணக்கா இருக்காப் பொண்ணு.

அக்கா :- எங்கேயோ பாத்த மாதிரி இருக்கே...

சரவணம் :- எனக்கும் அப்படிதாம்மா படுது.

[நிர்மலாவும் அக்காவை அடையாளம் தெரிந்து கொள்கிறாள். சமாளிக்கிறாள்]

அக்கா :- இன்னிக்குக் காலையிலே நான் ஸ்டேஷன்லே இருந்து வரப்போ ஆம்பளெ உடையிலே மோட்டார் சைக்கிள் விட்டுக்கிட்டு ஒரு பொண்ணு எம்மேலே வந்து மோதினா. அந்தப் பொண்ணுகூட நிர்மலா மாதிரிதான் இருந்துது. அப்பப்பா என்ன பேச்சு பேசினா...

சர்மா :- அது......

அக்கா :- இந்தப் பொண்ணு மாதிரி வேறெ ஒரு பொண்ணுகூட இந்த ஊர்லே இருக்காளோ...

[இப்பொழுது சரவணம் சற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவன் ஸ்டேஜுக்கு ஒரு பக்கமாக வருகிறான். மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கிறான். ஆச்சரியமடைந்தவனாய் "அம்மா" என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்கிறான். ராம் அத்தை யின் சம்பாஷணையிலிருந்து விபரம் புரிந்து கொள்கிறான். சரவணத்தை நெருங்கி]

ராம் :- ஏய்! ஏதாவது வாயைத் திறந்தே தொலைச்சுடுவேன்.

சரவணம் :- காலையிலே இதாங்கம்மா மேலெ வந்து மோதினது...

ராம் :- அதனாலேதான் அதைப் பத்திப் பேசக் கூடாது...வாயைத் திறக்காமெ இருந்தே ஊருக்குப் போறப்ப பத்து ரூபாயைப் பையிலே திணிப்பேன். இல்லை ... இதைப் பத்தி ஏதாவது பேசினே கழுத்தைத் திருகிப் போட்டுடுவேன். சைக்கிளை எடுத்துக்கிட்டுப் போய் அந்தப் பக்கமா வைடா...

அக்கா :- ஏய் சரவணம்!...எங்கே போயிட்டான்?

ராம் :- யாரோ ஒரு பொண்ணு மோட்டார் சைக்கிள்ளே ஆம்பளெ உடையிலே போறான்னுட்டு அதை வேடிக்கைப் பாக்கப் போயிட்டான்.

அக்கா :- வேலையை விட்டுட்டு வேடிக்கைப் பாக்கிறது தானே அவன் வேலை.

நிர்மலா :- அக்கா! நீங்க பலகாரம் சாப்பிடுங்க...

சர்மா :- ராம்! நீயும் எடுத்துக் கோப்பா.

அக்கா :- ராம்! நீயும் எடுத்துக் கோப்பா.

நிர்மலா :- (சாப்பிட்டுக் கொண்டிருக்கும் அக்காவிடம்) இன்னும் கொஞ்சம் கேசரி போட்டுக் கோங்க அக்கா.

சர்மா :- வீட்டில பெரியவங்களா பெண் பிள்ளைங்க யாரும் இல்லாததினாலே நிர்மலாவே எல்லாத்தை யும் கவனிக்கும்படி ஆயிடுத்து.

அக்கா :- படிச்ச பொண்ணாச்சே...வீட்டு வேலை யெல்லாம் தெரியாதாக்கும்னு நெனைச்சேன்.டிபன் எல்லாம்கூட ஹோட்டல் மாதிரி நல்லாவே இருக்கே.

ராம் :- நிர்மலாவை என்னன்னு நினைச்சீங்க . அக்கா... பரீட்சையிலும் பாஸ் பண்ணத் தெரியும்—மோர்க் கொழம்பும் வைக்கத் தெரியும்—மோட்டார் பைக்கும் விடத் தெரியும்.

அக்கா :- என்னடா—மோட்டார் பைக்கா!

சரவணம் :- (உள்ளே வந்து கொண்டே) ஆமாம்மா, மோட்டார் பைக்கேதான். காலையிலே உங்க மேலே இடிச்சுத் தள்ளினாளே ஒரு பொம்பளே—மோகினிப் பிசாசு...அவ இப்பத்தான் போறா... பார்த்தேன். நம்ப நிர்மலாம்மா மாதிரியே இருக்கு. இவங்களுக்கு அந்த உடையைப் போட்டா அப்பறம் ரெண்டு பேருக்கும் வித்யாசமே கண்டு பிடிக்க முடியாது.

அக்கா :- எனக்கென்னமோ எல்லாம் ஒரே புதிரா இருக்கு. இந்த வீட்லே இருக்கிறவங்க எல்லாருக்குமே வெளியிலே ஒரு டூப்ளிகேட் இருக்காப் போல இருக்கு...

ராம் :- பின்னெ என்ன அக்கா. என்மாதிரியும் உம்மா திரியும் தனிப் பிறவியா இருக்க முடியுமா?

அக்கா :- அது சரி. நிர்மலாவுக்குப் பாடத் தெரியுமா?.

நிர்மலா :- கொஞ்சம் கொஞ்சம் தெரியும் அக்கா.

ரவி :- ஆடக்கூடத் தெரியும்.

அக்கா :- ஆட்டம் வேண்டாம். உனக்குத் தெரிஞ்ச பாட்டே ஏதாவது பாடு!

[நிர்மலா பாடுகிறாள். அவள் பாடி முடிக்கும் போது வெளியிலிருந்து ஒரு பெரிய கீர்த்தனையில் ஒரு அடி கேட்கிறது]

[எல்லோரும் திகைத்துத் திரும்புகின்றனர்.]

அக்கா :- என்ன இந்த வீட்லே செவரெல்லாங்கூடப் பாடுமோ...

**சர்மா :-** (கவலையுடன்) சேகர் குரல் மாதிரி இருக்கே. அவங்களைத்தான் வரவேண்டான்னு சொல்லி யிருந்தேனே, இன்னிக்கு.

**சேகர் :-** ஹல்லோ... சர்மா.... உங்க லெட்டர் கிடைச்சுது. இன்னிக்கு மீட்டிங் இல்லைன்னு ... அதுவும் நிர்மலாவைப் பெண் பார்க்க வர்வாங்கன்னு தெரிஞ்சுது. உடனே ஓடோடி வந்தேன். ஏதாவது ஹெல்ப் பண்ணலாம்னு...

**சர்மா :-** நீ ஒண்ணும் ஹெல்ப் செய்ய வேண்டாம் உட்காரப்பா...

**சேகர் :-** என்ன சர்மா அப்படிச் சொல்லிட்டிங்க... கள்ளிப்பட்டி பப்ளிக்குக்கெல்லாம் தெரிய வேண்டாம் சர்மா பிரண்டைப் பத்தி. நீங்க என்ன ஏதோ சூதாட்டம் நடத்தற மாதிரி ரகசியமா முடிக்கிறிங்களே!

[அக்காவைப் பார்க்கிறான்]

ஹல்லோ.

[கையைக் குலுக்குகிறான்]

**அக்கா :-** (வெடுக்கென கையை உதறி) ஏய்...கையை விடுடா...மருந்து பாட்டிலைக் குலுக்கிற மாதிரி ஒரே யடியா கையைப் போட்டுக் குலுக்கிறே...

**சர்மா :-** இவர்தான் நம்ம பிரெண்டு...மிஸ்டர் சேகர்... கொஞ்சம் மேல் நாட்டு மோஸ்தர்லே இருப்பாரு... நம்ம பிரன்ட்ஸ்கள் எல்லாருமே மாடர்ன் ஆக இருப்பாங்க...அதனாலே ஒண்ணும் வித்யாசமா நெனைச்சுடாதிங்க...

**அக்கா :-** அதுசரி...

[மறுபடியும் சம்ஸ்கிருதத்திலே ஒரு சுலோகம் கேட்கிறது.]

பரித்ராணாய சாதூனாம், விநாசாய சாதூனாம்.

**அக்கா :-** இதென்னது...மொதல்லே இங்கிலீஷ் ட்யூன்.. இப்ப சுவரெல்லாம் சம்ஸ்கிருதம் பேசறதே...

[சர்மா, ராம் எல்லாரும் முழிக்கின்றனர்]

**வரதன் :-** சமிக்ஞயா...இன்னிக்கு வர வேண்டாம்னு சொல்லியிருந்தேள். சர்மா...என்னதான் இருந்தாலும் பாசம் விடறதா...வேத அத்யயனம் பண்ணினவன்...நான் வர்ரதுனாலே கொழந்தை நிர்மலாக்கும்...இந்தக் காரியத்துக்கும் நல்லதுதான். என்ன சர்மா...லங்கா பட்டணத்தைச் சேந்தவா மாதிரி கம்பீரமா அங்கே உக்காந்திண்டிருக்காளே... அவாதான் மாப்பிள்ளையோட தமக்கையோ...

**சர்மா :-** ஓய் என்னய்யா இது?

**வரதன் :-** எல்லாம் கொழந்தை க்ஷேமத்தையும் தங்கள் க்ஷேமத்தையும் உத்தேசித்துத்தான்...நான் வந்திருக்கிறது. எங்க மாமியாரின் சிறு தோப்பனாரோட பேத்தி கள்ளிப்பட்டியிலேதான் இருக்கா...அந்தக் குட்டி சொல்லித்தான் அவிடத்து மகிமையை நான் தெரிஞ்சுண்டது. ஏதோ உங்களைப் போல பெரியவாளைப் பாக்க வர்ரபோது வெறுங்கையா வரக் கூடாதுங்கிறது ஐதீக்ம்...சொர்ணம் கொடுக்கிறது உண்டு...வைரம் கொடுக்கிறது உண்டு...அதாவது வெள்ளியாவது கொடுப்பா...ஆன்னா அதுக்கெல்லாம் நான் அசக்தனா இருக்கேன்.அடியேன் நாமதேயம்-வத்தக் கொழம்பு வரதராஜங்கறது...அவிடத்திலே பெரிய மனசு பண்ணி அதை அங்கீகரிக்கணும்...

**அக்கா :-** வத்தக் குழம்பா...ஏய் ...ராம் என்னடா அது...

ராம் :- எனக்கென்ன தெரியும்... ஏய் ... நிறுத்துடா— கொழம்பு தூக்கி...

வரதன் :- மிலேச்ச பாஷையிலே பேசறதே இந்த அபஸ் மாரம்—நீங்க பெரிய மனசு பண்ணி...இதைச் சாப் பிட்டுத் தான் தீரணும்.

[என்று சொல்லிக்கொண்டே அக்காவை நெருங்குகிறான். அக்கா தடுக்கிறாள். வரதன் அக்காவின் வாயில் கிண்ணியைக் கவிழ்த்து விடுகிறான். அக்கா தூ...தூ...எனத் துப்பி விடு கிறாள், முகத்தில் எச்சிலைத் துடைத்துக் கொண்டு]

பெரியவாள் உச்சிஷ்டத்தைப்பத்திப் பல புராணங் கள்ளே சொல்லியிருக்கு...பரவாயில்லே. தொடைச் சுண்டுட்டேன்.

[இதைப் பார்த்த சர்மா கோபங் கொண்டு வரதனைக் கீழே தள்ளுகிறார்.]

சர்மா :- போங்கடா வெளியிலே...

சந்தோஷம் :- (அக்கா கையைக் குலுக்குகிறார்)

அக்கா :- கையை விடுய்யா...அப்பாப்பா...கையை எல்லாரும் எடுத்துக்கிட்டுப் போயிடுவீங்க போலிருக்கே...குலுக்கி...குலுக்கி...

சந்தோஷம் :- ஏன் சர்மா! ஸிஸ்டருக்குப் பிளட் பிரஷரோ...படபடன்னு பேசராங்களே...

சேகர் :- எங்கிட்டேயும் அப்படித்தான் பேசினாங்க...

சந்தோஷம் :- என்ன 180 இருக்குமோ –

அக்கா :- மொகரெக்கட்டே....

சந்தோஷம் :- இன்னும் மேலேயே இருக்கும் போல இருக்கே...நீங்க படபடப்பா பேசப் படாது...பிளட்

பேஷண்டுகளைப் பத்தி இப்ப ஒண்ணும் சொல்ல முடியலே. இந்த மாதிரி கேஸ்கள்ளாம் 4 மாசத்திலேயும் போயிடுவா — நாலு நாள்ளேயும் போயிடறது உண்டு. அப்படியே நின்ன வாகுலேயே திடீர்னு வாயைப் பொளக்கிறவங்களும் உண்டு.

**அக்கா :-** ஏய்! நான் இங்கே கல்யாணத்துக்குப் பொண் பாக்க வந்திருக்கேன். கருமாதியைப் பாக்க வரல்லே ஏய் ராம்! என்னடா இது. இவங்க ரொம்ப அட்டூழியம் பண்றாங்க. ஏதோ என்னை அவமானப் படுத்தணும்னே சர்மா முன்னேற்பாடா செஞ்ச மாதிரின்னா இருக்கு.

**சந்தோஷம் :-** ஏன் ராம்! இப்ப எனக்கு ஒரு ஐடியா ஸ்ட்ரைக் ஆகுது. இந்த நிர்மலா—ரவி—கல்யாண முகூர்த்தத்திலேயே அக்காவுக்கும், சர்மாவுக்கும் கல்யாணத்தை நடத்திட்டா!

**அக்கா :-** ஏய்! பல்லைத்தட்டி கையிலே குடுத்திடுவேன். வாடா ரவி! (போகிறாள்.)

## காட்சி-8

### ரவி அறை

**அக்கா :-** நிர்மலா, நிர்மலா உனக்கு அந்தப் பைத்தியம் தெளியாது போலிருக்கு. நான் தான் எங்கேயாவது ஒரு குளம் குட்டையிலே விழுந்து சாக வேண்டியதுதான்.

**ராம் :-** எந்தக் குளத்தைச் சொல்றிங்க. அந்தப் புள்ளையார் கோவில் பக்கத்திலே இருக்கே அதா அல்லது அந்தக் குடியானத் தெருக்கும் பள்ளத் தெருக்கும் பக்கத்திலே இருக்கே அதா.

**அக்கா :-** நீதான் ரவியைக் கெடுத்துக் குட்டிச் செவுராக்கினது.

[அப்போது சேகர் வருகிறான்.]

**சேகர் :-** மிஸ்டர் ரவி! உங்ககிட்டே தனிமையிலே சில விஷயங்கள் சொல்லணும்.

**அக்கா :-** நீயார் நான் இருக்கிறப்பொ ரவிகிட்டே தனியா என்னய்யா பேச்சு? நீ சர்மா ஆள் தானே? என்ன விஷயம் சொல்லு!

**சேகர் :-** (தயங்கி) நிர்மலா சமாசாரம்.

**ரவி :-** என்ன சேகர்! என்ன விஷயம்?

**அக்கா :-** என்னய்யா நிக்கிறே. சொல்லுய்யா விஷயத்தை.

**சேகர் :-** நிர்மலாவைப் போலீஸ்லே புடிச்சுக்கிட்டுப் போயிட்டாங்க.

**ராம் :-** ஹா! என்னது?

**அக்கா :-** என்னடா அது? நான் நினைச்சது நடந்திட்டுது நிர்மலா மட்டுமல்லே அந்த சர்மா, அவர் வீட்டுக்கு வர்ரவன் எல்லாரும் ஒரு நாளைக்கு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகத்தான் போறாங்க.

**ராம் :-** எதுக்காகப் புடிச்சான்? என்ன சமாசாரம்?

**சேகர் :-** தெருவுலே ஒரு சோதாவோட கலாட்டா.

**ரவி :-** சோதாவோட கலாட்டா! நம்ப முடியலையே.

அக்கா :- அக்கா சொல்றதைத் தான் நம்ப முடியலே? இவன் சொல்றதையுமா நம்ப முடியலே? இதெல்லாம் புதுமையாப் பொண்ணை வளர்த்த தாலே வர்ரது.

சேகர் :- அதெல்லாம் அப்பறம் பேசிக்கலாம் அக்கா... இப்பொ மொதல்லே, நிர்மலாவை ஜாமீன்லே கூட்டிக்கிட்டுவர ஏற்பாடு பண்ணுவோம். சர்மாவும் வீட்லே இல்லே.

ராம் :- எந்தப் போலீஸ் ஸ்டேஷன் சேகர்?

சேகர் :- அதான் ஆனைக் கவுனிப் பக்கத்திலேங்க.

[ராம் அரை மணியில் போய்த் திரும்பி வருவதாகக் கூறிச் செல்கிறான்]

ரவி :- இந்த ராத்ரியிலே அவள் ஆனைக் கவுனிக்கு வரக் காரணம்!

சேகர் :- ஏதோ நாடகம் பார்த்திட்டுத் திரும்பி வந்து கிட்டிருந்திருக்கா வழியிலே ஒரு சோதா...

[வெளியிலிருந்து ஆட்டோ ரிக்ஷாக்காரன் குரல்]

குரல் :- என்னய்யா, கூலிக் கொடுக்காமெயே நீ பாட்டுக்கு உள்ளாறப் போயி பேசிக்கிட்டிருந்தா...

சேகர் :- இதோ வந்துட்டேனப்பா நீ வேறெ...

[சேகர் கூலியைக் கொடுக்க வெளியே போனவுடன்]

அக்கா :- இப்பொவாவது புரிஞ்சுதா ரவி...கடவுள் தான் அனுப்பிச்சிருக்கார் இந்த ஆசாமியை உன் கண்ணைத் திறக்க. நீ கல்யாணம் செய்து கொள்ள இருந்த உன் எதிர் கால மனைவியின் நடத்தையை எடுத்துக் காட்ட, அந்தப் பொண்ணுக்கு உன் மேலெ கொஞ்சமாவது அன்பு இருந்தா இவ்வளவு கலாட்டாக்கப்புறம் நாடகம் பாக்கப் போவாளா அதுவும் யாரோட அந்தச் சோதாப் பயதான்

யாருன்னு நாம என்னத்தைக் கண்டோம். அவனுக்கு ரொம்ப நாளாப் பழக்கம் உண்டோ? என்னமோ?

ரவி :- எனக்கு ஒண்ணும் புரியலே அக்கா...

அக்கா :- புரியிறதுக்கு என்னடா இருக்கு இன்னும் இதுலே... நடக்க இருந்த கல்யாணம் நின்னு போச்சுன்னு தெரிஞ்சப்பறம் வெளியிலே இளம்பலாமாடா? அதுவும் ஒரு குடித்தனப் பொண்ணு... நீ ஆம்பளே... வீட்லேயே உக்காந்துக் கிட்டிருக்கே... இப்பொ ஊருக்குக் கிளம்புடா... உனக்கு மனசுக்கு ஒரு ஆறுதலா இருக்கும்... ஒரு தரம் ஊருக்கு வந்துட்டு வா...

ரவி :- என் பெட்டி படுக்கையெல்லாம் எடுத்து வை அக்கா... நான் இதோ வர்ரேன்...

[அக்கா போகிறாள். சேகர் மறுபடி உள்ளே நுழைகிறான்]

ரவி:- என்ன சேகர்! என்னத்துக்காகப்பா கலாட்டா... என்ன சமாசாரம்... உண்மையைச் சொல்லய்யா...

சேகர் :- அதையெல்லாம் பத்தி ஏன் கிளர்றீங்க. அதைப் பத்திப் பேசவே வேண்டாமே...

ரவி :- நிர்மலாவோட சண்டை போட்ட அந்த சோதா யாருய்யா?

சேகர் :- அக்கா இங்கே இல்லையே. அவன் ஒரு பச்சை மோகினி புடிச்சப் பயல். அவனைப் பத்தித் தங்களுக்கு என்னங்க பேச்சு? அப்ப நான் வரட்டுமா?

ரவி :- நடந்தது என்னான்னு. சொல்லலியே.

சேகர் :- நான் சர்மாவுக்கு ரொம்ப வேண்டியவன். அவர் குடும்ப விஷயத்தைப் பத்தி வம்பு பேச நான் தயாரா இல்லை. அதுவும் அவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போற உங்ககிட்டே சரி——

அப்பொ நான் வரட்டுமா?

[என்று சொல்லிவிட்டுப் போய் விடுகிறான்]

ரவி :- சரவணம்! ஏய்!

[என்று ஒரு கடிதம் எழுதி]

ஏய் சரவணம்! இதை நிர்மலாகிட்டே கொண்டு போய்க் கொடு!

காட்சி-9

## ரோடு

[ராம், நிர்மலா வந்து கொண்டிருக்கின்றனர்]

நிர்மலா :- ரவி எம்மேலே கோபமா இருக்காரா ராம்?

ராம் :- நீ சுத்தக் கொழந்தையாயிருக்கே!

நிர்மலா :- பின்னெ என்ன கிழவியாவா இருக்கணும்.

ராம்:- ஏற்கனவே ரவி அக்காவுக்கு உன் சித்தப்பாவைக் கண்டா பிடிக்கலே. அது போதாதுன்னு உன்னை வேறெ காலையிலே மோட்டார் பைக்லே சந்திச்சுட்டாங்க இருந்தும் ஒரு விதமா ஒப்பேத்திடலாம்னு நான் முயற்சி பண்ணினப்போ, இந்தப் பசங்க வந்து பிளானையே மாத்திட்டாங்களே.

நிர்மலா :- அவங்க ஏதோ நல்ல எண்ணத்தோட வந்து தான் செஞ்சிருக்காங்க. அவங்கதான் அக்கா கிட்டெ மன்னிப்புக் கேட்டுக்கிட்டு வர்ரதாச் சொன்னாங்களே, அங்கே வரலையா அவங்க?

ராம் : வந்தாங்க, வந்தாங்க. உங்க சித்தப்பா வந்து பேசியிருந்தார்னா நல்லாயிருந்திருக்கும். இந்தக் கிராக்குப் பசங்களைப் பாத்தவுடனேயே அக்கா பயந்துட்டாங்க.

நிர்மலா :- ரவி என்ன சொல்றார்?

ராம் :- அவன் இந்த விஷயத்திலே கொஞ்சம் பிடிவாத மாகவும், தைரியமாகவும் தான் இருக்கான்.

நிர்மலா :- அதுபோதும் எனக்கு. அக்கா என்ன வேணும்னாலும் நெனைச்சுக் கிட்டுப் போகட்டும். இப்பொ என்ன செய்யணுங்கறே?

ராம் :- மறுபடியும் முதல்லேயிருந்து ஆரம்பிக்க வேண்டியதுதான். நீயும் சித்தப்பாவும் எப்படி யாவது சாமர்த்தியமாப் பேசி அக்கா மனசை மாத்தியாக வேணும். செய்த தவறைத் திருத்தி யாகணும்.

நிர்மலா :- நாங்க ஒண்ணும் அப்படிப் பெரிய தவறு செய்யலே. இருந்தாலும் நான் ரவிக்காக கிணத்திலேகூட விழத் தயார்தான்.

ராம் :- நிர்மலா! இப்ப உன் சித்தப்பா வீட்லே தானே இருப்பாரு?

நிர்மலா :- ஆமாம். போகலாம் வா.

## காட்சி-10

# சர்மா வீடு

[டிரஸ் செய்வதை முடிக்கிறார். கர்ச்சிப்பில் கொஞ்சம் சென்ட் தடவிக் கொள்கிறார். டெலிபோனை எடுத்துக் கொண்டு பேச ஆரம்பிக்கிறார்]

சர்மா :- (டெலிபோனில்) யாரு, விர்கோ ஷேர் ப்ரோக்கரா, நான்தான் சர்மா பேசறேன் கிஞ்சின் ஜிங்கா சிமெண்ட்ஸ் ஸ்டெடிதானா? சரி யாரு ஒஹோ என்ன இறங்கிடுத்தா நெஜமாவா பாத்துச் சொல்லுங்க சார்! பெரிய ஆள் எல்லாம் டீல் பண்ணிக்கிட்டு இருந்தாங்களே பட்ஜெட் ஸ்பீச்... ஆ...ஆ...ஆ... ஒண்ணுமில்லை.

[போனைக் கீழே வைக்கிறார்]

சர்மா :- (தனக்குள்) போயிடுத்து ஒன்றரை லட்ச ரூபாய் எல்லாம் போயிடுத்து பணம், வீடு, சொத்து எல்லாம் ஒரேயடியாப் போயிடுத்து. ஹூம் ஹூம். அதோட நிர்மலாவின் தந்தைக்குக் கொடுத்த வாக்கும் போயிடுத்து.

[என்று சொல்லிக்கொண்டே ஒரு நாற்காலியில் உட்காருகிறார் சிரிக்கிறார்]

இந்த ஷேர்கூட இனி நம்முடையது இல்லை. எல்லாம் ஷேர் மார்க்கெட் தெய்வத்துக்கு அர்ப்பணம் செய்தாச்சு நிர்மலாவின் பணத்தை இப்படித் தத்தம் செய்ய நான் யார்?

[என்று எழுந்து போய்ப் பெட்டியைத் திறந்து ரிவால்வரை எடுக்கிறார்]

தோல்வி வீரர்களின் துணைச் சின்னமே? என்னுடையது என்று சொல்லிக் கொள்ளக் கூடிய பொருள் நீ ஒன்றுதான். ச்...என்ன கோழைத் தனம். இந்த உடல் என்னுடையது தானே? அனாதை நிர்மலாவின் பணத்தை அனுபவித்து விட்டு, பருவமடைந்த பெண்ணைப் பறக்க விட்டு விட்டு, பரலோகம் செல்வதுதான் நான் நிர்மலாவுக்குச் செலுத்தும் கடமையா? சே, அவள் பணத்தினால் இன்பத்தை அனுபவித்த நான், அவள் பொருட்டு துன்பத்தையும் அனுபவிக்க வேண்டும். அணு அணுவாக அவதிப்பட வேண்டும்.

[என்று பேசிக் கொண்டிருக்கும்போதே நிர்மலாவின் பேச்சுக் குரல் கேட்கவே துப்பாக்கியைப் பையில் போட்டுக்கொண்டு விலகிக் கொள்கிறார். ராமுவும், நிர்மலாவும் சிரித்த வண்ணம் வருகின்றனர்]

நிர்மலா :- ராம் இதோ பாத்தையா சித்தப்பா இருக்காங்க.

ராம் : அவர் போட்டிருக்கிற சென்ட்தான் அரை பர்லாங்குக்கு வீசுதே. இங்கே வந்து பாக்கணுமா அவர் இருக்கிறார் என்கிறது.

சர்மா :- (ஈனஸ்வரத்தில்) வா... ராம்...

ராம் :- மிஸ்டர் சர்மா நீங்க இப்பொ இருக்கிற ஜோரைப் பார்த்தா எனக்குக்கூட உங்க நண்பர்கள் சொன்னமாதிரி ஒரு கல்யாணம் செய்துடலாம்னு தோணுது.

சர்மா :- ரவி அக்கா என்னப்பா ரொம்பக் கோவப் பட்டாங்களா? என்னுடைய போறாத காலம் அன்னிக்கு விஷயம் அப்படிப் போயி முடிஞ்சுது.

நிர்மலா :- அக்கா விஷயத்திலே நம்மாலே ஒண்ணும் செய்ய முடியாது சித்தப்பா. அதை ராமுவும் ரவியும்தான் கவனிச்சுக்கணும். எனக்கு இப்பொ நிஜமாவே போறாத காலம்தான் சித்தப்பா. இப்ப நான் நேரே போலீஸ் ஸ்டேஷன்லே இருந்து தான் வர்ரேன்.

சர்மா :- (பதறியவராய்) அதென்னம்மா போலீஸ் ஸ்டேஷனா என்ன நடந்தது?

ராம் :- ஒண்ணும் பயந்துடாதிங்க. சாதாரணமா நமக்கெல்லாம் போலீஸ் ஸ்டேஷன்னா ஒரு பாட்டில் க்ருஷன் சால்ட் சாப்பிட்ட மாதிரி ஆயிடறது. ஆனா நிர்மலா அப்படியே போலீஸ் ஸ்டேஷனையே பந்தாடிட்டு வந்திருக்கா.

சர்மா :- விளையாடாதேப்பா, விஷயம் என்ன?

நிர்மலா :- நான் ரோடிலே வந்துக்கிட்டிருக்கிறப்பொ, ரெண்டு காலிப் பசங்க பாவம் யாரோ ஒரு சாதுப் பொண்ணுகிட்டெ கலாட்டாப் பண்ணிக்கிட்டிருந்தாங்க. நான் போயி அவங்களைத் தடுத்தேன். அவங்க எங்கிட்டே மொறைச்சாங்க. நீங்கதான் எனக்கு டிரெயினிங் குடுத்திருக்கீங்களே; தைரியமா இருக்கணும்னு. சும்மா கொடையாலே கொடுத்தேன் அந்தப் பசங்களுக்கு. அந்தச் சமயம் பார்த்து ஒரு கான்ஸ்டேபிள் அந்தப் பக்கமா வந்து எங்க எல்லாரையுமே ஸ்டேஷனுக்குக் கூட்டிக் கிட்டுப் போயிட்டாரு.

சர்மா :- அப்புறம்?

ராம் :- அப்புறமென்ன! அந்தத் தகவல் எனக்கு எட்டித்து. நான் ஸ்டேஷனுக்கு ஓடினேன். அதுக் குள்ளே நிர்மலாவை எப்படியாவது வெளியிலே

போகும்படி செய்துட்டாப் போதும்னு ஆயிடுத்து இன்ஸ்பெக்டர் நிலை. சர்மா! நீங்க சரியான டிரெயினிங் குடுத்திருக்கீங்க.

சர்மா :- (வருத்தத்துடன்) ஹூம். சரியான டிரெயினிங் தான் கொடுத்திருக்கேன். உம், அது மட்டுமா?

[என்று பெருமூச்சு விடுகிறார். அதை நிர்மலா கவனித்துவிட்டு]

நிர்மலா :- ராம் உனக்கு நேரமாகலே?

ராம்:- ஆமா ஆமா. எனக்கு ரொம்ப நேரமாயிடுத்து. ஏற்கனவே அக்கா ரொம்ப சத்தம் போட்டுக் கிட்டிருக்கா. நான் போறேன்.

[ராம் போகிறான்]

நிர்மலா :- இத்தனை வருஷமா உங்க முகத்திலே துளிக் கூட கவலைங்கிறதே பார்த்தது இல்லையே. எப்பவும் சிரிச்சுக்கிட்டிருக்கிற உங்க முகம் ஏன் இன்னிக்கு இப்படிக் கலங்கி இருக்கு?

சர்மா :- அதென்னம்மா அப்படிச் சொல்றே?

நிர்மலா :- நான் வந்தவுடனேயே கவனிச்சேன். நீங்க பேசறப்பொ உங்க குரலே ஒரு மாதிரியா இருந்தது. அதைப் பார்த்துத்தான் நான் ராமைக் கூட வீட்டுக்கு அனுப்பிச்சேன்... என் கல்யாணத்தைப் பத்தித்தானே கவலைப்படறீங்க?

சர்மா:- நம்ம நண்பர்கள் நடந்துக்கிட்ட விதத்திலே இருந்து அது கவலைப்பட வேண்டிய விஷயமாத் தானே போயிடுத்து.

நிர்மலா :- அந்தக் கவலையை விட்டுத் தள்ளுங்க சித்தப்பா. நான் அதைப் பத்தித் துளிக்கூட

கவலையே படலே. ஏன் தெரியுமா எனக்கு ரவி மேலெ அவ்வளவு நம்பிக்கை.

சர்மா :- நாம எதிர்பார்க்கிறது நடக்குங்கிறே நீ... நம்பிக்கையிலேதானே நம்ம வாழ்க்கையே நடக்கிறது. நிர்மலா...எனக்கொரு பெரிய சந்தேகம். உங்கப்பா ஒன்னை எங்கிட்ட ஒப்படைச்சது சரியா தப்பான்னு எனக்குப் புரியவேயில்லை.

நிர்மலா :- இது என்ன சித்தப்பா...திடீர்னு. இதைப் பத்தி இப்ப என்ன யோசனை? இப்ப நாம யோசனை பண்ண வேண்டிய விஷயம் என்ன தெரியுமா சித்தப்பா? நான் இந்த மோட்டார் சைக்கிளிலேயே இனிமேயும் பேறாதா இல்லே ஒரு சின்ன கார் வாங்கி அதிலே போறதாங்கிறதுதான்.

சர்மா :- ஹூம் ஹூம்.

நிர்மலா :- என்ன ஹூம் ஹூம்ங்கிறீங்களே. நான் ஒரு பெரிய திட்டம் போட்டிருக்கேன். எத்தனை நாளைக்கு நீங்க என்னைப்பத்திக் கவலைப்பட்டுக்கிட்டிருக்கிறது. ரவிக்கும் எனக்கும் கல்யாணம் ஆனவுடனே ரவி இந்தக் கவலை எல்லாம் எடுத்துக் கொண்டுவிடுவார். நீங்க இஷ்டமாப் புஸ்தங்களைப் படிக்க வேண்டியது. வேளா வேளைக்கு நல்லாச் சாப்பிட வேண்டியது. சாயங்காலமா எங்களோட ஆனந்தமா கார்லே பீச்சுக்கு வர வேண்டியது. என்ன சித்தப்பா அந்தப் பக்கமா திரும்பிக்கிட்டிங்க.

சர்மா :- நான் கேட்டுக்கிட்டுதான் இருக்கேன். நீ சொல்லம்மா.

நிர்மலா :- இந்த ஷேர் பிஸினஸ் அது இதையெல்லாம் கம்ப்ளீட்டா நிறுத்திட வேண்டியதுதான். எங்கப்பா வச்சுட்டுப் போனதை எவ்வளவோ விருத்தி பண்ணிட்டீங்க. இனிமேலும் நீங்க எதுக்காக

அங்கேயும் இங்கேயும் அலையணும். என்ன சித்தப்பா ஒண்ணுமே பேச மாட்டேங்கிறீங்க.

சர்மா :- வெள்ளையுள்ளம் படைத்த நிர்மலா உன்னிடம் நான் எப்படிச் சொல்வது?

நிர்மலா :- எதை? உங்க உடம்புக்கு ஒண்ணுமில்லையே!

சர்மா :- அதெல்லாம் ஒண்ணுமில்லை நிர்மலா. உனக்குக் கார்டியனாகவே இருந்திருக்கக் கூடாது.

நிர்மலா :- என்ன இப்படிப் பேசறீங்க. விஷயத்தைச் சொல்லாமெ.

சர்மா :- நிர்மலா, நிர்மலா எப்படிச் சொல்வது, எதைச் சொல்வது? உன் தந்தைக்குத் துரோகம் செய்து விட்டேன். உனக்கு எல்லா விதத்திலும் பெரிய தீங்கிழைத்து விட்டேன். நூதனமான முறையில் உன்னை வளர்த்து, நூதனமான எண்ணங்களைப் புகட்டி, உன்னை ஒரு புதுமைப் பொண்ணாக்கி, மற்றவர்கள் போகாத வழியிலும் புகுத்தி விட்டேன். உன் சொத்தை எல்லாம் இழந்து விட்டேன் நிர்மலா; சூதாடி இழந்து விட்டேன்.

நிர்மலா :- என்ன! சொத்து போய் விட்டதா? உங்களாலே தானே சித்தப்பா அது பெருகிற்று?

சர்மா :- அது பழைய கதை நிர்மலா. இப்பொழுது எல்லாம் போய் விட்டது. பங்கு மார்க்கெட்டில் பறி போய் விட்டது. என் பேராசைக்குப் பலியாகி விட்டது. பாங்கிலிருந்த பணம், நாம் இப்பொழுது நின்று கொண்டிருக்கும் இந்த வீடு, நமக்குச் சொந்தமான எல்லாப் பொருள்களும் இன்னும் ஒரு வாரத்திற்குள் ஏலத்திற்கு வந்துவிடும் நிர்மலா. பொறுப்பை மறந்த எனக்கு முன்னால் நீ நிற்க வேண்டாம். மன்னிக்கத் தகாத மாபாதகன்

முன்னால் நீ நிற்க வேண்டாம். வேலியாக வந்து பயிரை அழித்த என் பக்கத்தை நீ நாட வேண்டாம்.

[நிர்மலா கடகடவெனச் சிரிக்கிறாள். சர்மா திகைக்கிறார்]

சர்மா :- நான் பொய் சொல்றேன்னு நினைக்கிறியா! உன் சொத்தையெல்லாம் உண்மையாக இழந்து விட்டேன். விளையாட்டு இல்லை.

நிர்மலா :- (மீண்டும் சிரிக்கிறாள்) சொத்தைத்தானே இழந்து விட்டீர்கள். உங்கள் அன்பை இழக்க வில்லையே. சொத்து வரும் போகும். எங்கப்பாவே உயிரோடு இருந்து வேறெந்த முறையிலாவது அவர் இழந்திருக்க முடியாதா? அப்பொ நான் யாரைக் கோபிக்க முடியும்? இல்லே, சொத்தே வைக்காமெ போயிருந்தார்னா? ஆனா சித்தப்பா ஒரு விஷயத் துலே ஒங்க மேலெ எனக்கு ரொம்ப கோபம். உங்களுக்கு ஒரு பெண் இருந்து இந்த மாதிரி நீங்க பணத்தை இழந்திருந்தா அவகிட்டெ இப்படி யெல்லாம் காரணம் சொல்லிக்கிட்டுதான் அழுதுக் கிட்டிருப்பிங்களா? நான் வேறொருத்தர் மகள்னு நெனைச்சுதானே எங்கிட்டே இப்படியெல்லாம் பேசறீங்க. எந்த உரிமையிலே நீங்க இந்த சொத்தை விருத்தி பண்ணினீங்களோ அதே உரிமை உங்களுக்கு அதை அழிக்கவும் உண்டு சித்தப்பா உண்டு.

சர்மா :- நிர்மலா உன்னுடைய உள்ளம் கம்பீர மானது. அதை நெனைச்சு என் மனசு துடிக்கிறது. ஆனா..நீ கொழந்தை மாதிரி பேசறே. நாளடை வில் உனக்குத் தேவைகளும், ஆசைகளும் ஏற்படும் போது, நீ புரிந்துகொள்வாய் இந்த நஷ்டத்தைப் பற்றி. நீ வருந்துவாய் பணம் இல்லையே என்று.

அந்தக் கண்ணீரை என்னால் காணச் சகிக்க முடியாது நிர்மலா.

நிர்மலா :- நீங்கதான் குழந்தை மாதிரி பேசுறீங்க— நகை, நல்ல உடை, உல்லாச வாழ்வு இவை போய் விடுமே என்று கவலைப்பட முடியுமா? நீங்களே எவ்வளவு முறை சொல்லியிருக்கீங்க, பணம்போனா பரவாயில்லே மனம் உடைஞ்சு போனாத்தான் மருந்தில்லேன்னு. உங்க பாடத்தை உங்களுக்கே படிக்கணும் போலிருக்கே. உங்கள் அன்பை நான் இழக்காத வரையில் எனக்குக் கவலையில்லை.

[அம்மா என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறாள், சரவணம் கையில் ஒரு கடிதத்துடன் வருகிறான்]

சரவணம் :- ரவி அய்யா இதை உங்ககிட்டெகுடுத்துட்டு வரச் சொன்னாரும்மா.

[நிர்மலா அதை வாங்கிக் கொள்கிறாள். அவள் அதைப் பிரித்துப் படிக்குமுன்-சரவணம் போய் விடுகிறான். நிர்மலா கடிதத்தைப் படித்துவிட்டு சித்தப்பா என்று அலறிக் கொண்டு சர்மாவின் மேல் சாய்ந்து விடுகிறாள்]

சர்மா :- என்னம்மா? என்னது சொல்லம்மா?

நிர்மலா :- நீங்களே பாருங்க சித்தப்பா!

[என்று கடிதத்தைக் கொடுக்கிறாள்]

[சர்மா கடிதத்தைப் படிக்கிறார்]

நிர்மலா உங்கள் வாழ்க்கைத் திட்டத்திற்கும், நாட்டுப்புறத்தைச் சேர்ந்த எங்கள் வாழ்க்கைத் திட்டத்திற்கும், ஒரு பொருத்தம் ஏற்படுத்தலாம் என்று விரும்பினேன். ஆனால் அது தவறு என்று

இன்று இரவு நீ நடுத்தெருவில் நடந்து கொண்ட விதத்திலிருந்தும், போலீசாரால் அரெஸ்ட் செய்யப் பட்ட விதத்திலிருந்தும், நிரூபித்து விட்டாய் உன்னுடைய குணம் எனக்கு நன்றாகத் தெரியும். என் கடிதம் உனக்குச் சிரிப்பைத்தான் உண்டாக்கும். இருந்த போதிலும் கண்யமான மனிதன் என்ற முறையில் நம் சம்பந்தம் இன்றோடு அழிந்து விட்டது என்று தெரிவிக்க வேண்டியது என் கடமை என்று நான் நினைக்கிறேன்.

மன்னிக்கவும்.

ரவி

**சர்மா :-** (கோபமாக) கண்யமான மனுஷனாம்... காலிப் பய... என்னை விடவா அவன் காலிப் பய இல்லை. நாங்க இருவருமே உன் வாழ்வைக் கெடுத்து விட்டோம். இல்லை, இல்லை. நான் தான் உன்னைக் கெடுத்தவன். மற்ற பெண்களைப் போல் சாதாரணமாக உன்னை வளர்த்திருந்தால் உனக்குத் இந்தத் துக்கம் வந்திருக்குமா?

*[நிர்மலா விக்கி விக்கி அழுது கொண்டிருக் கிறாள்]*

**நிர்மலா :-** போதும் சித்தப்பா.

*[என்று கூறிக்கொண்டே எழுந்து போய் விடுகிறாள்]*

*[அவள் எழுந்து அழுதுகொண்டு போவதைப் பார்த்த சர்மா திடீர் திடீர் என்று மேஜையில் முட்டிக் கொள்கிறார்]*

**சர்மா :-** அடிமேல் அடி... இடிமேல் இடி... எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும். வாழ்க்கைப் பாதையில் சிரித்துச் செல்ல வேண்டும் என்று எண்ணியிருந்த

தெல்லாம் போதும். நிர்மலாவுக்கு நான் இழைத்த தீங்கைத் துடைக்க வேண்டும். அவள் வாழ்க்கை வளம் பெற வேண்டும். அது நிறைவேறும் வரையில் எனக்குச் சத்தியமே கிடையாது. தர்மமே கிடையாது. ஏன் கடவுளே கிடையாது. அந்த முயற்சியில் உலகமே எதிர்த்து வந்தாலும் சரி, தயங்கப் போவது இல்லை என்று பேசிக்கொண்டே தடுமாறிய வண்ணம் அங்குள்ள நாற்காலியில் சாய்ந்து விடுகிறார்.

## காட்சி-11

### ரவி அறை

**ரவி :-** கிளம்பறேன். கிளம்பறேன். கிளம்பறேன்.

**அக்கா :-** ஏண்டா கத்தறே. உன் மனசு வேதனை எனக்குத் தெரியாமெ இல்லை. இந்த வேதனை இன்னியோட முடியட்டுமேன்னுதான் இந்த முடிவுக்கு வந்தேன். உன் மேல் உயிரையே வச்சிருக் கிறேனே இந்த அக்கா. உன் கண் கலங்கினா எப்படிச் சகிக்க முடியும். இனிமே எனக்கு என்னடா இருக்கு? உன் சுகம் தானேடா என் சுகம்?

**ரவி :-** அக்கா, நீங்க சொன்னதைத்தான் நான் செய்துட்டேனே. சும்மா ஏன் திருப்பித் திருப்பி பேசிக்கிட்டே இருக்கே.

**அக்கா :-** அதற்காக நான் சொல்லலைடா. எனக்காக

நீ ஒரு காரியமும் செய்ய வேண்டாம். நான் சொல்றதை நீ புரிஞ்சுக்கிட்டா அதுவே எனக்குப் போதும். கல்யாணங்கிறது ஒரு நீடிச்சிருக்கிற விஷயம். சாதாரண விஷயமில்லேடா அப்பளம் நொறுக்கிற மாதிரி.

ராம் :- (வந்து கொண்டே) யாரை நீங்க அப்பளமா நொறுக்கப் போறீங்க. என்ன, ரவி கட்டின பொட்டலம் மாதிரி இருக்கான்.

ரவி :- நான் பொட்டலமுமில்லை.என்னை யாரும் கட்ட வேண்டியதுமில்லை, அவிழ்க்க வேண்டியதுமில்லை.

அக்கா :- ஏய் ராம்: அதான் பொட்டலத்தை அவிழ்க்க வந்திட்டியே. சரி ஏய் ரவி, அந்த ஓலப்பிடாரி ஓல மிட்டதைக் கவனிக்க வேண்டாம். நீ சாமானை எடுத்து வைச்சுகிட்டு ஊருக்குக் கிளம்புடா.

ராம் :- (திடுக்கிடுகிறான்) என்ன, ஊருக்கா? எந்த ஊருக்கு? யார் போறாங்க?

[நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் ரவியின் தோளைப் பிடித்துக் குலுக்கி]

ஏய்! என்னடா நிஜமாவா. ஊருக்குக் கிளம்பிட்டே ஏண்டா வாயடைச்சிருக்கு

அக்கா :- ஏய் ராம்! அவனை என்னடா/ கேள்வி. அவனுக்கு அந்தச் சர்மாவும் நிர்மலாவும் செய்திருக் கிற மரியாதைக்கு அவனுக்கு மட்டும் ரோஷம் இல்லையா? அவனும் மீசை மொளைச்ச ஆம்பளெ தானே.

ராம் :- அப்படி அவன் ஆம்பளெயா இருந்திட்டா அவன் ஏன் உங்களைக் கண்டு இப்படி நடுங்கிறான் ஏண்டா ரவி அக்கா சொல்றது உண்மைதானா?

[அக்கா போகிறாள்]

ரவி :- ராம்! என்னைத் தொந்தரவு செய்யாதே! என் மனமே ஒரு நிலையில் இல்லை. ஒரேயடியாய்க் குழம்பிக் கிடக்கிறது.

ராம் :- என்ன சார் சொன்னீங்க?. மூளை கொழம் பிடுச்சா?.. ஏன் சார், கொழம்பிடுச்சா சார். உங்க காதல் என்ன ஆச்சு சார்?

ரவி :- நிறுத்து.

ராம் :- கொஞ்சம் பொறுத்து, நான் வெளியே போயிட்டு வர்ரதுக்குள்ளே என்ன சார் ஆயிடுச்சு ?

ரவி :- அது என் சொந்த விஷயம். அதற்குக் காரணம் கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுத்தாச்சு. கண்டவர்களிடம் நான் அதைப் பற்றிப் பேசத் தயார் இல்லை.

ராம் :- கண்டவர்கள், கண்டவர்கள், இங்கே யாரு சார் இருக்காங்க கண்டவங்க?

[என்று சுற்று முற்றும் பார்க்கிறான்]

ரவி :- நிறுத்து ராம். அதுதான் என் சொந்த விஷயம்னு சொல்லிட்டேனே. சும்மாப் பேசிக் கிட்டே இருக்காதே!

ராம் :- சொந்த விஷயம், பெர்ஸனல் மாட்டர், ஹா, ஹா. ஏய் ராம்! நிர்மலா கிட்டே போயி, எங்க அக்கா ஒரு மாதிரின்னு எப்படிடா சொல்லுவேன். நீ போய் கொஞ்சம் தயார் பண்ணுடான்னு சொன்ன போது அது பொது விஷயமாயிருந்தது. இல்லையா?. போடா போ. நீ ஒரு ஆம்பளை மாதிரி. திருவல்லிக்கேணி வளையல் கடையிலே போயி நாலு ஜதை வளையலை வாங்கிக் கையிலே மாட்டிக்கோடா.

**ரவி :-** ராம்! நீ என்ன வேணுனா சொல்லு நான் கோவிச்சுக்கப் போறதில்லே. இந்த விஷயத்திலே நான் தீர ஆலோசனை பண்ணித்தான் ஒரு முடிவுக்கு வந்திருக்கேன். எனக்குக் கல்யாணமே வேண்டாம். இந்தத் தீர்மானத்தை மாத்த யாராலும் முடியாது.

[அக்காவும், சரவணமும் வருகிறார்கள்]

**ராம் :-** ஏய் சரவணம்! அந்தத் தட்டை இப்படிக் கொண்டாடா.

**சரவணன் :-** எதுக்குங்க?

**ராம் :-** எடுடான்னா.

[என்று சொல்லிக் கொண்டு தட்டை எடுத்துக் கொண்டு ஸ்டேஜுக்கு எதிர்புறமாகத் திரும்பிக் கொண்டு தட்டில் எதையோ வைக்கிறாள்]

**அக்கா :-** என்னடா பண்ணறே?

**ராம் :-** எல்லாம் உங்களுக்குத்தான் அக்கா. (அக்காவுக்குத் தீபாராதனை பண்ணிக் கொண்டே)

அம்மா பராசக்தி. உன் சாமர்த்தியமே சாமர்த்தியம். இப்பல்ல புரியுது. உங்ககிட்ட உங்களவர் எப்படி மாட்டிண்டு முழிப்பார்னு. நான் கொஞ்ச நேரம் வெளியே போயிட்டு வர்ரதுக்குள்ளே இந்தக் காதல் சிப்பாயை இப்படி மண்ணைக் கவ்வ வச்சுட்டிங்களே.

**அக்கா :-** உனக்கு வேறெ வேலை என்னடா.

காட்சி-12

## ரோடு

[சேகர் வருகிறான்]

**சேகர் :-** என்ன சோட்டா ஜமீன்தார். பெருமூச்சு விட்டுக்கிட்டு நிக்கிறீங்க?

**ராம் :-** என்னய்யா. கூலிங் கிளாஸைக் கழட்டுய்யா. ஏற்கனவே பிரமாதமான லட்சணமாயிருக்கீங்க. இது வேறெ ஒண்ணு.

**சேகர் :-** அது சரி எடுத்துட்டேன். பேச்சு பிரமாதமாப் பேசறீங்க ஜமீன்தார்வாள். ஆனா காரியத்திலே இல்லே கோட்டை விடுறீங்க. பாவம் அந்த நிர்மலா வுக்குச் சொத்து போயிடுத்து. அது தெரிஞ்சவுடன் உங்க நண்பர் ரவியின் காதலும் பறந்து போயிடுத்து.

**ராம் :-** என்னய்யா இது. சொத்து போயிடுத்தா! என்னய்யா அவுட் விடறீங்க?

**சேகர் :-** அவுட் இல்லே, உண்மைதான். நிர்மலா சொத்தெல்லாம் சர்மா தெப்பக்குளம் பேங்க்லே போட்டிருந்தார். பேங்க் தெப்பக் குளத்திலேயே மூழ்கிடுத்து. அப்பறம் அந்த வீட்டை ஜாமீன் வச்சு ஏகப்பட்ட கடன். அதுவும் இந்த ஆக்ஷனுக்கு வந்துட்டுது.

அது தெரிஞ்சுக்கிட்டுதான் உங்க நண்பர் ரவிகூட ஜாடையா நமக்குள்ளே சம்பந்தம் வேண்டாம்னு எதை எதையோ காரணம் காட்டி லெட்டர் எழுதிட்டாரு.

**ராம் :-** நோ, நோ. சேகர். பணத்துக்காப்போயி ரவி இதை எழுதியிருக்க மாட்டான்.

சேகர் :- ஆமா, பின்னெ என்ன? ஒங்களுக்குச் சொத்துப் போயிடுத்து. அதனாலே கல்யாணம் வேண்டாம்னு சொல்வாங்களா? ஏதோ இப்படி ஜாடையாச் சொல்லிட்டாங்க.

ராம் :- அப்ப நான். சர்மாவை உடனே பார்க்கப் போறேன். அப்ப நான் வரட்டுமா?

சேகர் :- ஆமா, நல்லா இருக்கய்யா நீங்க செய்யிறது? பல்லுப்போனப்பரம் டூத்பிரஷ் வாங்கிற மாதிரி இருக்கு

ராம் :- என்னய்யா சொல்றே?

சேகர் :- சர்மா. பாவம். வீடு வாசல் எல்லாம் ஏலத்திலே போயி,கடைசியிலே நிர்மலாவும் அவரும் எங்கேயோ ஊருக்குக் கிளம்பிட்டாங்க.

ராம் :- ஊருக்கா? எந்த ஊருக்கு?

சேகர் :- ஆமா ஏதோ மனசு உடைஞ்சு கிடந்தாரு அவரு. நான் போயி இதையெல்லாம் அவருகிட்டெ கேக்கலே. ஏதோ கடைசியிலே எங்கிட்டெ இருந்த கொஞ்ச ரூபாயைப் போட்டு, மனுஷனுக்கு நிம்மதியா டிக்கெட் வாங்கிக் கொடுத்து ரயிலேத் திட்டேன். சரி, சரி நேரமாயிடுச்சு. நான் இப்பக் கூட கோர்ட்டுக்குத்தான் போறேன் சர்மா விஷயமா. வர்ரேன் குட்பை.

[இருவரும் போகின்றனர்]

காட்சி-13

## ஜமீன் வீடு

*ராம் தகப்பனார் வீடு.*

*[ஹாலில் ராமின் தகப்பனார் பரமசிவம் ஈஸி சேரில் சாய்ந்து கொண்டிருக்கிறார். ஒரு வேலைக்காரன் விசிறிக் கொண்டிருக்கிறான். இன்னொரு வேலைக்காரன் காலைப்பிடித்துக் கொண்டிருக்கிறான்]*

**குமாஸ்தா :-** டிபுடி கலெக்டர் ஐயா வந்திருக்காரு. சாவடியிலே இருக்காரு.

**பரம :-** ஓ, ஹூம்.

**குமாஸ்தா :-** பலகாரமெல்லாம் ஹோட்டல்லே இருந்து போயிடுச்சு அவருக்கு.

**பரம :-** ஓஹோ.

**குமாஸ்தா :-** அவரு வந்து ரெண்டு நாளாச்சுங்க. உங்களைப் பாக்கணும்னு அபிப்ராயப்படராரு.

**பரம :-** அப்படியா.

**குமாஸ்தா :-** டிபுடி கலெக்டர் பத்து மணி வண்டிக்குப் போறாராம்.

**பரம :-** ஓஹோ, அந்த நியூஸ் பேப்பரை எடு.

*[குமாஸ்தா பேப்பரை எடுத்துக் கொடுக்கிறான். பரம சிவம் பேப்பர் படிக்க ஆரம்பிக்கிறார்.]*

**பரம :-** மூக்கா, அந்தக் கரும்பாலெ மிஷின் ஏதோ ரிப்பேர்னு சொன்னானே, அந்த இஞ்சினியர் வந்து பார்த்தானா?

குமாஸ்தா :- நேத்து ராவுக்கு ராவே எல்லாம் சரி பண்ணிட்டாருங்க. டிப்டி கலெக்டர் போற வண்டிக்கு இன்னும் ஒரு மணிதான் இருக்கு. அவரு காத்துக்கிட்டு இருக்காரே.

பரம :- காத்துக்கிட்டிருக்காரா? ஏன்? நமக்கு அவரோட ஏதாவது வேலை இருக்கா நான் பார்க்கும்படியா.

குமாஸ்தா :- இல்லே. வேலை ஒண்ணுமில்லிங்க. பெரிய ஆபிசர்ங்கிற ஒரு மரியாதைக்கு.

பரம :- ஓஹோ, அப்படியா! தேவையில்லையே. நீயே பாத்து அனுப்பிச்சுடேன்.

குமாஸ்தா :- சரிங்க.

[என்று குமாஸ்தா போகிறான்]

பரம :- ஏய்!

[குமாஸ்தா திரும்பி வருகிறான்]

தகுந்தபடி ஏதாவது சொல்லி அனுப்பு. போற போது நம்ம கொக்குத் தோப்பு மாம்பழத்திலே ஒரு கூடை கொடுத்து அனுப்பு.

[சரி என்று குமாஸ்தா போகிறான்]

முதுகு புடிச்சது போதுண்டா. காலைக் கொஞ்சம் பாரு.

(மரகதம் வருகிறாள்)

வா மரகதம்! உட்காரு.

மரகதம் :- டிப்டி கலெக்டரய்யா. இந்நேரம் காத்துக் கிட்டிருந்திட்டு இப்பதான் போறாரு போலிருக்கே. எதிர்க்கப் பாத்தேன் பெரியப்பா. ஏன் நீங்க அவரைப் பாக்கவே இல்லியா?

பரம :- அதுக்குள்ளெ எல்லாத்தையும் விசாரிச்சுட்டியா?

அக்கா :- என்னதான் இருந்தாலும் நீ இந்த மாதிரி இருக்கிறது நல்லா இல்லே. காலத்தை அனுசரிச்சுக் கிட்டுப் போகணும் பெரியப்பா.

பரம :- ஓகோ, அப்படியா!

அக்கா :- அந்த மனுஷன்கிட்டதான் ரெண்டு வார்த்தை பேசினா என்ன?

பரம :- அதான் பேச வேண்டியதை குமாஸ்தா பேசிட்டறாரே. ரவிக்கு அப்பறம் என்ன திட்டம் போட்டிருக்கே!

அக்கா :- ராம், ரவி ரெண்டு பேரையும் பட்டணத் துலே விட்டதே பெரிய தவறாய்ப் போச்சு. ராம் அங்கெல்லாம் நடந்துகிற விதம், உங்க அந்தஸ் துக்குத் தகுந்தபடியே இல்லை.

பரம :- அதுக்காக நான் என்ன பண்ண முடியும்.

[வேலைக்காரர்களைப் பாத்து]

நீங்க போங்கடா. ஏய் அந்த வெத்தலைத் தட்டை எடுத்து இப்படி வை.
[வேலைக்காரன் வைக்கிறான். வேலைக்காரர் கள் போய் விடுகிறார்கள்]

அக்கா :- நீங்க கொஞ்சம் அவனைக் கண்டிச்சுதான் வைக்கணும் பெரியப்பா.

பரம :- இதெல்லாம் கண்டிச்சுப் பிரயோஜனமில்லே. அவங்கவுங்களுக்காத் தெரியணும்.

அக்கா :- ஒரு விஷயம். நம்ம ரவியை இந்த வருஷம் டிஸ்ட்ரிக்ட் போர்டு எலக்ஷனுக்கு நிறுத்தி வைக்கலாம்னு இருக்கேன். அதுக்கு உங்களுடைய உதவி ரொம்ப தேவை.

பரம :- சீ சீ, எலக்ஷனா. அதென்னம்மா கண்டவன் வீட்லெ போயி, படியேறிப் பல்லிளிக்கணும். ஊர்லே ஒரே அக்கப்போரு. கெட்ட பேரு.

அக்கா :- நீங்களே இப்படிச் சொல்லிட்டா என்ன செய்யறது? மலையா உங்களைத்தான் நம்பியிருந்தேன்.

பரம :- மரகதம்! நீ இந்த வம்புலெ எல்லாம் என்னை மாட்டி விடாதே. இருநூறு வருஷமா இந்த ஊர்லே நாம மரியாதையா இருந்திருக்கோம். கோவிலுக்குப் போனா முதல் மரியாதை. கல்யாணத்துக்குப் போனா முதல்தாம்பூலம். இப்படியே நம்ம குடும்பத்திலே எல்லோரும் கௌரவமாக் காலத்தை ஓட்டிட்டாங்க. நானும் ஓரளவுக்கு அந்தக் கௌரவத்தைக் காப்பாத்திட்டேன். பின்னாலெ எப்படியோ. நேரடியா நின்னு ஒண்ணும் எலக்ஷன்லே கலந்துக்க முடியாது. பணத்தாலெ பொறுத்தவரை, நான் ரவிக்கு ஒத்தாசை ஏதாவது செய்யறேன்.

[ராம் வருகிறான்]

ராம் :- என்ன அக்கா! கல்யாணத்தை முடிச்சாச்சு. இன்னும் என்ன செய்யப் போறீங்க?

அக்கா :- எல்லாம் உன் விஷயமாத்தான் பேசிக்கிட்டிருக்கேன். நீ பட்டணத்திலே இருக்கிற அழகு உங்க அப்பாவுக்குத் தெரிய வேண்டாம்.

ராம் :- சும்மாயிருங்க. ரவி கல்யாண விஷயத்திலே நீங்க நடந்துக்கிட்டது கொஞ்சங்கூட நல்லா இல்லே பாவம், அந்தப் பொண்ணுக்குச் சொத்தெல்லாங் கூடப்போயிடுத்தாம். கஷ்டத்துக்குமேலே கஷ்டம்.

அக்கா :- வீட்டிலே அந்த மாதிரி கூத்தடிச்சா லட்சுமி

எங்கடா நிப்பா?

ராம் :- ஆமா, என்னக்கா நீங்கமட்டும் என்ன சும்மா தபஸ் பண்ணிக்கிட்டு இருக்கீங்க.

பரம :- சும்மாயிருடா அதிகப் பிரசங்கி. அவளுக்கு இருக்கிறது ஒரே ஒரு தம்பி. அவனைக் கொண்டு போயி கண்ட எடத்திலே சம்பந்தம் பண்ண முடியுமா? யாரோ சர்மாவாம் காலிப் பய போலிருக்கு.

குமாஸ்தா :- நம்ம தர்மமா... எண்டோ பண்ணியிருக் கோமே கோயில் அதைப் பத்தித் தெனமும் கடுதாசி வந்துக்கிட்டிருக்குங்க. என்ன பண்றதுன்னு தெரிய லிங்க. என்னமோ பழைய வருஷத்து கணக்குப் புஸ்தகத்தை எல்லாம் கேக்கறாங்க. நம்ம என்னமோ தர்மத்துக்குக் கோயில் நடத்திக்கிட்டு வர்ரோம். இவுங்க என்னடான்னா ஆபீஸ்லே இருந்து கடுதாசிமேலெ கடுதாசியாப் போடுறாங்க.

ராம் :- சொத்தில்லாத கோயிலா இருந்தா யாரும் கவனிக்க மாட்டாங்க, கவர்மெண்டும் காதுலே போட்டுக்க மாட்டாங்க. நாம சொத்து எழுதி வச்சிருக்கமுல்ல. அதனாலேதான் எல்லாரும் உள்ளே வர்ராங்க. கவர்மெண்ட்டுதான் எடுத்து நடத்தட்டுமே.

பரம :- என்னடா உளர்றே. கவர்மெண்ட் கோயிலை எடுத்து நடத்தறதா? அப்புறம் நம்ம கௌரவம் என்னடா ஆறது?

ராம் :- பின்னெ என்ன செய்யறது?

பரம :- பட்டணத்துக்குப் போயி யாரையாவது பாத்து இந்தத் தொந்தரவை நீக்கியாகணும்.

ராம் :- நீங்க ஒண்ணும் கவலைப்படாதிங்க. ஓய் குமாஸ்தா! அந்தப் பேப்பரையெல்லாம் எடுத்து வைங்க ஒழுங்கா. நானே நேரே பட்டணத்துக்குப் போயி இந்தத் தொந்தரவைத் தொலைச்சுட்டு வர்ரேன். என் சிநேகிதன்னு சொல்லி இளக்காரமாப் பேசினிங்களே! அவுங்க என்ன செய்யறாங்கன்னு நீங்களே பாருங்க.

(ராமு போகிறான்.)

காட்சி-14

## ரோடு - சென்னை

சர்மா :- அடடே! நீயா...என்னப்பா ராம், சௌக்யமா?

ராம் :- மிஸ்டர் சர்மா...உங்களுக்கு ஏற்பட்ட பண நஷ்டம்...அதுக்காக நீங்க ஊரைவிட்டுப் போனது எல்லாம் சேகர் சொல்லித்தான் தெரியும்.

சர்மா :- அது பழைய கதை...இப்ப பர்மா சர்மா... கேர் ஆப் பிளாட்பாரம் சர்மா...

ராம் :- நிர்மலா எங்கே?

சர்மா :- இந்தக் கஷ்டத்திலே அவளுக்கு ஒரு சிநேகிதி வந்து சேந்தா...விமலான்னு...அவ வீட்லெ தான் இருக்கா நிர்மலா.

ராம் :- ஓ... விமலாவா? அவளை எனக்குத் தெரியுமே...

சர்மா :- மொதல்லே கொஞ்சம் பணம் சம்பாதிக்கணும்...அப்பறம் சின்னதா ஒரு வீடு பாக்கணும்.

ராம் :- சர்மா! ஒரு விஷயம். என் தந்தை திடீர்னு பேங்க்லே இருந்து விலகினதுனாலேதான் உங்களுக்குப் பண நஷ்டம் ஏற்பட்டது. ரவியும் இன்னொரு விதமா கஷ்டத்தைக் கொடுத்திட்டான். அதுக்குப் பிராயச் சித்தமா என்னாலெ ஆனதை நான் செய்யறேன்.

சர்மா :- இந்த வார்த்தையே எனக்கு இப்ப ஒரு பத்து லெட்ச ரூபா செக் மாதிரி...

சேகர் :- என்ன சர்மா! ராம் போன்ற ஆட்களுடைய குட்வில் போதுமே நமக்கு...

[என்று சொல்லிக் குத்துகிறான்]

சர்மா :- பிளெஷர் டிரிப்பா...அல்லது பிஸினஸ்ஸா?

சேகர் :- பிஸினஸ்ஸாத்தான் வந்திருக்கார் அவர்.

சர்மா :- என்னப்பா அது பிஸினஸ்?

ராம் :- ஒண்ணுமில்லே. எங்க ஊர்லே எங்க அப்பா ஒரு கோயில் கட்டி, அதுக்கும் சொத்து எழுதி வைச்சு மானேஜ்மெண்ட் பண்ணிக்கிட்டு வராரு. அதுலே ஏதோ சிக்கல்; நாங்க பண்ற தர்மத்துக்கு அரசாங்கத்துலே கேள்வி கேக்கிறாங்க. அதை எங்க மானேஜ்மெண்ட்லே இருந்து எடுத்துக்கப் பாக்கிறாங்க? எங்கப்பாவுக்கு விட்டுக் கொடுக்க இஷ்டமில்லை.

சர்மா :- ஆமாமா...விட்டுக் கொடுக்க முடியுமா? பிச்சைக்காரருக்குப் பணம் பெரிசு... பெரிய மனுஷாளுக்குக் கௌரவந்தானே பெரிசு—

ராம் :- அது விஷயமாத்தான் இந்த எண்ட்டோ மெண்ட்லெ இருக்கிற ஆளுங்க யாரையாவது பாத்து முடிவு பண்ணலாம்னு வந்தேன்.

சர்மா:- இனி நீ இந்த விஷயத்தை மறந்துடு!

ராம் :- ஏன் ஒண்ணும் நடக்காதா?

சர்மா :- அதை முடிக்க வேண்டியது என் பொறுப்பு.

ராம் :- உங்களுக்கு அங்கே யாரையாவது தெரியுமா?

சர்மா:- எனக்கு மட்டுமில்லே—உனக்கும் தெரியும் அந்த ஆளை...அதானப்பா... உங்க அக்காவுக்கு வத்தக் குழம்பு அபிஷேகம் பண்ணினானே...அவன் வச்சது தான் சட்டம். எண்ட்டோமெண்ட் போர்டுலே...

ராம் :- அந்தக் கொள்ம்பு தூக்கியா அவ்வளவு வேலை செய்யிறான்?

சர்மா :- அவனை ஆபீஸ்லே பாத்தா நீ அரண்டுடுவே...அந்தப் பேப்பர் எல்லாம் எங்கிட்டே கொடு...ராம் இந்த வேலையெல்லாம் நானே கவனிக்கிறேன். முடிச்சுட்டு கையோட ஆர்டரும் கொண்டு வர்ரேன்.

ராம் :- யோவ் சர்மா! நீர் இன்னும் பழைய ஆளா தானய்யா இருக்கீர். இந்தாங்க பேப்பர்...

சர்மா :- அதெல்லாம் ஒண்ணுமில்லே. நான் ஆள் அடியோட மாறியாச்சு... அது போகப் போக உனக்கே தெரியும்... நீ ஊருக்குக் கிளம்பிப் போய்ச் சேரு...உனக்குப் பின்னாடியே ஆர்டரும் வரும்.

ராம் :- அப்ப நீங்க எப்ப ஊருக்கு வர்றீங்க?

சர்மா :- ஆர்டர் போகட்டும், அப்பறம் நான் வர்றேனப்பா... உங்களையெல்லாம் நான் மறக்க முடியுமா? உங்களோட எல்லாம் எவ்வளவு பழக

வேண்டியிருக்கு...சரி சரி ட்ரெயினுக்கு டைம் ஆயிடுத்து நீ போப்பா...

ராம் :- ரைட்டோ...
(ராம் போகிறான்)

சேகர் :- சர்மா இவனைத்தான் நம்ம கைத்துடுப்பா வச்சுக்கணும். ஜமீன்தார் வீட்டுப் பையன் நம்ம கைக்குள்ளே இருந்தா...நமக்கு எவ்வளவு சௌகர்யமா இருக்கும்...

சர்மா :- ஜமீன்தார் வீட்டுப் பையன் போறாது. ஜமீன்தாரே நம்ம கைக்குள்ளே வந்து மாட்டிக்கணும்...

சேகர் :- ஆமாம் ஜமீன்தார் பேங்க்கிலே இருந்து வெலகினதினாலேதான் உங்க சொத்து போச்சு... அவர் பையன் கிட்டே நீங்க கொஞ்சங்கூடக்கோபமில்லாமெ அமைதியாப் பேசறிங்களே...

சர்மா :- நான் பட்ட வேதனையெல்லாம்...அந்த ஜமீன்தார் அவர் கொஞ்சங்கூடசிந்தனை இல்லாமெ பேங்க்கை விட்டு விலகினார். அதனாலெதான் தெருவிலே நிக்கிறேன். அவர் சிந்தனையும் கொந்தளிக்கும் படியான காலம் வரும். சரி சரி அதைப் பத்திப் பின்னாடி யோசனை பண்ணிக்கலாம். மொதல்லே இப்ப நாம வரதராஜனைப் போயி பார்க்கலாம்.

காட்சி-15

# வரதராஜன் வீடு

[வரத்ராஜ அய்யங்கார், அரிவாள்மனை முன் உட்கார்ந்து காய்கறி நறுக்கிக் கொண்டிருக்கிறார். அவர் கை அரிவாள் மனையில் பட்டு விடுகிறது, துடிக்கிறார்).

**வரத :-** கர்மம்.. மாசத்திலே மூணு நாள் நமக்கு இந்த சமயல் உத்யோகம்...அவ ஜம்முனு வாசல்லே உக்கார்ந்துண்டு மாம்பழம் சாப்பிடுறா...

(மேடை மறைவிலிருந்து பெண் குரல்)

**குரல் :-** இந்தாங்கோ உங்களைத்தானே? மாசத்திலே மூணு நாள் உக்கார்ரேன்னா அதுக்கு நானா பொணை? அந்தப் பத்திரிகையை எடுத்துப் போடுங்கோ...

**வரத :-** நீ பெரணையோ—நான் பெரணையோ... கிட்டெ வந்துடாதே பத்திரிகையிலே இருக்கிற ஆசையிலே—தீட்டாயிடப் போறது...

(பத்திரிகையை வீசி எறிகிறார்)

**குரல் :-** கர்மம்! கர்மம்!! அடுத்த ஜன்மத்திலேயாவது ஒரு நாள் ஹாய்யா புருஷனைச் சமையல் பண்ணச் சொல்லிட்டுப் பத்திரிகை படிக்கணும்.

[சர்மாவும் சேகரும் வருகின்றனர்]

**சர்மா :-** என்ன வரதராஜ அய்யங்கார்! தளிகை தயாராகிறாப்போல இருக்கு...என்ன வத்தக் குழம்பு?

**வரத :-** [எழுந்தபடி] அடாடா சர்மாவா! வரணும் வரணும்... உங்களுக்குஏற்பட்ட நஷ்டத்தைப்பத்தி... குட்டி நிர்மலா கல்யாணம் நின்று போன துக்கத் தைப் பத்தி...கேள்விப்பட்டேன் சர்மா... அப்படியே என் உடம்பு வெல வெலத்துப் போச்சு. வேஷ்டி இடுப்பிலேயே நிக்கலேன்னா...

**சர்மா :-** ஓய்! இப்பொ வேஷ்டி இடுப்பிலே நிக்கற தோல்லியோ?

**வரத :-** போதும் சர்மா புரளி...சனீஸ்வரன் யாரை சும்மா விடறான். அந்த நள மகாராஜாவையே மருந்து பாட்டிலைக் குலுக்கிற மாதிரி குலுக்கிப் பிட்டான்னா சும்மாவா?

**சர்மா :-** என்ன ஸ்வாமி ! உங்களை ஒரு முக்கியமான விஷயமாப் பாக்க வந்தேன்.

**வரத :-** என்ன சர்மா முக்கியமான விஷயமா? ஆப்தா பார்க்க வரப்பொ இந்த மாதிரி அபஸ்மாரத்தோட வரலாமோ ?

**சேகர் :-** ஓய் வத்தக் குழம்பு என்னய்யா வார்த்தைஇது?

**வரத :-** பாருங்கோ சர்மா...சனீஸ்வரன் வர்ரப்பொவே இந்த மாதிரி (சைகைக் காட்டி) மனுஷ்ய ரூபத்தி லேயே வருவான்னு சொல்லுவா!

**சேகர் :-** யாருய்யா சனீஸ்வரன்? சரி சும்மா...நான் வர்ரேன்... (போகிறான்).

**சர்மா :-** [கடிதக் கட்டைக் கொடுத்து] ஸ்வாமி! இதைக் கொஞ்சம் பாருங்க.

**வரத :-** அடாடா...இது கள்ளிப்பட்டி கோவில் விஷயம்னா...இதை ஆபீஸ்லே கிளப்பி விட்டதே நான்னா...அந்த மனுஷன் ஜமீன்தார் ஒரு மாதிரி...

எண்டோமெண்ட் அதிகாரிகள் போனா...முகம் குடுத்துப் பேசுறதில்லே...ஹாம்பான்...ஹாம்பான். மனுஷன் சுத்த எண்ணை மாங்காய் போங்க.

சர்மா :- இந்த விஷயத்தை ஜமீன்தாருக்குச் சாதகமா முடிக்கணும்.

வரத :- சர்மா நீங்க கேட்டு நான் இல்லேன்னு சொல்லுவேனா... முடிச்சுர்றேன் போங்க.

சர்மா :- அதிகாரிகள் ஒண்ணும் வம்பு பண்ண மாட்டாங்களே...

வரத :- இந்தக்காலத்திலே எந்த அதிகாரி பேப்பரைப் பாத்துக் கையெழுத்துப் போடுறான். பாதி டயம் பத்திரிகை படிக்கிறான். இல்லேன்னா யாருக்காவது போன் பண்றான். இல்லே காண்டினுக்குப் போகிறான். குமாஸ்தாக்கள் பேப்பரை நீட்டுவா.. அவா கையெழுத்துப் போடுவா... அதுவும் இப்ப கிண்டியிலே அஸ்வமேத யாகம் நடக்கிற டயம். அதிகாரி கிண்டிக்குப் புறப்படுறப்பொ இந்தப் பேப்பரை நீட்டினா...அவனுக்கு இருக்கிற அவசரத்திலே—அவன் அது பேப்பரா—புரோ நோட்டான்னுகூடப் பாக்க மாட்டானே...

சர்மா :- ரொம்ப சந்தோஷம்! உங்களுக்கு ஏதாவது சம்திங் வேணும்னா.

வரத :- இந்த சம்திங் வியாபாரம் எங்கிட்டே என்னிக்கும் கிடையாது. சர்மா! நீங்க ஐஸ்வரியவானா இருக்கலாம். இல்லே ஆண்டியாக இருக்கலாம். என்னைப் பொருத்தவரை நீங்க என் பிரண்டு. ஆப்தான்...உங்ககிட்டே பணம் வாங்கினா நான் உருப்படுவேனா? இந்தக் கைநீட்டிப் பசங்க எல்லாம் அடுத்த ஜென்மத்திலே—ரயில்வே ஸ்டேஷன்லே

பஸ் ஸ்டாண்ட்லே—கை நீட்டிப் பிச்சை எடுத்துத் தான் பொழைக்கப் போறான்.

சர்மா :- வரதன்! நீங்க ஆயிரத்திலே ஒருத்தர். வத்தக் குழம்புலேயும் ஒரு மகிமை இருக்கத்தான் செய்யுது. நான் வர்ரேன்.
(போகிறார்.)

## காட்சி-16

## ஜமீன்தார் வீடு

ராம் :- வாங்க மிஸ்டர் சர்மா!

சர்மா :- நமஸ்காரம்!

பரம :- ஏய் மூக்கா...நாற்காலியை எடுத்துப் போடு! சர்மா...உக்காருங்க...ரொம்ப சந்தோஷம்... உங்களுக்கு ரொம்ப கடமைப் பட்டிருக்கேன்...

சர்மா :- சே...சே...இந்த மாதிரியெல்லாம் நீங்க சொல்லக் கூடாது...இப்படிப்பட்ட ஒரு கௌரவமான குடும்பத்துக்கு உதவி செய்யறதே எனக்கு ஒரு பாக்கியமாச்சே...

பரம :- அதெல்லாம் ஒண்ணுமில்லை...

சர்மா :- ரொம்ப வருஷங்களாகவே நான் கேள்விப் பட்டிருக்கேன். உங்களைப் பாக்கணும்னு ரொம்ப நாளா ஒரு ஆவல்... இவ்வளவு பெரிய ஒரு சொத்தை வச்சுண்டு, ஒரு கெட்ட பேரு இல்லாமெ

ஒரு கோர்ட்டுக்குப் போகாமெ...ஒரு அரசியல், கிரசியல்னு அவதிப்படாமெ, இவ்வளவு அலங்கா ரமா, இருக்கிற ஒரு குடும்பம் இந்த ராஜதானியி லேயே கிடையாதே!

பரம :- என் வரையில் ஏதோ பெரியவங்க கிழிச்ச கோட்டைத்தாண்டாமெ காலத்தைக் கழிச்சுட் டேன், எனக்குப் பிற்காலத்திலே இதெல்லாம் வச்சு நடத்த வேண்டியவன் ராம்தான். அவன் ஒரு மாதிரி.

ராம் :- என்னப்பா ஒரு மாதிரிங்கிறிங்க?

பரமசிவம் :- உங்களைப் போல இருக்கிற சினேகிதங்க தான் அவனைக் கவனிச்சுக்கணும்.

சர்மா :- கண்ணுக்குக் கண்ணா கவனிச்சுக்கறேன். கவலைப் படாதிங்கோ.

பரமசிவம் :- எல்லா விஷயத்திலேயும்... கெட்டிக் காரனாகத்தான் இருக்கான்... ஆனா... இந்தக் குடும்ப கவுரவத்தைப் பத்திக் கவலைப்பட மாட்டேங்கிறான் இந்தக் காலத்துக்குப் பாருங்க... கொஞ்சம் அவுங்கவுங்க நிலைக்குத் தகுந்தபடி இருக்கணுமில்லே...

சர்மா :- ஏதாவது பொறுப்பான ஒரு தொழில் எடுத்து நடத்தினான்னா...தானே வந்துடறது.

பரமசிவம் :- நீங்க சொல்றதும் ரைட்டுதான்... நான் கூட கொஞ்சம் நிறையவே மொதல் போட்டு ராமையே கவனிக்க விடலாம்னு தான் பாக்கறேன்.

சர்மா :- அதேதான் நானும் சொல்லணும்னு இருந்தேன்.

[போஸ்ட்...போஸ்ட்...என்ற குரல் கேட்டு ராம் போய் தபாலை வாங்கி வருகிறான் பரம சிவம் ஒரு கடிதத்தைப் பிரித்துப் பார்க்கிறார்]

பரமசிவம் :- மெட்ராஸ் கவர்மெண்ட்லே நம்ம ஊருக்கு வடக்குப் புறமா இருக்கே காட்டாறு அதுக்கு ஏதோ பாலம் போடலாம்னு இருக்காங்க ளாம். அதைப்பத்தின அறிக்கை அனுப்பியிருக் காங்க...இந்த ஊர்லே யாருக்குக் கொடுக்கிறது... மத்த விபரமெல்லாம் கேட்டு இருக்காங்களாம்... இதைக் குமாஸ்தா கிட்டே கொடுத்து ஏதாவது பதில் எழுதச் சொல்லணும். இது ஓயாத தொல் லையாயிருக்கு ஆறு மாசத்துக்கு ஒரு தரம். நான் என்ன காண்ட்ராக்டரா...

சர்மா :- நான் கூட வர்ரப்ப ஆச்சரியப்பட்டேன். இவ் வளவு பெரிய ஆறு இருக்கே... ஒரு பாலம் கூட இல்லையேன்னு தோணித்து.

பரமசிவம் :- யாரோ ரெண்டொருத்தர். இதுக்கு முன்னாடிகூடப் பாலம் கட்டணும்னு என்னமோ முயற்சி பண்ணினாங்க... ஆனா அதொண்ணும் சரியா நடக்கலே...

சர்மா :- சாதாரணமான பசங்க முயற்சி பண்ணிபிருப் பாங்க...உங்களைப்போல இருக்கிற பெரிய மனுஷாளுங்க இதை எடுத்து முடிக்க முயற்சி பண்ணணும்.

பரமசிவம் :- [சிரித்துக்கொண்டு] நான் பாலம் கட்டரதா? காண்ட்ராக்ட் எடுத்து?

சர்மா :- அதிலே ஒண்ணும் கேவலமில்லையே... இங்கி லாந்திலே எல்லாம் பெரிய லார்ட்ஸ் இந்த மாதிரி காரியத்தைத் தேசத்துக்குச் சேவையா நினைச்சு சாதிக்க முன்வருவாங்க.

பரம :- ஓகோ...அப்படியா?

சர்மா :- உங்க குடும்பத்திலே—உங்க தாத்தா, உங்க தகப்பனார், இவங்கள்ளாம் சத்திரம் கோயில்லாம் கட்டிக் கொடுத்திருக்காங்க. போற ஜனங்க எல்லாம் வாயார வாழ்த்திக்கிட்டுப் போறாங்க...உங்க தலை முறையிலே நீங்க செய்து முடிச்சதா ஒரு காரியம் இருக்க வேண்டாம்? இந்தப் பாலத்தை எடுத்துக் கட்டி முடிச்சுடுங்கன்னா...

ராம் :- ஆமாப்பா...இப்ப பரிசல்லெ போறவங்க எல்லாம் நம்மை வாழ்த்து வாங்க தைரியமா ஜெமீன்தார் முன்வந்து கட்டினார்னு...

சர்மா :- உங்களுக்குச் செலவு ஒண்ணுமில்லே. கவர்மெண்ட்லே தான் பணம் குடுக்கப் போறாங்க.

பரம :- ஆனா தொந்தரவு இருக்குங்களே சர்மா...

சர்மா :- தொந்தரவைப் பத்தி நீங்க கவலைப் படாதிங்க. அதையெல்லாம் நான் பார்த்துக்கறேன். காண்ட்ராக்ட்டை உங்க பேரிலே எடுத்துக்கங்க— வேலையெல்லாம் நான் பார்த்துக்கறேன்.

ராம் :- ஆமாப்பா; நானும் கூட இருந்து வேலை செய்யிறேன்.

பரம :- என்னடா இது சர்மாகிட்டே வேலை வாங்கிட்டு, இந்த அற்ப லாபத்தைப் போயி நாம எடுத்துக்கிறதா?

ராம் :- லாபத்தைச் சர்மாக்குக் கொடுத்திடலாம். இப்ப அவரு இருக்கிற நிலையிலே அவருக்கு உதவியா இருக்கும்.

சர்மா :- பாலம் கட்டின கௌரவமும், பெருமையும் உங்களைத்தான் சேரணும்...அப்படின்னா...இதை நான் எடுத்து நடத்துறேன்.

ராம் :- ஆமாப்பா...நம்ம குடும்பத்துக்கு ஒரு கௌரவம். எனக்குத் தொழில்லே ஒரு பயிற்சி...சர்மாவுக்கு ஒரு ஹெல்ப். நம்ம ஊருக்கு ஒரு பாலம்...இதைவிட அழகான திட்டம் என்ன இருக்க முடியும்.

பரம :- சர்மா! பட்டணத்துலே இருந்துக்கிட்டே இந்த கோயில் விவகாரத்தைச் சமாளிச்சுட்டிங்க இப்ப என்னடான்னா...இங்கே வந்த ஒரு மணிக்குள்ளே சும்மா சுத்திக்கிட்டு இருந்த ராமுக்குக் கூட ஒரு வேலை செய்யணுங்கிற ஊக்கத்தை உண்டு பண்ணிட்டிங்க...பாலம் கட்டி முடிஞ்சா இந்த ஊர் ஜனங்களுக்கே நீங்க பெரிய நன்மையைப் பண்ணிடுவிங்க சர்மா...நீங்க சாதாரண ஆள் இல்லே...கடவுள் தான்னு நினைக்கிறேன். அப்ப நாளைக்கே நம்ம குமாஸ்தாகிட்டே சொல்லி. நாம பாலத்து வேலையை எடுத்து நடத்தறதாக எழுதிப் போடச் சொல்லு...சரி.

சர்மா :- நீங்க ரெண்டு பேரும் போய்ச் சாப்பிடுங்க...

[ராமுவும், பரமசிவமும் போகின்றனர்]

சர்மா :- [தனிமையில்] கடவுள் தூதன்னு வேணும்னா நினைங்க...இல்லே காலன் தூதன்னு வேணும்னா நினைங்க...எனக்குப் பணம் வந்தா சரி...அவ்வளவு தான்.

## காட்சி—17

# சென்னை பார்க்

[நிர்மலா ஒரு பெஞ்சியில் உட்கார்ந்திருக்கிறாள். ரவி வருகிறான். ரவி நிர்மலாவைப் பார்க்கிறான். அவன் மனது குமுறுகிறான்]

ரவி :. நிர்மலா! நிர்மலா...

நிர்மலா :- [திடுக்கிட்டு] ஓ...நீங்களா...

[என்று எழுந்து நடக்கிறாள்]

ரவி :- நான் கேள்விப் பட்டேன் உங்களுக்கு நேர்ந்த பண நஷ்டத்தைப் பற்றி.

நிர்மலா :- நாங்கள் ஆண்டியாய் விட்டோம் என்ற தகவல் உங்களுக்கு எட்டி விட்டது என்ற விஷயந் தான் நீங்கள் எனக்கு எழுதிய கடிதத்திலிருந்து தெரிந்து விட்டதே...

ரவி :- கடிதம் எழுதியபோது எனக்குத் தெரியாது நிர்மலா.

நிர்மலா :- பணத்துக்காக- என்னை நீங்களோ - உங்கள் அக்காவோ நிராகரிக்கவில்லை என்று சொல்லு கிறீர்கள்...நீங்கள் சொல்வதை நான் நம்புகிறேன்... நீங்கள் போகலாமே...

ரவி :- கடுகடுப்பாகப் பேசாதே நிர்மலா—நடக்க விருந்த மணம் நடக்காமல் போனாலும், உன் நலனைக் கருதும் நண்பன் என்ற முறையிலாவது என்னோடு பேசக் கூடாதா?

நிர்மலா : விசித்திரமாக இருக்கிறதே உங்கள் பேச்சு... பாங்கில் உள்ள பணத்தின் ஏற்றத் தாழ்வுகளைப் பொருத்து-காதலை நட்பாக மாற்றிக் கொள்ளவும், நட்பைக் காதலாக மாற்றிக் கொள்ளவும், நான் கற்றுக் கொள்ளவில்லை...என் தீர்மானங்கள் இருதயத்திலிருந்து பிறப்பவை...என்றும் நிரந்தர மாக நிற்பவை...

ரவி :- உன் இதயத்து மற்ற இதயத்தில் உள்ள உண்மை உணர்ச்சி புரியாமல் போனது தான் எனக்கு விசித்திரமாக இருக்கிறது.

**நிர்மலா :-** சந்திக்காத சாலைகள் போல் நம் இருவரின் வாழ்க்கைப் போக்கும் இருக்கப் போகிறது. வீணே பேசி நாம் மனதை அலட்டிக் கொள்ள வேண்டாம்.

**ரவி :-** என் தோற்றமே உனக்கு வேதனை தரும் என்று தெரிந்திருந்தால், நான் இந்தப் பக்கமே வந்திருக்க மாட்டேன் நிர்மலா... நான் வருகிறேன் நிர்மலா....
[போகிறான்]

**நிர்மலா :-** [ரவியைத் திரும்பிப் பார்த்துவிட்டு]
விருப்பத்தைக் காட்ட நினைத்து நான் வெறுப்பை மட்டும் காட்டுகின்றேன்... உள்ளம் தழுவத் துடித்தது. உதடுகள் வம்பு வார்த்தைகள் பேசின. உண்மை எண்ணத்தை உணறாமல் வெறும் வார்த்தைகளை மட்டும் நம்பிப்போய் விட்டார். பெண்களாகிய நாம் நமக்கே விரோதிகள்.

## காட்சி — 18

# காட்டாறு பாலம்

[பாலத்தின் ஓரிரண்டு கண்கள் பூர்த்தி ஆகியிருக்கின்றன. உளிதட்டும் சப்தம் கேட்கின்றது. ஆட்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றனர். சர்மா சுத்திப் பார்த்துக் கொண்டு வருகிறார். சேகர் சர்மாவை நெருங்கி, அவரைத் தனிமையாக அழைக்கிறன். அவர் மேடைக்கு அருகில் வருகிறார்]

**சர்மா :-** என்ன சேகர்: என்ன சமாசாரம்? எல்லாம் திட்டப் பிரகாரம் தானே நடக்குது.

சேகர் :- இதுவரை நடந்த செலவுலே 15000 ரூபாய் வரையில் மீத்தாச்சு...எல்லாம் சீப் சாமானா வாங்கிப் போட்டுட்டேன். எல்லாம் கலப் படங்க. அதனாலே தான்...பத்து அல்லது... பதினைந்தாயிரம் தீத்துட்டேன்.

சர்மா :- பணமெல்லாம் எங்கே?

சேகர் :- உங்க அக்கௌண்ட்லேயே கட்டிட்டேன்.. நாம எதிர் பார்த்ததை விட இதிலே புதுசா ஒரு சிக்கல் இருக்குங்க.

சர்மா :- என்னது?

சேகர் :- பாலத்தை ஒழுங்காக் கட்டாமெ பணத்தை மிச்சம் புடிச்சுப் பணம் சம்பாதிச் சுடலாம்னு நாம் பாத்தோம். இந்தப் பாலம் என்னடான்னா ஒரேயடியா பணத்தை அழுக்கும் போல இருக்கு...

சர்மா :- நீ சொன்னது ஒண்ணுமே எனக்கு விளங் கலையே....

சேகர் :- அஸ்திவாரத்துக்குப் பாறையே கிடைக்கலீங்க ...தோண்டத் தோண்ட ஒரே மணலா இருக்கு... அஸ்திவாரமே நிலைக்காது போல இருக்கு.

சர்மா :- அப்ப என்னதான் பண்றது.

சேகர் :- அதுதாங்க எனக்கும் புரியலே. ஒரே கொழப் பமா இருக்கு...

சர்மா :- இதிலே புரியிறதுக்கு என்ன இருக்கு. ஏதோ கலப்படமாப் போட்டு, பாலத்தைக் கட்டினோம்னு ஒப்பேத்து... சேகர். இதுவும் ஒரு நல்லதுக்குதான். நேரே இன்ஜினியர் கிட்டே போ...கவர்மெண்ட்லே இந்தப் பாலத்துக்காகப் போட்ட எஸ்டிமேட் தப்பு ...அஸ்திவாரம் போட பாறையே கிடைக்கலே. சிமிண்ட் கான்கிராட்லெதான் பாலத்துக்குப் பூரா

அடித்தளம் போட்டாகணும். அப்படின்னு சொல்லி தொகையை ஏத்திடு!!

**சேகர் :-** சிமிண்ட் கான்க்கிராட்லே அஸ்திவாரம் போடறதுன்னா பாலம் கட்டி முடிய ஆறு மாச மாகுமே. 3 மாசத்திலே முடியாதே!

**சர்மா :-** முட்டாள்! பாலம் பூரா அடித்தளம் யார்ரா போடப் போறாங்க...சும்மா இன்ஜினியர் வர்ரப் பொ...அவருக்கு காட்ட ரெண்டொரு கண்ணுலே போட்டு ஒப்பேத்து...பாக்கி யெல்லாம் அப்படியே சும்மாக் கலப்படமாப் போட்டு அடிக்கலாம். நமக்கு வேலை முடியணும்...பணம் கைக்கு வரணும்.

**சேகர் :-** அப்ப அஸ்திவாரம் ஸ்டாங்கா இல்லாமேயே...

**சர்மா :-** சத்தம் போட்டுப் பேசாதெடா. நமக்குத் தேவையானது பணம்...பாலம் கட்டினோம்னு ஒப்பேத்தணும்... நல்ல அஸ்திவாரம் போட்டு கட்டின பாலங்கள் விழறது இல்லையா ... பாலம் விழறதும் விழாததும், அந்தந்தப் பாலத்தினுடைய அதிர்ஷ்டந்தாண்டா ... சோழ ராஜாக்கள்ளாம் அந்தக்காலத்திலே கட்டினாங்களே பாலம்... கான்க்ரிட், அஸ்திவாரம் போட்டா கட்டினாங்க... விதவிதமா ஆகாரம் சாப்பிடுறான். வாரத்துக்கு ஒரு தரம் கோல்டு இன்ஜக்ஷன் பண்ணிக்கிறான். பட்டுன்னு போயிடுறான்...தினம் ஒருவன் சோத்துக்குத் திண்டாடுறான்... நூறு வயசு வரையிலே காலத்தை ஓட்டிடுறான். அது மாதிரி தான் இந்த பாலத்து விஷயமும்.

**சேகர் :-** பாலம் எக்கேடு கெட்டுப் போகட்டுங்க அதைப்பத்தி எனக்குக் கவலையில்லை. நாளைக்கு என்கொயரி அது, இதுன்னு வந்து கம்பி எண்ணும் படி ஆயிடுத்துன்னா—.

சர்மா :- நாம்ப ஏன்டா மாட்டிக்கப் போறோம். காண்ட்ராக்ட்லே கையெழுத்துப் போட்டிருக்கிறது பரமசிவம்...மேற்பார்வை செய்யிறது ராம்ங்கிறது, பொதுஜன அபிப்ராயம்...எனக்கு என்ன வந்துது... என்னைப் போயி யாரு கேக்க முடியும்...

சேகர் :- நாளைக்கு விஷயம் வெளிப் பட்டுதுன்னா அப்பறம் ராம் ஜமீன்தார் முகத்திலே எப்படி முழிக்கிறது?

சர்மா :- அதைப்பத்தி நான் ஒண்ணும் கவலையே படலை...நியாயம், தர்மம், மானம் எல்லாத்தையும் விட்டாச்சு...இந்தப் பாலத்துக்கு ஒரு கண்ணா தின்னா, எனக்கு மூணு லட்சம் ரூபாய் வர்ரதுன்னா நான் நிக்கத் தயார்

சேகர் :- என்னதான் இருந்தாலும் அஸ்திவாரம் போட்டு அப்ரூவ் ஆற பயத்திலே நீங்க இங்கெ இருந்தீங்கன்னா...உங்க மேலெ சந்தேகம் வராமெயா இருக்கும்.

சர்மா :- ரொம்ப கரெக்ட். சேகர் நீ சொல்றது. அஸ்திவாரம் போடரப்பொ...ஜமீன்தார் அசலூரில் இருக்கார். நான் இங்கே இருக்கிறதா? கூடவே கூடாது. ஜமீன்தார் இங்கெ இருக்கணும்...நான் அசலூருக்குப் போயிடணும்...அதுதான் சரி... நாளைக்கே எனக்கு உடல் நிலை சரியில்லேன்னு கொடைக்கானலுக்குப் போயிருக்கிறஜமீன்தாருக்கு ஒரு தந்தி அடிச்சிடு. அவர் இங்கே வந்து வேலையை மேற் பார்வை பார்க்கட்டும்...நீ என் ஆளாயிருந்துக்கிட்டு எவ்வளவு பணம் சம்பாதிக்க முடியுமோ அவ்வளவு சமாளிச்சு எனக்கு அனுப்பிச்சிடணும்.

சேகர் :- அப்பொ அந்தப் பெரியவரே நேரடியாக பாப்பாரு...

சர்மா :- அதையெல்லாம் கவனிக்க எனக்கு இப்ப அவகாசம் இல்லே...அன்னமிட்ட வீட்லேயும் கன்னமிடத் துணிஞ்சாச்சு...இந்த மூணு மாசத்திலே நான் பணக்காரன் ஆகணும்...

சேகர் :- நீங்க சரியான ஆள்தான் சர்மா.

சர்மா :- சரி சொன்னதையெல்லாம் உடனே கவனிச்சு வேலை செய்.

[ராம் வருகிறான்]

சர்மா :- நீ எதுக்குப்பா வெய்யில்லெ எல்லாம் அலையிறே? வேலையைக் கவனிச்சுக்கத்தான் நாங்க இருக்கோமே...

ராம் :- ஒரு மாசத்திலே இவ்வளவுதானே ஆயிருக்கு. இன்னும் ஒரு மாசத்திலே பாக்கியெல்லாம் முடிஞ்சுடுமா?

சர்மா :- அது எல்லாம் முடிஞ்சுடும். கொஞ்சம் பணச் செலவு தான்கூட ஆகும்போல இருக்கு...அதுக்குத் தான் எஸ்டிமேட்கூட மாத்தி எழுதச் சொல்றதுக்காக என்ஜினியர்கிட்டெ சேகரை அனுப்பிச்சிருக்கேன்.

ராம் :- இப்பத் தேவைக்கு வேணுங்கிற பணத்துக்கு செக் போட்டுக் கொடுத்துடட்டுமா?

சர்மா :- செக்கெல்லாம் வேண்டாம்ப்பா. நீயே மாத்தி பணமாக் கொடுத்திடு. நமக்கே ஏகப்பட்ட கடன்காரங்க இருக்காங்க.

[என்று சொல்லித் தலையைப் பிடித்துக் கொள்கிறார்]

உஸ் அப்பாடா...தலையை என்னமோ இப்படி அடிக்கடி சுத்துது.

ராம் :- கொஞ்சம் நிழல்லே போயி உக்காருங்க. இப்படியெல்லாம் வெய்யில்லே நின்னுக்கிட்டே இருந்தா ஏதாவது உடம்புக்கு...

சர்மா :- என் நண்பர்கள் சொல்றதுண்டு...குண்டு அடிச்சாலும், குண்டு சிதறுமே தவிர சர்மா சிதற மாட்டார்னு. இப்பொ என்னடான்னா..கொஞ்சம் உழைச்சாலும் உடம்புக்கு என்னமோ பண்றது.

[இருவரும் போகின்றனர். சர்மா கீழே விழுகிறார்]

## காட்சி—19

## சர்மா புதுவீடு

[சர்மா பேப்பர் படிக்கிறார். நிர்மலாவும் இருக்கிறாள்]

சர்மா :- பல வருஷங்களாக, பலர் முயற்சித்து ஆனால் நடைபெறாத அற்புதம்...கள்ளிப் பட்டியில் இன்று நடைபெற்றது என்று சென்னை மராமத்து இலாகா மந்திரி கள்ளிப் பட்டியில் காட்டாற்றுப் பாலத்தைத் திறந்து வைக்கையில் கூறினார். கள்ளிப்பட்டி ஜமீன் தாரின் ஊக்கத்தையும்...தைரியத்தையும், ஆர்வத் தையும், மந்திரி புகழும் போது பொது ஜனங்கள் பலத்த ஆரவர்ரம் செய்தனர்.

[சர்மா பேப்பரைக் கீழே வைக்கிறார்]

சர்மா :- நிர்மலா! இந்த வீடு உனக்குப் புடிச்சிருக்கா? பிடிச்சிருக்குன்னு சொன்னேன்னா இதை வாங்கிற துக்கும் ஏற்பாடு செய்துடறேன்.

நிர்மலா :- மூணு மாசத்துக்குள்ளே நாம சந்தோஷமான ஒரு நிலையிலே இருப்போம்னு நான் நினைக்கலே...நேத்திக்கு டாக்டர் வந்த போது சொன்னார். உங்க உடம்பைப் பத்தி இனிமே பயமில்லேன்னு.

சர்மா :- என்னிக்குத்தான் என் உடலுக்குப் பயமிருந்தது அப்படி யமனே வந்தாலும் நிர்மலா, உனக்கு வேணுங்கிறதைச் செய்யற வரைக்கும் நான் போக மாட்டேன். உன் கல்யாண விஷயம் நல்லபடியா முடிஞ்சுதுன்னா எனக்குக் கவலையே இல்லை.

நிர்மலா :- அதைப் பற்றி ஒன்றும் பேச வேண்டாம் சித்தப்பா!

சர்மா :- நிர்மலா! எங்கிட்டே நீ உண்மையைச் சொல்லலாம்! இன்னும் இந்த ரவியை நீ மறக்கலேயா!

[நிர்மலா பதில் பேசாமல் நிற்கிறாள்]

மௌனம்னா...சம்மதம்னு தானே அர்த்தம்!...

நிர்மலா :- நீங்க எப்படி வேணா அர்த்தம் பண்ணிக் குங்க!

சர்மா :- ரவியும் கள்ளிப் பட்டியிலே தான் இருக் கானாம்! அவனைப் பத்தி மத்த எல்லாத் தகவலும் சேகர் வந்தால் தெரியும்!

நிர்மலா :- சேகருக்கு அவங்கமேலே அப்படி என்ன அக்கரை?

சர்மா :- உம்மேலே இருக்கிற அக்கறை தான் காரணம். உன்னைப் பத்தி அடிக்கடி விசாரிச்சுக் கிட்டே இருக்கான்!

நிர்மலா :- எங்கிட்டே கூட ஒரு தரம் சொல்லி யிருக்கான்!

சர்மா :- எனக்குத் தொழில் முறையில் உதவி செய்ய றோங்கிற துணிவிலே என்னையே கேட்டுட்டான்! ஆனா...அதெல்லாம் நிர்மலா பாடுன்னு சொல்லி ஒதுக்கிட்டேன்!

நிர்மலா :- சித்தப்பா! அங்கே பாருங்க...அந்த நெருப் புக் கோழியே வாயிலே நெருப் போட வந்துக் கிட்டிருக்கு! நான் போறேன்!

[சேகரும், பரமசிவத்தின் குமாஸ்தாவும் வருகின்றனர்]

சேகர் :- [நிர்மலாவிடம்] என்ன நிர்மலா! அதுக்குள்ளே புறப்பட்டுட்டே?

நிர்மலா :- அதான் நீங்க வந்துட்டீங்களே! [சர்மா விடம் திரும்பி] நான் விமலா வீட்டுக்குப் போய் ஒரு வாரமாகிறது சித்தப்பா! நான் போயிட்டு வர்றேன்!

சர்மா :- வாங்க! வாங்க!! குமாஸ்தா! பேப்பர்லே பார்த்தேன்! தடபுடலா நடந்திருக்காப்பிலே இருக்கு!

குமாஸ்தா :- பெரிய அய்யாவுக்கு ரொம்ப சந்தோஷம்! இந்தப் பல விஷயம் முடிஞ்சதிலே நீங்க திறப்பு விழாவுக்கு வர முடியலைங்கிறது தான் அவருக்கு வருத்தம்!..

சர்மா :- என்ன செய்யிறது? கொடுத்து வைக்கலே!

குமாஸ்தா :- திறப்பு விழா விஷயம் நீங்க பேப்பர்லே பார்க்கிறதுக்குள்ளே உங்ககிட்டே பணம் போய்ச் சேரணும்னு ராம் கொடுத்து அனுப்பிச்சார்! முப்ப தாயிரம் இருக்கு! எடுத்துக்குங்க!

சர்மா :- முப்பதாயிரம் ரூபாயா?...எதுக்கு?...

குமாஸ்தா :- லாபம் சர்மாவுக்குச் சேர வேண்டியது. கௌரவம் தன்னைச் சேர வேண்டியதன்னு தீர்மானம் பண்ணிட்டார் ஜமீன்தார்!

குமாஸ்தா :- திட்டம் தங்களுடையது தானே!..

சர்மா :- என்னமோ! பெரியவர் கொடுத்திருக்கிறதை வேண்டாம்னு சொல்ல முடியாது நாம...!

குமாஸ்தா :- அடுத்த வாரமே உங்களைக் கிளம்பி கள்ளிப் பட்டிக்கு வர முடிஞ்சா வரச் சொன்னார்!

சர்மா :- நிச்சயமா வர்றேன்!

குமாஸ்தா :- அப்போ நான் போயிட்டு வர்றேன்!

சர்மா :- சரி...! பெரியவருக்கு என் நமஸ்காரத்தைச் சொல்லு!

[குமாஸ்தா போகிறான். சேகர் அசடு வழிய சிரித்துக் கொண்டு உடம்பை ஆட்டுகிறான்]

சர்மா :- என்ன சேகர்! கோயில் யானை தீனியைப் பார்த்த மாதிரி ஆடறே!.. உன் பங்கு தானே. எடுத்துக்க ஐயாயிரம்!...

சேகர் :- ஐயாயிரமா?...

சர்மா :- சரி, ஏழாயிரம் எடுத்துக்க...

சேகர் :- பணத்தைத் தான் ஒரு விதமா முடிச்சுட்டீங்க! பாக்கி விஷயத்தையாவது என் மனசு போல முடியுங்க!

சர்மா :- ஏய் ஸ்பேட் ஜாக்கி! அது என்னடாது பாக்கி?

சேகர் :- அது:தான் சர்மா! நிர்மலா மேரேஜ் மேட்டர்!

சர்மா :- என்னடா திடீர்ன்னு இங்கிலீஷ்லே பேசறே? நிர்மாலாவுக்குக் கட்டாயம் நடக்கப் போறது!

நீ தான் நடத்தி வைக்கணும்! பந்தல்காரன், பால் காரன், மேளக்காரன் எல்லாம் உன் மேனேஜ் மெண்ட்தான்! நீ இல்லாமே கல்யாணமா?..

சேகர் :- என்ன சர்மா விளையாடறீங்க? நான் கேட்டது என்ன? நீங்க சொல்றது என்ன?...

சர்மா :- ஆமாம்! நீ குழந்தை! உங்கிட்டே தான் விளையாடணும்! சிச்சீ.. காலை எடுடா!

சேகர் :- ஓகோ...!

சர்மா :- என்னடா ஓஹோங்கிறே!. ராட்சச பார்ட் மாதிரி!..

சேகர் :- காரியம் முடிஞ்சதும் ஆள் மாறிட்டீரே அய்யா!..

சர்மா :- உனக்குச் சேர வேண்டிய கூலியைக் கொடுத் தாச்சு! அப்புறம் என்னடா பேச்சு? நான் எப்போடா சொன்னேன் உனக்கு நிர்மலாவைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கறேன்னு.?

சேகர் :- இவ்வளவு தங்களுக்கு உதவி செய்ததிற்கு இதுதான்...?

சர்மா :- பொண்ணுக்கு இஷ்டம் வேண்டாம்?...

சேகர் :- கடைசி முறையாச் சொல்றேன் சர்மா!... நீங்க சம்மதிக்கலே, நான் உங்களைச் சந்தியிலே நிறுத்தி வைச்சிடுவேன்! உங்க குட்டையெல்லாம் அம்பலப் படுத்துவேன்!

சர்மா :- டேய்! அப்பா! இது பனங்காட்டு நரி. சல சலப்புக்கு அஞ்சாது!.

சேகர் :- அவசரப் படாதே சர்மா! இதுதான் உங்க முடிவான தீர்மானமா?

சர்மா :- சந்தேகமேயில்லை!

**சேகர் :-** பின்னாலே வருத்தப் படுவீங்க சர்மா!

**சர்மா :-** வருத்தமே கிடையாது!

**சேகர் :-** இந்தச் சேகரின் சக்தி சீக்கிரமே உங்களுக்குத் தெரியும்! குட் பை.

## காட்சி-20

## ஜமீன்தார் வீடு

**பரம :-** ஏம்பபா ரவி! அந்த மேரேஜ் விஷயத்திலே என்னப்பா அது?...என்ன தகறாரு?...உங்க அக்கா வுக்குப் பிடிக்கலேயா? இல்லை...உனக்கே பிடிக் கலைய்யா?

**ராம் :-** கல்யாணமே வேண்டாம்னு சொன்ன நாடகத் திலே அக்காவை விட முதன்மையா நின்னது இவன் தான்! அப்பா அந்தப் பொண்ணு செல்லமா வளர்ந்ததாலே கொஞ்சம் துடுக்காப் பேசும்! அதுவும் அந்தக் காலத்திலேதான்! இப்போ மனசு உடைஞ்சு போய், பார்த்தாலே பரிதாபமா இருக்கப்பா!

**பரம :-** நீ என்னப்பா ரவி! பேசாமே இருக்கியே! ஒரு வார்த்தை கூடச்சொல்ல மாட்டேங்கிறியே!

**ரவி :** என்ன பெரியப்பா சொல்றது? ஆத்திரப்பட்ட சூழ்நிலையில் அர்த்தமில்லாத கடிதம் ஒன்று எழுதினேன்! இப்பொழுது நான் விரும்பினாலும் அந்தப் பெண் சம்மதிக்கிறாளா என்று அறிய வேண்டாம்?

ராம் :- நிர்மலா சம்மதம் எனக்குத் தெரியுமப்பா. அவ என்னைக்கும் மாறலே! மாறினதெல்லாம் நீதான்!

பரம :- சர்மாவும் நமக்கு ரொம்ப வேண்டியவராய் விட்டார்! உன் எதிர் காலத்திலே அவர் உனக்கு பெரிய உதவியாக இருப்பார்!

[சேகர் வருகிறான்]

சேகர் :- (வந்து கொண்டே) எதிர் காலத்திலே உனக்கு எமனாகயிருப்பார்!

ராம் :- யாரு...சேகரா?

சேகர் :- ஆமாம்! பாலத்திலே ஏமாந்து போன மாதிரி உங்க மருமகன் கல்யாணத்திலேயும் ஏமாந்து போகாதீங்க!....

பரம :- என்னது? பாலத்திலே ஏமாந்ததா? என்னய்யா?

சேகர் :- எங்கிட்டே கோபிக்க வேண்டாம்! உங்க கோபத்தை சர்மா கிட்டே காட்டணும்! காட்டாத்துப் பாலம் உங்க கௌரவத்துக்கு ஒரு ஞாபகச் சின்னமில்லை! சர்மாவின் ஈரமற்ற வஞ்சகத்திற்கு ஒரு மணி மகுடம்! இங்கே வர்ற போது சர்மா காட்டாத்துக்குப் பாலம் கட்டவர்லே! தன் ஏழ்மை நிலையான இக்கரையிலிருந்து சந்தோஷமான, சௌகரியமான, வசதி நிறைந்த வாழ்க்கையான, அக்கரைக்குப் பாலம் போடத்தான் வந்தார்!.

ராம் :- ஏய்! இலக்கணப் பேச்சு என்னடா உனக்கு?

சேகர் :- நான் பேசற பேச்சு எனக்கல்ல. உங்களுக்கு! காட்டாற்றுப் பாலம் கட்டி முடிக்கு முன்பே, கண்ட சாமான்களை வாங்கி செலவைக் குறுக்கி, தன் வாழ்க்கை பாலத்தைக் கட்டி விட்டான் சர்மா.

ராம் :- நீயும் தானேடா கூட இருந்தே?.

சேகர் :- அதனாலேதான் நான் சொல்றேன்: ஆரம்பத்திலேயிருந்து உங்களுக்குச் சதி செய்து விட்டார் சர்மா! அரசாங்கத்தின் மூலம் உங்களுக்குக் கடிதம் அனுப்பி, கடிதம் வரும் போது இங்கே இருந்து உங்கள் மனதைத் திருப்பி விட்டான்! அஸ்திவாரம் நிறவும் சமயத்தில் தன்னை விலக்கிக் கொண்டு, உங்களை மாட்டி விட்டான்; தனக்கு உடல் நிலை சரியில்லை என்ற ஒரு காரணத்தைச் சொல்லி; அவனுக்கா உடல் நிலை சரியில்லை? அவன் பர்மா சர்மா இல்லை. பர்மா தேக்கு!

ராம் :- நிறுத்துடா மக்கு! இது நாள் வரை அவர் தயவில் இருந்துவிட்டு, இப்போ அவரைப் பத்தியே அவதூறு பேசறே?

பரம :- ஏய் ராம்! அவனை வெளியே போகச் சொல்லு.

சேகர் :- இப்போது வெளியே போகிறேன்! ஆனால், நாளைக்குத் தகறாரு வரும் போது என்னை நீங்கள் தேடி வர நேரிடும்! சர்மாவின் உண்மை உருவத்தையும், அவன் உண்மை உள்ளத்தையும், புரிந்து கொள்ள அதிக நாள் பிடிக்காது. அன்னமிட்டவன் வீட்டில் கன்னமிட்டவன் ஒரு நாள் அம்பலத்துக்கு வந்து தான் ஆகவேண்டும்; காலம் காட்டாமல் போகாது இந்தப் பாலத்தின் கோலத்தை! நான் வருகிறேன்;

ராம் :- போடா!

சேகர் :- குட்...பை.

[இடியும், மின்னலும் கேட்கிறது]

பரம :- அயோக்கியப் பயல்! என்ன புயல் மாதிரியில்லே வந்துட்டுப் போறான்! அவன் சொன்னது ஒண்ணும் விளங்கலியே.!

ரவி :- புயல் மாதிரி மட்டுமில்லே. புயலோடையே வந்திருக்கிறான்! என்னது! இடியும் மழையும்! இப்போ மழைக் காலமே இல்லையே!—

[ரவியும், ராமும் போகின்றனர்]

## காட்சி-21

## பாலம்

பாலம் கட்டப்படுகிறது : மின்னல் பளீர் பளீர் எனக் கண்ணைப் பறிக்கிறது; இடி இடிக்கிறது. 'ஜோ' என்ற சப்தத்துடன் மழை கொட்டுகிறது; புயல் காற்று அடிக்கிறது! காட்டாற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடிக் கொண்டிருக்கிறது! சில நிமிடங்கள் கழித்து, பாலத்தின் மேல் ஒரு பஸ் வருகிறது! பஸ் சிறிது தூரம் வந்தவுடன் புயல் காற்றும், மழையும் திடீர் என்று அதிகரிக்கின்றது! சில விநாடிகளுக்குப் பிறகு ஒரே சமயத்தில் ஐயோ... ஐயோ! அப்பா!! அம்மா! அப்பா!! அம்மா!! என்ற குரல்கள் கேட்கின்றன! பாலம் உடைந்து பஸ் கீழே விழுகிறது!

காட்சி-22

# கிராம ரோடு

*[பாலம் விழுந்த பிறகு...ரோடில் இருவர் ஈரத் துணியுடன் பேசிக் கொண்டிருக்கின்றனர்]*

**ஒருவன் :-** *அக்ரமமய்யா! கட்டின பாலம் மொதல் வெள்ளத்திலேயே விழுந்திடுச்சு...பாலமா கட்டினான்.*

**2-வது ஆள் :-** *பாலம் கூட்டலேய்யா!...பள்ளிக் கூடத்து முப்பது புசங்க பஸ்லே போறாங்க பாரு! அவங்களுக்குப் பாடை கட்டியிருக்கானய்யா பரமசிவம்!*

**ஒருவன் :-** *அவன் வீட்டை இடிச்சா என்னய்யா! அவன் வீட்டைக் கொளுத்தினா என்னய்யா?*

**2 வது நாள் :-** *லட்சக் கணக்கான சொத்தை வச்சுக் கிட்டு, அரசாங்கத்தையும், ஜனங்களையும், இப்படியா ஏமாத்தணும்.*

**ஒருவன் :-** *பாவம்! பச்சைப் பால்மணம் மாறாத பசங்க!...அவங்க வீட்லே தாய், தந்தையர் மனது எப்படிப் பறக்கும்?*

*[அப்போது ராம் வருகிறான். அவனைத் துரத்தி வருகிறது ஒரு கூட்டம்]*

**2 வது ஆள் :-** *பாலம் கட்டின பெரிய மனுஷனுக்குப் போடுடா ரெண்டு!!*

*[அடிக்கிறார்கள். ராம் ஓடி விடுகிறான்]*

காட்சி-23

# பரமசிவம் அறை

[பரமசிவம் பீதியுடன் நின்று கொண்டிருக்கிறார். வெளியில் இருந்து ஜனங்களின் சப்தம் கேட்கிறது]

**குரல்கள் :-** பாலம் கட்டிய பரமசிவன் ஒழிக! காகிதப் பாலம் கட்டிய கயவன் ஒழிக! எமன் வீட்டைக் கொளுத்து! வீடென்னடா வீடு! சிறைக்குப் பின்னாடி இருக்க வேண்டியவன்...பச்சிளங் குழந்தைகளைக் கொன்ற பரமசிவத்தைக் கைது செய்!...

[குறுக்கும், நெடுக்குமாகப் பீதியுடன் அலைகிறார். ராம் பீதியுடன் வந்து விழுகிறான்]

**ராம் :-** அப்பா! பாலம் விழுந்திடுச்சு அப்பா! பாலம் விழுந்திடுச்சு! அதோட நம்ம மானமும் விழுந்திடுச்சு. வெளியே போனா கல்லாலே அடிக்கிறாங்க! அரெஸ்டாம்...போலீஸாம் என்கொயரியாம்...என்னென்னமோ பேசிக்கிறாங்கப்பா!

**பரம :-** பாலம் விழுந்திடுச்சு! அதோட நம்ம மானம், மரியாதை எல்லாம் விழுந்திடுச்சு!

**மரக :-** நான் அப்பவே சொன்னேன்! அந்த மனுஷனை இந்த வீட்டுக்குள்ளேயே நுழைய விடாதிங்கன்னு! ராம் என்னைக்கும் துடைக்க முடியாத அபகீர்த்தியைத் தேடிக் கொடுத்திட்டே அப்பாவுக்கு! பாலம் கட்டினதுக்குப்பணத்தையும் எடுத்துக்கிட்டு அவன் குஷாலா பட்டணத்துக்குப் போயிட்டான்! சர்மா! சர்மானீங்களே.

**பரம :-** மரகதம்! நீ உள்ளே போ!

**மரக :-** என் வாயை அடக்கி அடக்கித்தானே வந்தது இந்த ஆபத்து!

**பரம :-** போ! உள்ளே!

மரக :- நான் போறேன் உள்ளே! நீங்கதான் வெளியே தலையை நீட்ட முடியாது!

ராம் :- அப்பா! என்னப்பா! இது! இப்போ என்ன செய்யறதப்பா!

பரம :- நீ ஒண்ணும் செய்ய வேண்டாம்! அந்தப் பீரோ மேலே இருக்கே அந்த சிகப்புப் பை, அதை எடுத்துக் கிட்டுவா! என்று சொல்லி எழுந்திருக்கிறார்".
"தந்நிலை தாழாமையும், அந்நிலை தாழ்ந்தக் கால் உயிர் வாழாமையும் மானம் எனப்படும்.

[இந்த வாக்கியம் மூன்று முறை அவர் முகத்தில் கேட்கப்படுகிறது. மானம் என்பது மட்டும் நான்கு அல்லது ஐந்து முறை கேட்கப் படும்! ராம் பையைக் கொண்டு வந்து கொடுக் கிறான். பரம சிவம் வாங்கிக் கொள்கிறார்.]

பரம :- நீ செய்ய வேண்டியதெல்லாம் செய்தாச்சு! நான் செய்ய வேண்டியது தான் இனிமே பாக்கி! [பையிலிருந்த துப்பாக்கியை எடுத்துச் சுட்டுக் கொள்கிறார்]

ராம் :- அப்பா! அப்பா!!

[பீதியுடன் இறந்த தகப்பனாரைச் சுற்றிச் சுற்றி வருகிறான். "அப்பா" என்று அவர்மேல் விழுந்து அழுகிறான். எழுந்திருக்கிறான். எழுந்திருக்கும் போது வார்த்தைகள் அவன் முகத்தின்மீது போடப் படுகின்றன!]

குரல் :- சேகர் சொன்னதுதான் நிஜமாக இருக்கும். தான் ஏறிவந்த ஏணியையே தட்டி விடும் எண்ணம் படைத்தவனா சர்மா? எல்லா எதிர்ப்புக்கும் நடுவி லும் அவனை இங்கு அழைத்து வந்தது! நீ தான்! உன் தந்தையின் எமனை அழைத்து வந்ததும் நீதான்! யோசித்துப் பார்: சிறு வயது முதல் நீ

என்னென்ன செய்திருக்கிறாய்? என்றாவது உன் தந்தைக்கு நீ மன அமைதியைக் கொடுத்திருக் கிறாயா? தந்தை என்றால் எப்படிப்பட்ட தந்தை! சிறு வயது முதல் உனக்குத் தாயற்ற குறை தெரி யாது வளர்த்து வந்த தந்தை!

நீ உன் கண்ணில் நீர் வடித்தால், தன் உள்ளத்தால் உதிரம் கொட்டும் அன்பு படைத்த தந்தை! ஊரார் முன்னால் ஒரு சிம்மம் போல், உலவி வந்து, இப்போது உன் செயலால், ஒரு குள்ள நரி யின் கொடிய சூழ்ச்சிக்குப் பலியான தந்தை! அப் படிப்பட்ட உன் தந்தையைக் கொன்றது துப்பாக் கிக் குண்டுமல்ல! அதிலிருந்து கிளம்பிய நெருப்பு மல்ல! அவரை மண்ணோடு மண்ணாக்கியது உன் செயல்! உன் நண்பனின் அசுரத் திட்டம்! அந்தத் திட்டம் உன் தந்தையின் உயிரை மட்டுமா குடித் தது? இல்லை. பல தலை முறைகளாக நின்று நிலவி வந்த உங்கள் குடும்பப் பெயருக்கு உலை வைத்து விட்டது! நல்லொழுக்கச் சீலராகிய உன் தந்தையை நயவஞ்சனாக்கி விட்டது! நாகசர்ப்ப மாக்கி விட்டது! உலகத்தின் கண்கள் முன்பாக உன் தந்தையைக் கொன்றது நீ! மாறாத, மங்காத உங்கள் குடும்பத்தின் புகழை அழித்ததும் நீ. நீ. நீ. நீயேதான்!... நீயே தான்!!

ராம் :- ஆமாம்! நானேதான்! என் தந்தையைக் கொன்றவனும் நான்தான்! என் குடும்ப கௌரவத் தைக் கொளுத்திய கோமாளி நான்தான்! நானே தான்! நானே...

[சிரிக்கிறான். விழுந்து, விழுந்து சிரிக்கிறான். ரவி வருகிறான்]

ரவி :- என்ன ராம் இது? மாமா! மாமா!!

**ராம் :-** அப்பாவை நான் கொன்னுட்டேன்! சர்மாவைக் கூட்டிக் கொண்டு வந்து, அதோ சர்மா நிக்கிறார்! அவரைச் சுடப்போறேன்!

[ஓடுகிறான். ரவி பின் தொடர்ந்து]

**ரவி :-** ராம்! சர்மாவா? எங்கே சர்மா?

**ராம் :-** சர்மா! தூணிலும் இருப்பார்! துரும்பிலும் இருப்பார்! உன்னுள்ளே இருக்கிறார்! உனக்கு வெளியே இருக்கிறார்! எங்கும் இருக்கிறார்!

**ரவி :-** ஐய்யய்யோ! மாமா. மாமா.

[ராமை அணைத்துக் கொள்கிறான்]

## காட்சி-24

**இடம் :-** **பார்க்**

[சர்மா பார்க்கில் விசில் அடித்துக் கொண்டிருக்கிறார்! ''என்ன பிரதர்'' என்ற குரல் கேட்டுத் திரும்புகிறார். சேகர் நின்று கொண்டிருக்கிறான்]

**சேகர் :-** நீங்க பேப்பர் பார்க்கலே போலிருக்கு. பார்த்து இருந்தா இவ்வளவு குஷியா இருக்க மாட்டீங்களே!

**சர்மா :-** (கடுமையாக) சேகர்! என்ன விஷயம்?

**சேகர் :-** நம்ம கூட்டு முயற்சியின் அற்பத விளைவு அந்தப் பாலம்! வெள்ளத்திலே அப்படியே அபேஸ் ஆயிடுச்சு! அது மட்டுமல்ல பிரதர்! கள்ளிப்பட்டி ஜமீன்தார் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு விட்டார்!

**சர்மா :-** *(அலட்சியமாக) ஹா, ஆமா! இப்ப அதுக்கு என்ன? அவர் பாலம் கட்டினார். பாலம் விழுந்து விட்டது! அவமானம் தாங்க முடியாமே தற்கொலைப் பண்ணிக்கிட்டார்!*

**சேகர் :-** *உம். மூணாவது மனுஷன்கிட்டே பேசற மாதிரி பேசறீங்களே! நான் உயிரோடு இருக்கிறப்போ அவ்வளவு சுலபமா அந்த விஷயத்தை ஒதுக்கி நீங்க மறந்து முடியுமா?*

**சர்மா :-** *சரிதாண்டா! உனக்கு என்ன வேணும்? எதுக்கு அடி போடறே?*

**சேகர் :-** *எல்லாம் நிர்மலா விஷயந்தான்! அதிலே நீங்க கொஞ்சம் நேக்கா நடந்துக் கிட்டீங்கன்னா...*

**சர்மா :-** *நடக்க மறுத்தா?*

**சேகர் :-** *மறுக்க முடியாதே! விஷயம் சிக்கலாயில்லே போயிடுச்சு; பாலம் விழுந்திடுச்சு. ஜமீன்தார் தற்கொலை பண்ணிக்கிட்டார்! என்கொய்ரியை ஆரம்பிச்சிட்டாங்க! என்கொய்ரியிலே நான் என் கடமையை மட்டும் செய்துட்டா. நீங்க மாட்டிக்க வேண்டியது தானே?*

**சர்மா :-** *நீயும் தானே மாட்டிக்கணும்?*

**சேகர் :-** *அதுக்கு துணுஞ்சுதானே இறங்கறேன்! நம்ம கதி என்ன ஆனா என்ன? நீங்க கம்பி எண்ணினா போதாது?*

**சர்மா :-** *நீ உன் இஷ்டப்படிச் செய்துக்கடா! (என்று சொல்லி நகருகிறார்)*

**சேகர் :-** *சர்மா! கொஞ்சம் நில்லுங்க! எனக்காக இல்லாட்டியும் என் கையிலே இருக்கிற துப்பாக்கிக் காகவாவது மதிப்புக் கொடுத்து நில்லுங்க!*

*(சர்மா திரும்புகிறார்)*

**சர்மா :-** *என்னைக் கொல்வதால் நிர்மலாவை நீ அடைய முடியும் என்று நினைக்கிறாயா முட்டாள்!*

**சேகர் :-** *அதைப்பற்றி எனக்கு அக்கரை இல்லை. உங்கள் மரணத்திற்குப் பின் அவளை நடுத்தெருவில் நிற்க வைக்க என்னால் முடியும்*

*என்கொய்ரி மூலமாக உங்கள் சொத்து விபரங்கள் அம்பலத்துக்கு வரும்படி செய்வேன்! ஜமீன்தார் எக்காரணத்துக்காகத் தற்கொலை செய்து கொண்டாரோ, அதே காரணத்திற்காகச் சர்மாவும் தற்கொலை செய்து கொண்டார் என்று நான் நிர்மலாவுக்காகச் சேர்த்து வைத்து இருக்கும் சொத்து அரங்சாகத்தாரால் பறிமுதல் செய்யப்படும்! அப்பொழுது நிராதரவாக நிற்பாள் நிர்மலா! அவளுக்கு ஆதரவளிக்க நான் முன் வருவேன்! அப்படி அவள் மறுத்தால் இருக்கவே இருக்கிறார்கள் இந்த நகரத்துக் கண்யமான மனிதர்கள்! எவ்வளவு நாள்தான் ஒரு பெண் வாழ வழியில்லாமல், கையில் பணம் இல்லாமல், கற்பைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்?*

**சர்மா :-** போதும்! நிறுத்து!

**சேகர் :-** *நான் இப்போது என் பேச்சை நிறுத்தி விடலாம்! ஆனால் எதிர்காலத்தில் நடக்கப் போவதை நிறுத்த வேண்டிய உங்கள் கையில் அல்லவா இருக்கிறது! சர்மாவின் அன்புக் கனி நகரத்தில் ஐந்து, பத்து ரூபாய்க்கு ஏலம் போவதை நிறுத்த வேண்டியதை உங்கள் பொறுப்பாக நீங்கள் கருதவில்லையே.*

**சர்மா :-** *சேகர்! உன்னை விரும்பாத நிர்மலாவை, உன்னை விரும்பும்படிச் செய்ய முடியுமா?*

சேகர் :- உடனே முடியும் என்று யார் சொன்னார்கள்? நீர் முயற்சித்தால் நாளடைவில் முடியும்!

சர்மா :- அதற்காகவாவது நீ அவகாசம் கொடுக்க வேண்டாம்?.

[என்று சொல்லிக் கொண்டே சேகரை நெருங்குகிறார்]

தானாகக் கனியாததை தடியால்அடித்துக் கனிய வைக்க முடியாது! ஜமீன்தார் வீட்டுச் சம்பந்தம் இனி ஏற்படப் போவது இல்லை! நிர்மலாவிற்கு, யாராவது ஒரு கணவனைத் தேடித்தான் ஆக வேண்டும்! நீ அவள் அன்பைப் பெறவேண்டியது, உன் சாமர்த்தியத்தைப் பொறுத்து இருக்கிறது. உன் சாமர்த்தியமோ இப்பொழுது துப்பாக்கி முனையில் நிற்கிறது! ஹ ஹ் ஹா!. !

[என்று சிரித்துக் கொண்டு துப்பாக்கியைச் சடாரென பிடுங்கிக் கொள்கிறார்]

சேகர் :- நீ ஒரு அயோக்கியன்!

சர்மா :- சாமர்த்தியம் கைமாறி விட்டதே என்று கலங்குகிறாயா? அதிக நேரம் நீ கலங்கப் போவது இல்லை.

[என்று சொல்லிய படியே சேகரை சுட்டு விடுகிறார்.

[சேகர் விழுந்து விடுகிறான்]

சர்மா :- உன் முடிவிலே தான் என் வாழ்வு ஆரம்பிக்கப் போகிறது! ஒழிந்தது உபத்திரவம்! விட்டது சனியன்!

[என்று சொல்லிக் கொண்டே துப்பாக்கியைக் கீழே போடுகிறார்-அப்போது ராமின் பாட்டுக் குரல் கேட்கிறது. (உத்தமர் போல) சர்மா

பதட்டத்துடன் திரைக்குப்பின் போய் ஒளிந்து கொள்கிறார். ராம் அங்கு வருகிறான். சேகர் இறந்து கிடப்பதைப் பார்க்கிறான். துப்பாக்கியை எடுத்துக் கொள்கிறான். சர்மா பார்க்கிறார்-ஏதோ முடிவுக்கு வந்தவராய் ஓடுகிறார்.

ராம் :- [துப்பாக்கியை கையில் வைத்துக் கொண்டு] கொலை! கொலை!! தற்கொலை!!

[என்று ஏதோ தாறுமாறாகப் பேசுகிறான்- போலீஸ்காரர்கள் ஓடி வருகின்றனர்]

சர்மா :- இதோ! கொலையாளியே இவன் தான் போலிருக்கு! குண்டு சத்தமே இந்தப் பக்கத்திலேயிருந்துதான் வந்தது!...

கான்ஸ் :- குத்தவாளியே துப்பாக்கியோட அங்கே நிக்கிறானே!

ராம் :- ஆம்! நான் தான் குற்றவாளி! என் தந்தையைக் கொன்றவன் நான் தான்! இப்போது சர்மாவைக் கொலை செய்யப் போகிறேன்!!

[என்று சொல்லிக் கொண்டு துப்பாக்கியை நீட்டுகிறான் - போலீஸார் துப்பாக்கியைப் பிடுங்கி அவன் கைகளில் விலங்கை மாட்டி இழுத்துச் செல்கின்றனர்]

## காட்சி-25

இடம் :- **சர்மா வீடு**

[சர்மா உட்கார்ந்திருக்கிறார். ரவி வருகிறான்]

சர்மா :- அடடே! அத்தி பூத்தது போல இருக்கே!

நடக்காதது அல்லவா நடந்து விட்டது. வாங்க. உட்காருங்க. காபி சாப்பிடறீங்களா? நிர்மலா கூட இப்பதான் வெளியே போனா.

ரவி :- கவலைப் படவேண்டாம்; அவள் இங்கு இல்லாமல் இருப்பதே நல்லது தான்! விருந்து சாப்பிட வரவில்லை! பெரியப்பா பரமசிவத்தின் குடும்பத்திற்கு ஏற்பட்ட அபக்கியாதிக்கு, தீராத பழிக்கு, ஆறாப் புண்ணிற்கு மருந்து தேடி வந்திருக்கிறேன்.

சர்மா :- மருந்து தேடுபவர்கள் மருத்துவனிடம் செல்ல வேண்டும்.

ரவி :- விஷமிட்டவனிடமே மாற்று மருந்து இருப்பது இயற்கை. நோயைத் தந்தவனிடமே நோயைத் தீர்க்க நான் வந்துள்ளேன்.

சர்மா :- புரியாத வார்த்தைகளைப் பேசுகிறாய்.

ரவி :- உமக்குப் புரியாத வார்த்தைகள் அல்ல சர்மா! கள்ளிப் பட்டிக் குடும்பத்திற்கு ஒரு நரகத்தை உருவாக்கிய ஒரு விஸ்வகர்மா நீர்! உமக்கு எது புரியவில்லை? காட்டாற்றுப் பாலம் விழுந்தது புரியவில்லையா?

கண்ணியமான பரமசிவம் தற்கொலை புரிந்து கொண்டது புரியவில்லையா? இல்லை அதன் விளைவாக, அவர் மகன் பித்தனாகத் திரிந்து இப்பொழுது, உமது நண்பர் சேகரின் கொலைக் குற்றவாளியாகக் கூண்டிலே ஏற்றப்பட்டு நிற்பது தான் புரிய வில்லையா?

சர்மா :- (சிரித்து) அடுக்கிறீயே சும்மா.

ரவி :- நான் அடுக்க வரவில்லை! அலங்காரமாகப்பேசி, ஆனந்தம் பெற்றுப் போக வரவில்லை. ராமு என் குடும்பத்தைச் சேர்ந்தவன். என் நண்பன். என்

நலத்தைவிட, உம்முடைய நலத்திற்காக அரும்பாடு பட்டவன். தன்னலத்தைத் துறந்து வாழ்ந்தவன். இன்று தான் அறிவையையே இழந்து, தான் கனவிலும் கருதாத ஒரு குற்றத்திற்காகச் சிறை பட்டுக்கிடக்கிறான். ஒரு நிரபராதி உணர்வற்ற சட்டத்தின் பிடிப்பிலே சிக்குண்டு, நிற்கிறான். அவன் சார்பில் நீதி நிலவ வேண்டும். அவனுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற ஒரே விருப்பத்தில்தான் நான் வந்துள்ளேன்.

சர்மா :- ராமு குற்றவாளியா? இல்லையா? என்பதை முடிவு கட்ட வேண்டியது சட்டத்தின் பொறுப்பு.

ரவி :- அந்தச் சட்டம் உம்முடைய சாட்சியத்தை நம்பி இருப்பதால்தான் உம்மிடம் வந்திருக்கிறேன்.

சர்மா :- சட்டப்படி எது உசிதமோ அதைச் செய்ய நான் தயார். ரவி! இந்த விஷயத்தில் நீ இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

ரவி :- பின் யார் எடுத்துக் கொள்வது? விழுந்து போன பாலத்திற்கு ஒரு வாய் இருந்தாலோ, அல்லது இறந்து போன பரமசிவத்திற்கோ, கொல்லப்பட்ட சேகருக்கோ, வாக்குவன்மை ஏற்பட்டால்தான் நான் பேசாமல் இருக்கலாம்; சவங்கள் மனிதர்கள் மூலமாகத்தானே பேச வேண்டியதாக இருக்கிறது!

சர்மா :- சவங்களின் நண்பரே! சவங்கள் என்ன சொல்லுகின்றன?

ரவி :- உன்னைக் கேள் என்று சொல்லுகின்றன! நீர் ஒரு நல்லவன் என்று, உம்மிடம் நான் வர வில்லை! என் நண்பனின் உயிர் உம் கையில் இருப்பதால் சேகரைப் பித்தம் பிடித்த நிலையில் ராமு கொன்றான் என்ற வழக்கிற்கு நீர் முக்கியமான

சாட்சியாக இருப்பதால் நான் உம்மிடம் வந்துள்ளேன்.

**சர்மா :-** (சிரித்துக் கொண்டே) என்னைப் பொய் சாட்சி சொல்லச் சொல்றீயா?

**ரவி :-** குற்றமற்ற ராமு, கோணல் புத்தியுள்ள உமக்குச் செய்துள்ள ஒரு உதவிக்கு நீர் பத்து கோர்ட் ஏறிப் பொய்ச் சாட்சி சொன்னாலும் தகும். ஆனால் அதை நான் கேட்கவில்லை. நியாயமும், தர்மமும் மெலிந்து கிடக்கும் நிலையில் அவைகளுக்குப் பின்னால் மறைந்து கொள்ளக் கூடிய சிறிய உருவம் படைத்தவன் நீரல்ல என்று நான் சொல்லுகிறேன். நெஞ்சிலே ஈரமிருந்தால், உள்ளத்தில் நேர்மை இருந்தால், சிந்தையிலே சிறிதாவது ஞாபகம் இருந்தால், நீர் போலீஸாருக்குக் கொடுத்திருக்கும் வாக்கு மூலம் பொய் என்று உமக்கே புரிந்து போயிருக்கும். பாசி படிந்து போயிருக்கும் உம்முடைய பகுத்தறிவைக் கேட்டுப் பாரும்! சேகரைக் கொல்வதால் ராமுவிற்கு என்ன லாபம்? பித்தம் பிடித்துத் திரிந்த ராமுவை கையிலே துப்பாக்கி வரக் காரணம்?

**சர்மா :-** இந்த ஆராய்ச்சியையெல்லாம் கோர்ட்லே வக்கீல் வச்சு நடத்தேன்.

**ரவி :-** நிச்சயமா நடத்தப் போறேன். உம்முடைய மனம் மாறவில்லை யென்றால்.

**சர்மா :-** நல்லா நடத்து. எனக்கும் உண்மைக் குற்றவாளி யாருன்னு தெரிஞ்சா ரொம்ப நல்லாயிருக்கும்.

**ரவி :-** உண்மைக் குற்றவாளியை நீர் தெரிந்து கொள்ள வேண்டும்! விந்தையிலும் விந்தை! வேடிக்கை! கசாப்புக் கடைக்காரன் கத்தியைப் பார்க்க ஆசைப்படுகிறான்! பெருமாள் கோயில் குருக்கள் புளியோதரையின் நிறம் கேட்கிறார்!

தூக்கு மேடையில் தொங்கும் கயிறு கழுத்தைப் பற்றிய கதை கேட்கிறது! உமக்கா உண்மை குற்றவாளி யார் என்று தெரியாது?

**சர்மா :-** யார்?

**ரவி :-** ஒரே சதித் திட்டத்தை உருவாக்கிய இரண்டு கூட்டாளிகளில் ஒருவன் கொல்லப் பட்டால், அவனைக் கொன்றது வேறு யாராக இருக்க முடியும்? மற்றொரு குற்றவாளியைத் தவிர! சதிகாரர்களின் உறவு சந்தர்ப்பம் முடிந்ததும் சிதைய வேண்டியதுதானே?

**சர்மா :-** நேரடியாகவே தாக்க ஆரம்பிச்சிட்டியே.

**ரவி :-** தாக்க வரவில்லை நான்! தவர்க்க வந்திருக்கிறேன். இப்போது மாறிப் போயிருக்கிற சர்மாவை நினைக்காமல், நான் அன்று கண்ட சர்மாவை நினைத்து வந்திருக்கிறேன். அன்பின் உருவமாய், ஆனந்தத்தின் இருப்பிடமாய், நட்பின் நல் விடுதியாய் என் எழில் நிர்மலாவின் இனிய சித்தப்பாவை நினைவுப்படுத்திக் கொண்டு இங்கு வந்துள்ளேன். அவரிடம் நான் கேட்கும் வரம் இதுதான்! பட்ட மரம் துளிர்க்க வேண்டும்! பாழ்பட்டுப் போன குடும்பம் தழைக்க வேண்டும்! நிரபராதி ராமுவிற்கு நீர் உயிர்ப்பிச்சை அளிக்க வேண்டும்!

**சர்மா :-** அப்ப நான் மாட்டிக் கொள்ள வேண்டும். ஹு!

**ரவி :-** பாருங்கள்! நீங்களே ஒப்புக் கொண்டு விட்டீர்கள்!

**சர்மா :-** உன் முன்னிலையில் ஒப்புக் கொண்டால் என்ன?... உன் வார்த்தை அம்பலம் ஏறுமா?

**ரவி :-** என் வார்த்தை அம்பலம் ஏற வேண்டாம்! உங்கள் மனத்தை மாற்றினால் போதும்!

சர்மா :- எந்த சக்தியும் என் மனத்தை மாற்ற முடியாது. நீ பார்க்க வந்த சர்மா இறந்து விட்டான்! வாழ்க்கை ஓர் விளையாட்டு வீடு! அதில் அழகும் அன்பும். தாண்டவமாட வேண்டும் என்று நம்பிய சர்மா இறந்து விட்டான்! வாழ்க்கைப் பாதையிலே சிரித்துச் செல்ல வேண்டும்! வந்தவரை உபசரிக்க வேண்டும்! பணம் பெரிதல்ல! ஒழுக்கம் பெரிது! பண்பு பெரிது! என்று நம்பிய சர்மா மடிந்து விட்டான். நண்பர்களின் நல்லுறவு, நன்றி மறவாமை, இன்னும் ஏடுகளிலே புகட்டப் பட்ட பல லட்சியங்களில் அசையாத நம்பிக்கை வைத் திருந்த அந்தப் பர்மா சர்மா காலமாகி விட்டான். இப்போது வாழும் சர்மாவிற்குச் சத்தியமும் ஓர் சறுக்குப்பாறை நேர்மை நைந்துபோன ஒரு சரக்கு. நல்லுணர்ச்சியெல்லாம் கால வெள்ளத்திலே நம்மைக் கவிழ்த்து விடும் ஓட்டைப் படகுகள்! எங்கும் பரந்து நிற்பது, எல்லாமாகி நிற்பது, எல்லாவற்றிற்கும் மேலாகி நிற்பது, உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் நடத்தி வைப்பது, ஆண்டி கள் தேடுவது, அரசர்கள் தேடுவது எது தெரியுமா? பணம்! பணம்! பணம்!! அதுமட்டுமா? உலகத்தில் போரை நடத்துவது, படைகளுக்கு வீரத்தை ஊட்டு வது, குரங்கு போன்ற பல கலைகளை வளர்ப்பது, விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அஸ்திவாரமாகி நிற்பது, புலவர்களைப் பல்லிளிக்கச் செய்வது, மந்திரி சபை களை ஆக்குவது, அழிப்பது ஆண்டவன் வீற்றி ருக்கும், தேவாலயத் திருப்பணிகளுக்கும், உதவியாக இருந்தது ஆண்டவனையும் உள்ளம் மகிழச் செய்வது எது தெரியுமா? பணம், பணம்! பணம்!! ''காசே கடவுள்'' பாங்கே கோயில்.

[ நிர்மலா வருகிறாள் ]

நிர்மலா :- சித்தப்பா! யாரோட இப்படிச் சத்தம் போட்டுப் பேசிக் கிட்டு இருக்கீங்க?? ஓ, ரவியா? ஆச்சரியமாயிருக்கே!

[என்று ரவியைப் பார்க்கிறாள்]

பேப்பரை வாங்கிப் பார்த்தான். ராமு சேகரைக் கொன்னுட்டான்னு போட்டிருக்கே. அதிலே நீங்க தான் போலீஸ் தரப்புச் சாட்சியாமே? எனக்கு ஒண்ணுமே புரியலியே...ராமுவிற்கு எதிராகவாச் சாட்சி சொல்லப் போறீங்க?

(ரவியைப் பார்த்து)

நம்ம வீட்டிற்கு வராதவங்க வந்து இருக்காங்க! என்ன சித்தப்பா! விஷயம் புரியும் படியாச் சொல்லுங்க.

ரவி :- நிர்மலா! பஞ்ச தந்திரக் கதை படிச்சிருந்தா உனக்குப் புரியும்.

நிர்மலா :- அப்போ கல்யாணம் வேண்டாம்னு போனவர் இப்போ கதை சொல்ல வந்திருக்கிறார் சித்தப்பா.

சர்மா :- நீ உள்ளே போம்மா. அப்புறமா நான் எல்லாம் விளக்கமாச் சொல்றேன்.

ரவி :- சர்மா! பழைய காலத்திலே நாங்க சிநேகிதமா இருந்ததை உத்தேசிச்சாவது நிர்மலா இந்தக் கதையைக் கேட்டுட்டுப் போகட்டும். ஒரு ஊரில் ஒரு காடு, அந்தக் காட்டிலே ஒரு குள்ள நரி— பசியாலே வாடிக்கிட்டு இருந்தது. ஒரு கொழுத்த பசுமாடும் ஒரு கன்றுக்குட்டியும் அங்கே மேய்ந்துக் கிட்டு இருந்தது! குள்ள நரிக்கு மாட்டை அடிச்சுச் சாப்பிடணும்னு ஆசை! ஆனா. அது நரியின் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயமாப் போயிடுச்சு!

சர்மா :- ரவி!

ரவி :- நரி என்ன செய்தது என்றால், அதே காட்டில் ஒரு கிழட்டுச் சிங்கம் கண் போய் ஒரு குகையில் படுத்துக்கிட்டு இருந்தது! மொதல்லே அந்த நரி அந்தச் சிங்கத்தைச் சிநேகிதம் பண்ணிக்கிட்டது! அதுக்கு அப்புறம் அந்தப் பசுவின் கன்றைச் சந்திச்சு-கன்றின் உதவி கொண்டு, தாய்ப் பசுவை, சிநேகிதம் பண்ணிக்கிடுச்சு. மெள்ள, மெள்ள சாமர்த்தியமாப் பேசி பசுவையும், கன்றையும், சிங்கம் இருந்த குகைக்குக் கொண்டு வந்தது!

நிர்மலா :: அப்புறம்?

ரவி :- கிழட்டுச் சிங்கம் கன்று மேலே பாய்ந்தது! தாய் பசு சிங்கத்தோட போரிட்டது. போரின் முடிவில் சிங்கம் களைச்சுப் போய் விழுந்திடுச்சு! பசுவும், கன்றுக்குட்டியும் இறந்து போய் விட்டன! கடைசி யிலே மாமிசத்தைச் சாப்பிட்டது சிங்கமில்லை. வஞ்சக நரி!

நிர்மலா :- இது ஒரு புதுக் கதையாயில்லே இருக்குது.

ரவி :- உங்க சித்தப்பா ஒரு புதுக் கோயிலும் கட்டி, அதிலே ஒரு 'புதுக் கடவுளும் வச்சிருக்கார். நான் ஒரு புதுக் கதைதானே தயார் பண்ணியிருக்கேன்!

சர்மா :- நிர்மலா! நீ உள்ளே போ!

[நிர்மலா சாவதானமாகப் போகிறாள்]

ரவி :- நீங்க புதிதாக உருவாக்கியிருக்கும், பண வழி பாட்டை இந்த அசுர மதத்தை, உங்கள் வளர்ப்புப் பெண்ணிற்கு இன்னும் புகட்ட வில்லையா?

சர்மா :- என் அசுரமதம்! அசுரமதம்!! தர்மத்தின் உறைவாளாக இருந்து போராடுகிறாயே இன்று... அன்று...நான் நிர்மலாவின் பணத்தை இழந்து

பரிதவிக்கும் போது, நிர்மலாவை நிராகரித்தாயே அப்போது உன் நீதி, நேர்மை, தர்மம், எல்லாம் எங்கு போய் ஒளிந்தன? பட்டமரம் துளிர்க்க வேண்டும் என்று சிங்கநாதம் செய்கிறாயே இன்று.. அன்று நான் பட்டமரமாக நிற்கையில் உன் சிங்கக் குரல் ஏன் எழும்ப வில்லை உன் காதலியின் சார்பில்? அன்று சகோதரியின் சேலைக்குப்பின் பதுங்கிய உன் வீரம் இன்று மட்டும் பெருக்கெடுத்து ஓடுகிறதே! அன்று முதல் இன்று வரை உன்னையே நினைத்து உருகும் என் நிர்மலாவின் வாழ்வைப் பாலைவனமாக்கிய அந்த உன் கருணையற்ற கடிதம் வந்த அன்று தான் நான் அசுரமதத்தைக் கடைப் பிடித்தேன்! என் கொள்கை மாற்றத்திற்குக் காரணம் யார் தெரியுமா? சிறு புழுவை நசுக்கத் தயங்கியவனை இன்று கொலை புரியும் அளவிற்குக் கொண்டு வந்தது யார் தெரியுமா? குழந்தையுள்ளத் தோடு குதூகலமாக வாழ்ந்து வந்த என்னைப் பணத்துக்காகக் கோரச் செயல்கள் புரியும்படித் தூண்டியது யார் தெரியுமா? பணம் தான்! நிலையான பொருள் என்று நீதியை எனக்குப் போதித்தது யார் தெரியுமா?—நீ...உன் செயல்!...

ரவி :- போதும் சர்மா! போதும்! நிர்மலாவை உதறி விட்டு, வேறு யாரையேனும் நான் மணம் புரிந்து கொண்டேனா? நிர்மலாவைத் தான் என்னால் மறக்க முடியுமா? சந்தர்ப்பத்தால் இருவர் உறவில் ஏற்பட்ட கோளாரைச் சந்தித்துப் பேசி, சரி செய்து கொள்ள முடியாதா? அந்தப் பிரிவைக் காலம் தான் மாற்றியிருக்காதா? ஆனால் அந்தச் சிறு பிழைக் காகவா இவ்வளவு பெரிய சதித் திட்டம்? என் பிழைக்காக ராமு வருந்த வேண்டுமா? பரமசிவம் உயிர்விட வேண்டுமா? இல்லை.. பாலம் விழுந்த நிலையில் அந்தப் பஸ்ஸில் போய்க் கொண்டிருந்த

முப்பது குழந்தைகள் தான் இறக்க வேண்டுமா? சர்மா சிந்தித்துப் பாரும்! இந்தப் பாலத்திலே நீர் சம்பாதித்திருப்பது ஒரு லட்சம் ரூபாய் தான் இருக்கும்! அதற்கு நீங்கள் கொடுத்த விலை என்ன? அன்னமிட்ட வீட்டில் கன்ன மிட்டிருக்கிறீர்கள். நம்பிய நல்லவனை நட்டாற்றில் தள்ளி விட்டிருக்கிறீர்கள்! இருநூறு வருஷங்களாக, மாசில்லா மாணிக்கமாக, மங்காப் புகழோடு வாழ்ந்த பரமசிவத்தின் குடும்பத்திற்குத் துடைக்க முடியாத ஒரு அபகீர்த்தியைத் தேடிக் கொடுத்திருக்கிறீர்கள். பரமசிவம், ராமு விஷயத்தை விட்டுத் தள்ளுங்கள்! பாலம் விழுந்த போது செங்கல்லும், சுண்ணாம்பும் மட்டும் விழவில்லை! முப்பது உயிர்கள் விழுந்தன! முப்பது வீடுகளில் கோரமான இடி விழுந்தது! நீங்கள் சேர்த்து இருக்கும் ஒவ்வொரு ரூபாயையும் ரத்தத்தில் தோய்த்து எடுத்து இருக்கிறீர்கள்!

சர்மா :- நிறுத்துடா! நான் பணம் சேர்த்தது என் சுக வாழ்விற்கா? இன்னும் ஐந்து அல்லது பத்து வருஷங்கள் நான் உயிரோடு இருப்பது அதிகம்! நான் போன பின், இந்தக் கண்ணற்ற கருணையற்ற உலகிலே நிர்மலாவின் நிலை என்ன? அவள் வாழ்க்கை வளம் பெற முப்பது குடும்பங்கள் என்ன! மூவாயிரம் குடும்பங்களை அழிக்கத் தயார்! எந்த வெற்றியில் தான் அசத்தியம் அடிப்படையாக இல்லை! பெரிய சாம்ராஜ்யங்களை ஸ்தாபித்தவர்கள், பெரிய கோடீஸ்வரர்கள், இவர்கள் வாழ்க்கையில் எல்லாம் சத்தியத்தை விளக்கு வைத்துத் தேடினாலும் கிடைக்காது! என் லட்சியம் நிர்மலாவின் சந்தோஷம்! நிர்மலாவின் எதிர் காலம்! அதற்காக எந்தக் குற்றமும் புரியத் தயார்!

நிர்மலா :- ஐயோ! சித்தப்பா! எனக்காகவா இவ்வளவும் செய்தீர்கள்?

சர்மா :- நீ உள்ளே போம்மா!

நிர்மலா:- என்னால் நம்ப முடியவில்லையே சித்தப்பா! நீங்கள் இவ்வளவு பெரிய அயோக்கியர் என்று!

சர்மா :- நிர்மலா!

நிர்மலா :- அவருக்காக நான் பரிந்து பேசவில்லை. உங்கள்மீது எனக்கு வெறுப்புமில்லை. நீங்கள் அளித்த ஆதரவிற்கு இதோ என் அஞ்சலி. நீங்கள் காட்டிய அன்பிற்கு என் வந்தனம். ஆனால் உங்கள் அரக்கச் செயலை நான் கண்டிக்காமல் இருக்க முடியாது. என்னைக் கேட்காமல் என் பொருட்டு, நீங்கள் செய்திருக்கும் பாதகத்தை நான் சுமக்க வேண்டியவள் ஆகிறேன்.

சர்மா :- இவன் முன்னிலையிலா நீ இப்படிப் பேச வேண்டும்?

நிர்மலா :- இது உலகத்தைப் பொறுத்த பொது விஷயம். உலகத்தின் முன்னிலையிலே பேச வேண்டியதுதானே! பணம் இல்லாமல் நாம் ஏழையாக இருந்திருக்கலாமே! வேண்டியவர்கள் தெரியாதவர் இவர்களைக் கொன்றா நாம் சந்தோஷமாக இருக்க வேண்டும்? பாலத்துக்குப் பலியானவர்களின் பிணங்கள் என் காலடியில் கிடப்பதாகப் பிரமை ஏற்படுகிறது. அவர்கள் எனக்காகப் பலியானவர்கள் தானே? பல பேர்களின் சமாதியின் மேலா நீங்கள் எனக்கு மாளிகை கட்ட வேண்டும்? உயிர் கொடுக்கும் தாய்மை உணர்ச்சி நிறைந்த பெண் குலத்தைச் சேர்ந்தவள் நான்! உயிர் குடிக்கும் பைசாசமல்ல! பல நூறு வருடங்களாகப் பல வேறு சூழ்நிலையில், மாசுபடாமல் இந்த நாட்டின் உன்னத தர்மத்திற்கு உயிர் கொடுத்து வந்த பெண் குலத்தைச் சேர்ந்தவள் நான்! கௌதம புத்தரிலிருந்து, பரமஹம்ச காந்தியடிகள் வரை "அன்பே

அறம்' என்ற அழிவில்லாத தத்துவத்தைப்பாலோடு புகட்டிய தாய்க்குலத்தைச் சார்ந்தவள் நான். அன்று முதல் இன்று வரை அன்புப் பாதையிலே நடக்கப் பழகியவளைத் திடீரென்று எப்படி மனதை மாற்றிக் கொள்ள முடியும்?

சர்மா :- நிர்மலா! நீ என்னை என்னதான் செய்யச் சொல்லுகிறாய்?

ஏவி :- உம் குற்றத்தை நீர் ஒப்புக் கொள்ள வேண்டும்.

[சர்மா அவளை முறைத்துப் பார்க்கிறார்]

நிர்மலா :- நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிச் சொல்ல எனக்கு எந்தவித உரிமையும் இல்லை சித்தப்பா! அதைப்பற்றி நீங்கள் என்னைக் கேட்க வேண்டாம். என் பொருட்டு நீங்கள் செய்த பாபத்தை நான்தான் கழுவ வேண்டும். எனக்காகப் பலர் ரத்தத்தை நீங்கள் சிந்தி இருக்கிறீர்கள். அதற்கு என் ரத்தத்தைக் கொடுத்துத் தான் பாப மன்னிப்புத் தேட முடியும்.

[என்று மறைவிலிருந்த கத்தியை எடுத்துக் குத்திக் கொள்கிறாள்—சர்மா தடுக்கிறார்]

சர்மா :- என் கண்ணே! நிர்மலா! நீ போய் நான் வாழ வேண்டுமா? நான் என் குற்றத்தை ஒப்புக் கொள் கிறேன் நிர்மலா! (போலீஸார் நுழைகின்றனர். எல்லோரும் திகைப் போடு போலீஸைப் பார்க் கின்றனர்)

சப்-இன்:- ராமுவிற்குப் பித்தம் தெளிந்து விட்டது, உண்மைக் குற்றவாளி நீங்கள் தான் என்று புரிந்து கொண்டோம். துப்பாக்கியைக் கைரேகைப் பரிசோதனைக்கு அனுப்பி யிருக்கிறோம்.

சர்மா :- அதெற்கெல்லாம் தேவையில்லை இன்ஸ்பெக் டர். ராமு நிரபராதி! நான் குற்றவாளி என்பதை

நானே ஒப்புக் கொள்கிறேன். நிர்மலா நான் வருகிறேன்.

**நிர்மலா :-** சித்தப்பா! என்னை விட்டுப் பிரியப் போகிறீர்களா?

**சர்மா :-** உன் நன்மைக்காக உன்னை விட்டுப் பிரியப் போகிறேன். மரணத்தின் மடியிலேதான் புது வாழ்வு துவங்கும். என் முடிவிலே உங்கள் இருவர் வாழ்வு ஆரம்பமாகட்டும்.

[என்று ரவியைப் பார்க்க) நிர்மலா அழுதபடி சர்மாவின் கைகளைப் பிடித்துக் கொள்கிறாள் - அவள் கண்களைத் துடைத்து விட்டு]

**சர்மா :-** என் உடலுக்கு என்ன நேர்ந்தாலும் என்னுடைய ஆத்மா உன்னைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டே இருக்கும். கவலைப்படாதே நிர்மலா. எனக்குப் பிறக்காத ஒரு மகளாக நீ இருந்தாய், உனக்குப் பிறந்த மகனாய் ஒரு நாள் வீடு திரும்புவேன்.

நிறைந்தது